
KALAIKESARI

# கலைக் கேசரி

CULTURE • HERITAGE • TRADITION • EVENTS • FASHION • INTERVIEWS • ENTERTAINMENT

VOLUME : 03 ISSUE : 06 Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 127 / News / 2012



கிளிநொச்சியில்
வெளிச்சத்திற்கு வராத
சில வரலாற்று உண்மைகள்


2000 வருடங்கள்
பழைமையான
திருவாரூர் திருக்கோயில்

www.kalaikesari.com / JUNE 2012

ISSN 2012-6824


| | | |
|---|---|---|
| INDIA..............IN₹ 100.00 | CANADA........CAN$ 10.00 | USA..........US$ 10.00 |
| SRI LANKA....SLR 200.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK.............GB£ 6.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS.............CHF 10.00 | EUROPE..EU€ 7.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1951-2011
60 Glittering Years
Pure | Timeless



Lalitha
fine jewellery since 1951

105, Sea Street, Colombo 11. T: +94 11 232 3691 / 247 0682 F: +94 11 243 6343
442, RA De Mel Mawatha, Kollupitiya, Colombo 03. T: +94 11 257 7451 / 2 F: +94 11 257 7454

info@lalithajewellers.lk | www.lalithajewellers.lk

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org













## அட்டைப்படம் :

ரிம்னாவெளி பாறை வளைவு

# உள்ளடக்கம்


**18** வித்தைகளுக்கு அதிபதி வியாழன்

**26** கதிர்காமம் சமாது மட பட்டயம்

**30** இலங்கை தமிழ் மாதர் சங்கமும் கலாலயமும்

**46** யாழ்ப்பாணத்தில் ஆரம்பகால நூலகங்கள்

**62** தமிழர் பழமொழிகளில் மருத்துவக் குறிப்புகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் பக்கம்



## 'பாதுகாக்கப்பட வேண்டிய புராதன அருஞ் செல்வங்கள்'

கலைக்கேசரி வாசகர்களுக்கு வணக்கம். நலந்தானே !

அளவிடற்கரிய புராதன அரும்பெரும் செல்வங்கள் பூமித் தாயின் மடியில் அமுங்கிக் கிடக்கின்றன. அகழ்வாய்வுகளின் மூலம் அவற்றினை வெளிக் கொணர்ந்து ஆராய்கையில் பல வேளைகளில் ஆச்சரியமான புராதன மனித வரலாற்றுத் தடயங்கள், சரித்திர ஆராச்சியாளர்களுக்குக் கிடைக்கின்றன. அவை பண்டைய மக்களின் வாழ்வியலை, சிறப்பை, மறைந்தும், மறைக்கப்பட்டும் தூர்ந்துபோன உண்மைகளை வெளிச்சத்துக்கு கொண்டு வருகின்றன. மென்மேலும் நாகரீகமான, பண்பாடான வாழ்வுக்கு அவை தூண்டுகின்றன.


இஸ்ரேல் நாட்டின் தென்பகுதியில், ரிம்னா பள்ளத்தாக்குப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியில், உலகின் முதன் முதலாக மேற்கொள்ளப்பட்ட செம்பு உலோக உற்பத்திச் சுரங்க சான்றாதாரங்களும் அதனுடன் தொடர்புபட்ட உலோகப் பாவனைப் பண்பாடுகளும் குறித்த விபரத்தை இவ்விதழின் அட்டைப்படக் கட்டுரை விளக்குகிறது.

இவ்விடத்தில் நமது நாட்டில், அரும்பெரும் புராதனச் செல்வங்கள் கொள்ளையடிக்கப்பட்டு வருவதையும் அவற்றைத் தடுக்க போதிய நடவடிக்கைகள் எடுக்கப்படாத காரணத்தால் தொடர்ந்தும் அம்மாதிரியான விஷம வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதையும் நாம் கருத்தில் கொள்ளாமல் இருக்கமுடியாது. நாட்டின் பெருமைபேசும் புராதன சின்னங்கள் என்றென்றும் மாசுபடாமல் பாதுகாக்கப்படவேண்டியது அவசியம் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றோம்.

அத்துடன் தமிழின் தொன்மையையும் செழுமையையும் ஆய்வுகளின் மூலம் மேலும் விளக்கி, தமிழ் மொழியையும் பண்பாட்டையும், எதிர்காலத்தில் செவ்வனே பேணும் பொறுப்பைக் கொண்டிருக்கும், இன்றைய இளம் சமுதாயத்தினருக்கு எடுத்துக் கூறும் ஒரு முயற்சியாக, கொழும்பு தமிழ்ச் சங்கம் இம்மாதம் நடத்தும் உலகத் தமிழ் இலக்கிய விழா சிறப்புறவும் கலைக்கேசரி தனது வாழ்த்தினைத் தெரிவிக்கின்றது.

நன்றி

வணக்கம்.



**June, 2012**


**PUBLISHER**
Express Newspapers (Cey) (Pvt) Ltd.
185, Grandpass Road, Colombo 14,
Sri Lanka.
T.P. +94 11 5234338
www.kalaikesari.com

**EDITOR**
Annalaksmy Rajadurai
editor@kalaikesari.com

**SUB EDITOR**
Bastiampillai Johnsan
editor@kalaikesari.com

**MEDIA CO-ORDINATOR**
Pragash Umachandraa

**CONTRIBUTORS**
Prof. S. Sivalingaraja
Prof. P. Pushparatnam
Prof. Saba Jeyarasa
Dr. Viviyan Sathyaseelan
Mrs. Vasantha Vaithyanathan
Mrs. Pathma Somakanthan
K. Thangeswary
Mrs. Shamila Ranjithkumar
Ms. Subashini Pathmanathan
Balamurugan - Chennai
Mrs. Maithily Visagaroopan

**PHOTOS**
Joy Jayakumar
S. Sujeewakumar
J. H. Mirunalan

**LAYOUT**
S. A. Eswaran

**ICT**
S. T. Thayalan

**ADVERTISING**
A. Praveen
marketing@virakesari.lk

**CIRCULATION**
K. Dilip Kumar

**SUBSCRIPTIONS**
Sathya Suresh
subscription@kalaikesari.lk

**PRODUCTION**
L. A. D. Joseph

ISSN 2012 - 6824



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## யாழ்ப்பாணப் பண்பாடு:

# மறந்தவையும் மறைந்தவையும்

பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா

(சென்ற இதழ் தொடர்ச்சி)

குழந்தை பிறந்து 31 ஆவது நாள் நடைபெறும் சடங்கைத் 'துடக்குக்கழிவு' என்று அழைக்கும் வழக்காறே மிக நீண்ட காலமாக நிலவி வந்தது. இன்றும் சிறுபான்மையாகக் கிராமங்களிலே இச்சொற்பிரயோகம் உண்டு. இன்று இச்சடங்கை 'முப்பத்தொன்று' என்றே அழைக்கின்றனர்.

குழந்தையின் பிறப்போடொட்டிய பிரதானமான முதற் சடங்காக முப்பத்தொன்றே இன்று கொண்டாடப் படுகின்றது. சில காலத்திற்கு முன்னர் குழந்தை பிறந்து துடக்குக்கழிவு என்னும் 31 ஆவது நாள் (நிகழ்வு) சடங்கிற்காக இரண்டு - மூன்று நாட்களுக்கு முன்னரே உறவினர்கள் ஒன்று கூடிவிடுவார்கள். வீடு மெழுகுதல், வேலியடைத்தல், சில இடங்களில் வெள்ளையடித்தல் (இப்போது வீடு கழுவி மஞ்சள் நீர் தெளித்தல்.), பாவித்த சட்டி, பானை (இவை மண் பாத்திரங்கள்) பெட்டி, பாய், கடகம், தலையணை, பழந்துணி என்பவற்றை அப்புறப்படுத்துதல் (இதனைக் கழித்தல் என்பர்.) முதலான கைங்கரியங்கள் நடைபெறும். மண் வீடானால் சாண நீர் தெளிப்பார்கள். கல் வீடானால் மஞ்சள் நீர் தெளிப்பார்கள்.

31 ஆம் நாள் காலையில் தாயையும் பிள்ளையையும் முழுக வார்த்தல் முக்கியமானதாகும். தாயின் தலைக்கு அவித்த தேசிக்காயை வைத்து முழுக வார்ப்பர். அக்காலத்தில் குழந்தைக்கு முடி இறக்குதலும் (தலை மையிர் வழித்தல்.) 31 ஆம் நாளிலேயே நடைபெறும். குடும்பத்திற்கு உரித்தான சவரத் தொழிலாளி அதிகாலையிலேயே பிரசன்னமாகிவிடுவார். குழந்தையைத் தாய்மாமன் அல்லது பேரன் மடியிலே வைத்திருக்கக் குழந்தைக்கு முடி இறக்கப்படும். மிகவும் அனுபவம் வாய்ந்த கைதேர்ந்த தொழிலாளியே இம்முடி இறக்கும் பணியை மேற்கொள்வார். கோயில்களுக்கு நேர்த்தி வைத்து விட்டு ஐந்தாறு வயதுவரை முடி இறக்காது இருந்த காலங்களும் உண்டு.

முடி இறக்குவதற்கு நேர்த்தி வைக்கும் ஆலயங்களுள் நயினாதீவு - நாகபூசணி அம்மன் ஆலயமே முதலிடம் பெறுகின்றது எனலாம். வடமராட்சிப் பகுதியில் உள்ளோர் பெரும்பாலும் அக்காலத்தில் வல்லிபுரம் ஆழ்வார் ஆலயத்திலேயே முடி இறக்குவார்கள். இக்கட்டுரை ஆசிரியருக்கும் வல்லிபுரம் ஆழ்வார் ஆலயத்திலேயே முடி இறக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. முடி இறக்கிய குழந்தைக்கு வெந்நீரில் அவித்த செவ்வரத்தம் பூ, செவ்வரத்தம் இலை, கறுத்தப்பூக் கொடிப்பூ, இலை முதலானவற்றை அரைத்துத் தலையிலே வைத்து முழுக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்ப்பர். முழுகிய பின் பிள்ளைக்குப் புத்தாடை அணிவித்து, ஆபரணங்களும் அணிவிப்பர். குறிப்பாக 'ஐம்படைத்தாலி' என அழைக்கப்படும் பஞ்சாயுதமும் சங்கிலியும் அணிவிப்பர். பொன்னினால் ஆபரணம் அணிய வசதியற்றவர்கள் செம்பு, வெள்ளி முதலியவற்றாலான ஆபரணங்களை அணிவிப்பர். பொன், வெள்ளி இவற்றிலே அரைஞாண் கொடி கட்டுவர். வசதி குறைந்தவர்கள் கறுத்தக் கயிற்றினை (இதற்கென்றே உள்ளது.) அரையிலே கட்டுவர். புலிப்பல், புலிநகம் முதலியவற்றை ஆபரணங்களிற் கோர்த்துக் கட்டுவர். இப்பழக்கம் பண்டைத் தமிழ் மக்களின் வாழ்வியலின் தொடர்ச்சி எனலாம். இந்த வழக்கம் கிராமங்களில் இன்றும் சிறுபான்மையாக உண்டு.

குழந்தை மாத்திரமின்றித் தாயும் புத்தாடை புனைவது வழக்கம். குழந்தைக்கு 31 ஆவது நாள் காது குத்தும் வழக்கமும் இருந்தது. இற்றைக்கு அரை நூற்றாண்டிற்கு முன்னர் ஆண் பிள்ளைகளுக்கும் காது குத்தும் வழக்கம் இருந்தது. இப்பொழுது இப்பழக்கம் மறைந்து விட்டது மாத்திரமன்றி மாறியும் விட்டது. தற்காலத்தில் 31 ஆவது நாள் காது குத்தும் வழக்கம் மிக அருகி விட்டது. பஞ்சாங்கம் குறிப்பிடும் மாதங்களிலேயே தற்காலம் காது குத்தும் வழக்கம் நிலை பெற்றுள்ளது. இக்காலத்திலே காது குத்துவதற்குப் பொருத்தமான நாளாகத் தைப்பூசத் திருநாளையே கொள்கின்றனர். தமிழ் மக்களின் வாழ்வியலிற் குறிப்பாக மேற்தட்டு மக்களின் வாழ்வியலிற் பாரம்பரியச் சடங்காசாரங்களைப் பஞ்சாங்கம் பெரிதளவிற்குப் பாதித்துள்ளது. இதற்குக் குழந்தை பிறந்த 31 ஆவது நாட் சடங்குகளும் விதிவிலக்கல்ல.

துடக்குக் கழிவுக்குக் கோயிற்குருக்கள் வந்து புண்ணியதானம் செய்வார். அவர் தரும் புனிதநீர் வீடு, வளவு, ஆட்கள் அனைவருக்கும் தெளிக்கப்பட்ட பின்னரே துடக்குப் பூரணமாகக் கழிந்ததாக கொள்ளும் வழக்கமும் உண்டு.

31 ஆவது நாட்சடங்கின் மிகப் பிரதானமான விடயமாகப் பெரும்பாலான கிராமத்து மக்கள் இரண்டு விடயங்களைக் கருத்திலே கொள்வர். ஒன்று: பிள்ளைக்குத் தொட்டில் கட்டுதல். இரண்டு: விருந்துபசாரம். மிக நீண்ட காலமாக 31 ஆவது நாள் தொட்டில் கட்டும் வழக்கம் இருந்து வருகின்றது. தாய் மாமனே தொட்டில் கட்ட வேண்டும் என்ற எழுதாவிதி இன்றும் உள்ளது. தமிழ் மக்களின் வாழ்வியலே தாய்மாமனின் வகிபாகம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. தாய்மாமனே அக்காலக் குழுநிலைச் சமூகக் குடும்ப அமைப்பில் தலைவனாக விளங்கினான். மாமனை 'அம்மான்' என அழைக்கும் வழக்காறு மிக அண்மைக்காலம் வரை இருந்தது. 'அம்மான்' என்ற சொல்லுக்கு 'தலைவன்' என்பதும் பொருள். இந்த இடத்திலே ''வீரட்டானத்துறை அம்மானே'' என்ற







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவாரத் தொடரையும் நினைவு கூரலாம். அம்மான் என்ற சொற்பயன்பாடு பற்றி ஏலவே 'உறவுமுறைச் சொற்கள்' என்ற கட்டுரையிலே குறிப்பிட்டுள்ளோம்.

தாய்மாமன் தொட்டிலைக் கட்டித் தொட்டிலினுள்ளே பிள்ளையைக் கிடத்தும் போது காப்பு, சங்கிலி முதலியவற்றை அணிவதும் உண்டு. வசதிக்கேற்ப பணமோ, பொருளோ அன்பளிப்பாக வழங்குவர். தற்காலத்துத் தொட்டில்கள் போல அக்காலத்துத் தொட்டில்கள் இல்லை. பெரும்பாலும் கயிற்றினால் பின்னப்பட்ட அடிப்பாகத்தைக் கொண்டவையாகவே இருக்கும். வீட்டு வளையிலோ அல்லது கை மரத்திலோதான் தொட்டிலைக் கட்டுவார்கள். தொட்டிலின் அடிப்பாகத்திற்கு தடுக்கு என்று அழைக்கப்படும் குறும் ஓலைப்பாயைப் போட்டு அதற்கு மேல் பழஞ் சேலையொன்றைப் போட்டே பிள்ளையைப் படுக்க வைத்துத் தொட்டிலை ஆட்டுவார்கள்.

தாய், தகப்பன், பேரன், பேத்தி, உறவினர்கள் எனப் பலரும் தொட்டிலை அசைத்து ஆட்டுவர். குழந்தைக்கு அன்பளிப்பு பொருட்களையும் உறவினர்கள் வழங்குவர்.

நாட்டார் பாடல்களிலே தாலாட்டுப் பாடல்களுக்குச் சிறப்பானதோர் முக்கியத்துவம் உண்டு. தாயின் மனநிலை, குடும்ப உறவுகளின் பற்றுப் பாசப் பின்னணி, எதிர்பார்ப்புக்கள் முதலானவை இத்தாலாட்டுப் பாடல்களிலே இடம்பெறுவது வழக்கமாகும். நவீன ஆய்வாளர்களும் குழந்தைக்கு ரா, ரா, ரி, ரி முதலான ஓசைகள் விருப்பதற்குரியன என்று கூறுகின்றனர். இந்த இடத்திலே இக்கட்டுரையாசிரியர் இளமைக் காலத்திலே கேட்ட சில தாலாட்டுப் பாடல்களைக் குறிப்பிடுவது நலம்.

**ஆராரோ, ஆரிரரோ**
**ஆராரோ, ஆரிரரோ...**

எனத் தொடங்கி 31 ஆம் நாள் சடங்கில் கணவனுக்கும் சகோதரனுக்கும் ஏற்பட்ட பிணக்கைப் பின்வருந் தாலாட்டாகத் தாய் பாடுகிறாள்.

**பச்சை இலுப்பை வெட்டிப்**
**பால் வடியத் தொட்டில் கட்டித்**
**தொட்டிலுமோ பொன்னாலை**
**தம்பிக்குத்**
**தொடுகயிறோ முத்தாலே**
**தொட்டில் கட்ட வந்த அம்மான்**
**பட்டினியாய் போறானாம்.**
**பட்டுடுத்த மாமி பசியோடை போறாளாம்**
**ஆராரோ, ஆரிரரோ...**

எனப்பாடுவாள். அம்மான், மாமி என்ற குடும்பப் பிணைப்பு சமூக இருப்பிலே பெறும் முக்கியத்துவத்தினைத் தாலாட்டுப் பாடல்கள் சுட்டி நிற்கின்றன. சகோதரன் சாப்பிடாமல் போவதைத் தாலாட்டினூடு சொல்லிக் குடும்ப உறவை மீண்டும் தொடர வழிவகுத்தமை குறிப்பிடத்தக்கது. இத்தகைய தாலாட்டுப் பாடல்கள் பல தமிழ் மக்கள் மத்தியிலே வழங்கி வந்துள்ளன. தாயின் குடும்பப் பின்னணி மாத்திரமன்றி அவளின் உளவியலும் உணர்வுகளும் இத்தாலாட்டுப் பாடல்களிலே பதிவாகியுள்ளமையைச் சுட்டிக் காட்டலாம். கணவனின் பெருமையை, சிறப்பைத் தாலாட்டுப் பாடல்களினூடு குழந்தைக்குச் சொல்வது போல உறவினர்களுக்குச் சொல்வதையும் அவதானிக்க முடிகின்றது. வகை மாதிரிக்குப் பின்வரும் தாலாட்டுப் பாடலைச் சுட்டிக்காட்டலாம். ஆராரோ, ஆரிரரோ, ஆரடித்து நீயழுதாய்...

**அடைகிடக்கும் தாழையிலே**
**அஞ்சாமல் பூவெடுக்கும்**
**அருச்சுணன் உங்கள் ஐயா (அப்பா)**
**ஆராரோ, ஆரிரரோ...**
**பத்துத் தலை நாகம்**
**படமெடுக்கும் தாழையிலே**
**பயமின்றிப் பூவெடுக்கும்**
**பார்த்திபனாம் உங்கள் (ஐயா) அப்பா**

இவ்வாறு கணவனின் சிறப்பைச் சுட்டிப் பாடும் பல தாலாட்டுப் பாடல்கள் உள்ளன. தனது மனப்பாங்கை, உளவெளிப்பாட்டைத் தாலாட்டாகப் பாடுவதும் உண்டு. உதாரணமாகக் கூற்றும் மாற்றமுமாக அமையும்.

**ஆராரோ, ஆரிரரோ**
**ஆராரோ, ஆரிரரோ**
**ஆரடித்து நீயழுதாய்**
**அடித்தாரைச் சொல்லியழு**
**ஆரும் அடிக்கவில்லை**
**ஆக்கினைகள் செய்யவில்லை**
**தம்பி துணை வேணுமெண்டு**
**அவன்**
**தானே அழுகின்றான்...**

தொட்டிலோடு தொடர்புடைய நாட்டுப்புறக் கதைகள், பாடல்கள், தமிழிலே நிறையவே உண்டு. அவை ஒரு காலத்தில் யாழ்ப்பாணப் பிரதேசத்திலும் வழக்கில் இருந்தன. இன்று மிகவும் அருகிவிட்டன. தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 30000 வருடங்களுக்கு முற்பட்ட மீன்பிடிச் சுவடுகள்



ஆழ்கடல் மீன்பிடித் துறையில் சுமார் 30,000 வருடங்களுக்கு முற்பட்ட சுவடுகளை அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகத்தின் ஆய்வுக்குழு அவுஸ்திரேலியாவின் வட கடலை அண்டிய தீவுப் பகுதிகளில் கண்டுபிடித்துள்ளது. வரலாற்றின் ஆரம்ப காலகட்டங்களிலிருந்தே ஆசியாவின் கிழக்குப் பகுதிகளில் இருந்து மீன்பிடித்தலை நோக்கமாகக் கொண்டு குடியேற்ற வாசிகள் இடம்பெயர ஆரம்பித்தார்கள் என்றும் தொழில்நுட்ப ரீதியில் மிகவும் முன்னேற்றகரமாக இவர்களது மீன்பிடி முறை அமைந்திருப்பதாகவும் உள்ளூர் வேடர்கள் பயன்படுத்தியதாக நம்பப்படும் சுண்ணாம்புப் பாறை குகைகளை அகழ்வுசெய்த போதே இந்த அரிய வரலாற்று சுவடு கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அய்வுக்குழுவுக்கு தலைமை தாங்கிய சுயி ஓ கோனர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கிளிநொச்சி மாவட்டத்தின் வரலாற்றுத் தொன்மை

- பேராசிரியர் எஸ். புஸ்பரட்ணம்

பண்டுதொட்டு அநுராதபுரத்திற்கு வடக்கில் அமைந்த பிரதேசம் (வட இலங்கை) பாளி மொழியில் நாகதீப(ம்) எனவும், தமிழில் நாகநாடு எனவும் தனித்து அடையாளப்படுத்தப்பட்டு வந்துள்ளதைக் காணலாம்.

கி.மு. 6 ஆம் நூற்றாண்டில் நாகதீப(ம்) என மஹாவம்ஸத்தில் அழைக்கப்பட்ட இப்பிராந்தியம் கி.பி. 1 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கிரேக்க நாட்டு யாத்திரிகரான தொலமியின் குறிப்பில் 'நாகடிப' எனவும், யாழ்ப்பாணம் வல்லிபுரத்தில் கிடைத்த கி.பி. 3 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பொற்சாசனத்தில் 'நகதிவ' எனவும் அழைக்கப்படுகிறது. சற்றுப் பிற்பட்ட காலத்தில் தமிழகத்தில் தோன்றிய இரு பெரும் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையில் தமிழகத்திற்கு அப்பால் கடல் கடந்து செல்ல வேண்டிய இடங்களில் ஒன்றாக இந்த நாகநாடு என்ற பிரதேசம் குறிப்பிடப்படுகிறது.

ஏறத்தாழ இதன் சமகாலத்திற்குரிய தமிழக வேலூர்ப்பாளையச் செப்பேட்டில் பல்லவ மன்னன் ஒருவன் தமிழகத்திற்கு அப்பால் சென்று நாக குல பெண்ணொருத்தியை மணந்த செய்தி சொல்லப்படுகிறது. சோழர் காலத்திற்குரிய கலிங்கத்துப்பரணியில் சோழ வம்சத்து கிள்ளிவளவன் நாகநாட்டு இளவரசி ஒருத்தியை மணந்தான் எனக் குறிப்பிடப்படுகிறது. மேற்கூறப்பட்ட ஆதாரங்களையும், அவற்றோடு தொடர்புடைய வரலாற்றுச் சம்பவங்களையும் ஒப்பு நோக்கி ஆய்வு செய்த அறிஞர்கள், அவற்றில் சுட்டிக்காட்டப்படும் நாகதீபம், நாகநாடு ஆகிய இடப் பெயர்கள் அக்காலத்தில் அநுராதபுரத்திற்கு வடக்காக அமைந்த தற்கால வடஇலங்கையையே குறித்ததாக அடையாளப்படுத்தியுள்ளனர்.

இவ்வாறு வரலாற்று ஆவணங்களில் வடஇலங்கை தனித்து அடையாளப்படுத்திக் கூறியிருப்பதற்கு அதன் சமகால அநுராதபுர, பொலநறுவை நாகரிக வட்டத்தில் இருந்து வடஇலங்கை வேறுபட்டு இருந்தமை காரணம் எனக் கருத இடமுண்டு. இக்கூற்றை உறுதிப்படுத்தும் வகையில் வடஇலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும் சமீப காலத் தொல்லியல் ஆய்வுகளும் அமைந்துள்ளன. அதில் கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளையும், தொல்லியல் கண்டுபிடிப்புக்களையும் வெளிச்சத்திற்கு கொண்டு வருவதே இக்கட்டுரையின் கருப் பொருளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரணைமடு அகழ்வாய்வும் இலங்கையின் பூர்வீக மக்களும்

ஆபிரிக்கா, பிரான்ஸ், ஜேர்மன், சீனா, ஜாவா என உலகில் சில நாடுகளில் மனித பரிணாமம் நிகழ்ந்தமைக்கான சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 'இருண்ட கண்டம்' என அழைக்கப்படும் ஆபிரிக்காவின் தோற்ற காலம் இற்றைக்கு 15 இலட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்டதென நம்பப்படுகிறது. ஆனால் இலங்கையில் மனித பரிணாமம் நிகழ்ந்ததற்கான சான்றுகள் எவையும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. இதனால் இலங்கைக்குரிய பூர்வீக மக்கள் இன்னொரு நாட்டிலிருந்தே புலம்பெயர்ந்திருக்க வேண்டும் என நம்பப்படுகிறது. இந்த மக்கள் யார்? எங்கிருந்து வந்தார்கள்? எப்போது வந்தார்கள்? என்பன போன்ற கேள்விகளுக்கான பதில்கள் நீண்ட காலமாக வாதப் பிரதி வாதங்களுக்குரியதாகவே இருந்து வந்துள்ளன. பாளி இலக்கியங்கள் இற்றைக்கு 2600 ஆண்டளவில் வடஇந்தியாவில் இருந்து வந்த மக்களே இலங்கையின் பூர்வீக மக்கள் எனவும், அவர்களே இலங்கையில் நாகரிக சமூகம் தோன்றுவதற்கு காரணமாக இருந்தனர் எனவும் கூறுகின்றன. ஆயினும் விஞ்ஞான பூர்வமான சமீப காலத் தொல்லியற் கண்டுபிடிப்புக்கள் பாளி இலக்கியம் கூறும் சில கருத்துக்களை மீளாய்வு செய்யத் தூண்டியுள்ளன. அதில் ஒன்றே இலங்கையின் பூர்வீக மக்கள் பற்றிய பாரம்பரியக் கருத்தாகும். 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் வடஇலங்கையில் உள்ள மாங்குளம், முருங்கன், கிளிநொச்சி (இரணைமடு) முதலான இடங்களில் தொல்லியல் ஆய்வில் ஈடுபட்ட சரசின், செலிக்மன், வேலண்ட, போல், பர்சனர் காட்லே முதலானோர் இங்கெல்லாம் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கற்கால மக்கள் வாழ்ந்துள்ளனர் என்ற கருத்தை முன்வைத்துள்ளனர். ஆயினும் நீண்ட காலமாக இக்கருத்துக்களுக்கு இலங்கை வரலாறு பற்றிய ஆய்வில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. இந்நிலையில் 1970 களின் பின்னர் இலங்கைத் தொல்லியற் திணைக்களம் குறிப்பாக இலங்கையின் முதன்மை தொல்லியலாளரில் ஒருவரான கலாநிதி சிரான்தெரணியகல கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள இரணைமடுப் பகுதியில் மேற்கொண்ட ஆய்வுகள் இக்கருத்துக்களுக்குப் புது வெளிச்சத்தை ஏற்படுத்தியதெனக் கூறலாம். அவர் இங்கு மேற்கொண்ட ஆய்வுகளின் போது கிடைத்த ஆதாரங்களில் இருந்து இற்றைக்கு 1,25,000 ஆண்டுகளுக்கு முன்னரே இப்பிராந்தியத்தில் கற்கால மக்கள் (மேலைப்பழங்கற்கால மக்கள் - Upper Palaeolithic People) வாழ்ந்துள்ளனர் என்பது தெரிய வந்துள்ளது. இம்மக்கள் நாடோடிகளாக மிருகங்களை வேட்டையாடியும், இயற்கையாகக் கிடைத்த பழங்களையும், கிழங்கு வகைகளையும், காய் கனிகளையும்



பெருங்கற்கால ஈமத்தாழி




பூநகரில் கிடைத்த கல்லாயுதங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உண்டும் வாழ்ந்து வந்தனர் என்பதை இங்கு கிடைத்த கல்லாயுதங்கள் உறுதி செய்கின்றன. இவ்வாதாரங்கள் இலங்கையின் முதலாவது மனித குடியிருப்பின் தொடக்கப் புள்ளியாக இரணைமடுவை அடையாளப்படுத்தியதன் மூலம் கிளிநொச்சியின் வரலாற்றுத் தொன்மை வெளிச்சத்திற்கு வந்தது.

இரணைமடுவில் கற்கால மக்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து தென்னிலங்கையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் போது முந்துல, இரத்தினபுரி ஆகிய இடங்களிலும் இதையொத்த கற்கால மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பது தெரிய வந்துள்ளது. இரத்தினபுரி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வின் போது கற்கருவிகளுடன் மனித எலும்பின் சில பாகங்களும் கிடைத்துள்ளன. இவை ஹோமோ சேப்பியன் (Homo Sapiens) இன வகையைச் சேர்ந்த தற்கால மனித வடிவத்தின் தொடக்க காலமாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. (Deraniyagala 2004:4). இக்கண்டு பிடிப்புக்கள் இலங்கை பற்றிய எதிர்கால ஆய்வுகளில் கற்கால மக்களுக்கும் பிற்காலத்தில் மொழி அடிப்படையில் இரு இனங்களாகத் தோன்றிய தமிழ் - சிங்கள மக்களுக்கும் இடையிலான உறவுகளைத் தெரிந்து கொள்ள உதவும் என்பதில் ஐயமில்லை.

கற்கால மக்களைத் தொடர்ந்து கி.மு. 37,000 ஆண்டளவில் தென்னிந்தியாவில் இருந்து புலம்பெயர்ந்த நுண்கற்கால (Mesolithic or Middle Stone Age) மக்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் கிளிநொச்சி மாவட்டத்திலும் இலங்கையில் ஏனைய இடங்களிலும் ஏறத்தாழ 75 மையங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இம்மக்கள் தமிழகத்தின் தென்பகுதியில் இருந்து முதலில் வடஇலங்கையில் குடியேறி, இங்கிருந்தே இலங்கையின் ஏனைய பகுதிகளுக்குப் புலம்பெயர்ந்தனர் என நம்பப்படுகிறது. கிளிநொச்சியில் (பூநகரியில்) மண்டக்கல் மற்றும் மண்ணியாற்றுப் பகுதியில் 1982, 1993 காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வில் இப்பண்பாட்டு மக்கள் பயன்படுத்திய பலதரப்பட்ட கற்கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அண்மையில் இக்கட்டுரை ஆசிரியர் தொல்லியல் மாணவர்களுடன் இணைந்து பூநகரி கல்முனைப் பகுதியில் மேற்கொண்ட அகழ்வாய்வில் இப்பண்பாட்டு மக்கள் பயன்படுத்திய குவாட்ஸ், சேட் வகையைச் சார்ந்த கற்கருவிகளைக் கண்டுபிடிக்க முடிந்தது. இக்கருவிகள் முன்னர் இரணைமடுப் பகுதியில் வாழ்ந்த கற்கால மக்கள் பயன்படுத்திய கருவிகளை விட கூடிய தொழில் நுட்பமும், கலைநயமும் பொருந்தியதுடன் ஓரளவு நாகரிகமுடைய மக்கள் இங்கு இருந்துள்ளனர் என்பதையும் எடுத்துக் காட்டுகின்றன. தென்னிலங்கையில் இப்பண்பாடு பற்றி மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இருந்து இவர்களிடத்தில் இறந்தவர்களை அடக்கம் செய்யும் மரபு, தானியங்களைச் சேகரிக்கும் முறை, மட்பாண்டத்தின் பயன்பாடு, குகைகள், பாறைகள் சமவெளிகள் என்பவற்றில் ஓவியங்கள், சிற்பங்கள் என்பவற்றைப் படைக்கும் முறை, நெருப்பின் பயன்பாடு என்பனவற்றை அறிந்திருந்தனர் என்பது தெரிய வந்துள்ளது. வடஇலங்கையிலும் குறிப்பாக இம்மக்கள் வாழ்ந்த கிளிநொச்சி மாவட்டத்திலும் இதுபோன்ற விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுமானால் இப்பிரதேசத்தின் பூர்வீக மக்கள், அவர்களது பண்பாடு, வரலாறு என்பன வெளிச்சத்திற்கு வரும் என்பதில் ஐயமில்லை.

மானிடவியல் அறிஞர்கள் இலங்கையிலும், தென்னிந்தியாவிலும் வாழ்ந்த இந்நுண்கற்கால மக்கள் ஒரே இன வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் எனக் குறிப்பிடுகின்றனர். தொல்லியலாளர்கள் இலங்கையில் பயன்படுத்தப்பட்ட நுண்கற்காலக் கருவிகளுக்கும், கர்நாடகம் உட்பட தென்னிந்தியாவில் பயன்படுத்தப்பட்ட கருவிகளுக்கும் இடையே நெருங்கிய ஒற்றுமை இருப்பதாகச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டிக்காட்டுகின்றனர். அதிலும் இலங்கையில் பயன்படுத்தப்பட்ட இரு பக்க அலகுடைய நுண்கற்காலக் கல்லாயுதங்கள் தமிழகத்தில் பாம்பன் கடற்கரைக்கு அண்மையில் உள்ள தேரிக் கலாசாரத்துடன் ஒரே பிராந்தியம் எனக் கருதும் அளவிற்கு ஒற்றுமை கொண்டுள்ளதாக 'அல்ஜின்' குறிப்பிடுகிறார். மொழியியலாளர்கள் மொழி அடிப்படையில் இலங்கை - தென்னிந்திய நுண்கற்கால மக்களிடையே நெருங்கிய ஒற்றுமை இருப்பதாகச் சுட்டிக்காட்டுகின்றனர். இவ்வொற்றுமைகளின் அடிப்படையில் இலங்கையில் வாழ்ந்த நுண்கற்கால மக்கள் தென்னிந்தியா அதிலும் குறிப்பாக தமிழகத்தில் உள்ள தேரி மணற்குன்றுப் பகுதியிலிருந்து புலம்பெயர்ந்து வந்தனர் எனக் கூறப்படுகிறது. கலாநிதி இந்திரபாலா வடஇலங்கை அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாடு தமிழகத்தின் தொடக்க வாயிலாக இருப்பதால் தமிழகத்தில் இருந்து புலம் பெயர்ந்த இம்மக்கள் முதலில் யாழ்ப்பாணத் தீபகற்பத்திலேயே குடியேறியிருக்க வேண்டும் எனக் கருதுகிறார்.

இந்நுண்கற்கால மக்களைத் தொடர்ந்து கி.மு. 1000 அளவில் இலங்கை நாகரிகத்திற்கு வித்திட்ட பெருங்கற்கால திராவிட மக்கள் இலங்கையில் குடியேறி வாழ்ந்தமைக்கான ஆதாரங்கள் ஏறத்தாள 50 க்கும் மேற்பட்ட தொல்லியல் மையங்களில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் தென்னிலங்கையில் அநுராதபுரமும், வடஇலங்கையில் கந்தரோடை மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பூநகரி என்பன மிகப் பெரிய பெருங்கற்கால குடியிருப்பு மையங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இம்மக்கள் இறந்தவர்களுக்கு மறுபிறப்பு உண்டு என்ற நம்பிக்கையில் அவர்களுக்கு மிகப்பெரிய கற்களைப் பயன்படுத்தி ஈமச்சின்னங்களை அமைத்ததினால் இப்பண்பாடு 'பெருங்கற்காலப் பண்பாடு' என அழைக்கப்பட்டது. ஆனால் பெரிய கற்கள் காணப்படாத இடங்களில் மிகப் பெரிய தாழிகளை அமைத்து அதற்குள் இறந்தவர்களின் உடலை அடக்கம் செய்யும் மரபு காணப்பட்டது. வடஇலங்கையில் இந்த இருவகை ஈமச்சின்னங்களும் இருந்ததற்கு ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இப்பெருங்கற்கால ஈமச்சின்னங்களிலும், அவர்களது குடியிருப்பு பகுதிகளில் கிடைத்த ஆதாரங்களின் அடிப்படையிலும், இப்பண்பாட்டுடன் தென் இந்தியாவைப் போல் இலங்கையிலும் நிலையான குடியிருப்புக்கள், நீர்ப் பாசன விவசாயம், இரும்பின் உபயோகம், கறுப்பு - சிவப்பு நிற மட்பாண்டங்களின் பயன்பாடு, மந்தை வளர்ப்பு, சிறு தொழில்நுட்ப வளர்ச்சி, அரச தோற்றம், நகரமயமாக்கம், சமூக உருவாக்கம் என்பன தோன்றியமை தெரிய வந்துள்ளது. இதன் மூலம் இதுவரை காலமும் இலங்கையின் மனித வரலாறும், நாகரிக உருவாக்கமும் வடஇந்தியாவில் இருந்து கி.மு 6 ஆம் நூற்றாண்டில் விஜயன் தலைமையில் ஏற்பட்ட குடியேற்றத்துடன் தோன்றியதென்ற பாரம்பரிய கருத்து மீள்வாசிப்பிற்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரை அங்கு நுண்கற்காலப் பண்பாட்டைத் தொடர்ந்து இப்பெருங்கற்கால மக்கள் வாழ்ந்ததற்கான பல சான்றுகள் இரணைமடு, வெற்றிலைக்கேணி, குஞ்சுப்பரந்தன், பூநகரி போன்ற இடங்களில் பரவலாக கிடைத்துள்ளன. அதில் இரணைமடு முக்கிய பெருங்கற்காலக் குடியிருப்பு மையமாக இருந்திருக்க வேண்டும். ஏனெனில் அங்கு இதுவரை முழுமையான அகழ்வாய்வு மேற்கொள்ளப் படாத நிலையிலும் இரணைமடு குளத்திற்கு கிழக்காக உள்ள மேட்டு நிலப் பகுதியில் இருந்து இப்பண்பாட்டு மக்கள் வாழ்ந்ததை உறுதி செய்யும் தாழிகளின் உடைந்த பாகங்கள், கறுப்பு - சிவப்பு நிற மட்பாண்ட ஓடுகள், கழிவிரும்புகள், கல்மணிகள், சுடுமண் உருவங்கள் என்பன கிடைத்துள்ளன. இங்கு விரிவான அகழ்வாய்வுகள் நடத்தப்படுமானால் இங்கு வாழ்ந்த பெருங்கற்கால மக்களது பண்பாட்டின் பல சிறப்புக்கள் வெளிவரும் எனலாம்.

(தொடரும்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ் இலக்கியம் காட்டும் பழந்தமிழர் கூத்துக்கள்

**ஷர்மிளா ரஞ்சித்குமார்,** விரிவுரையாளர்
சுவாமி விபுலானந்தா அழகியற்கற்கைகள் நிறுவகம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்

தமிழ் இலக்கியங்கள் காலத் தொன்மை மிக்கவையும் செறிவானவையுமாகும். இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டு காலம் பழைமை வாய்ந்த தொகையும் பாட்டுமான அவ்விலக்கியங்கள் பழந்தமிழர் வாழ்க்கையினைப் படம் போல் காட்டுவதோடு வாழ்க்கை விளக்கங்களாகவும் திகழ்கின்றன

அன்றைய மக்கள் இரவு முழுவதும் விழித்திருந்து கூத்து நிகழ்ச்சிகளை ஆர்வத்துடன் கண்டு களித்தனர். இதனையே *'பாடலோர்த்து நாடக நயந்தும் வெண்ணிலாவின் பயனறுய்த்தும் கண்ணடை இய கடைக்கங்குவான்' (பட்டினப்பாலை113-115)* என்ற பாடல் அடிகள் கூறுகின்றது. பழந்தமிழர் வாழ்வில் கூத்துக்கலை பெரும்பங்கு கொண்டிருந்தது.

மக்கள் வாழ்க்கையில் தலையாயது வழிபாடு ஆகும். பழந்தமிழர் வழிபாடு கூத்து வழியே நடந்ததாகும். முழுமுதற் கடவுளாகிய சிவனை மக்கள் கூத்து நிகழ்த்தும் பாவனையில் வைத்து வணங்கினர். சிவன் ஆடலில் வல்லவனாக இருந்தான். சிவன் பல கூத்துக்களை ஆடியதாக இலக்கியங்கள் கூறுகின்றன. அத்தோடு முருகனுக்கும் கூத்து ஆடுவது ஒரு பண்பாக இருந்ததை இங்கு குறிப்பிடலாம்.

சங்க இலக்கியங்களில் காணப்படும் நடனத்தை குரவை, துணங்கை, வெறியாட்டம் எனும் மூன்று வகை கூத்துகளாக வகைப்படுத்துவர். மேலும் பலவகையான கூத்து முறைமைகளை சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது.

மாதவி ஆடிய 11 வகையான கூத்துக்களும் கலி நடனம், குடக்கூத்து, உரற் கூத்து, கரணக்கூத்து, நோக்குக் கூத்து, விநோதக் கூத்து, பாவைக் கூத்து, வென்றிக் கூத்து போன்ற பலவகை கூத்துக்களும் இலக்கியங்களில் குறிப்பிடப்படுகின்றன. சங்ககாலத்தில் வாழ்ந்த மக்கள் தங்களுக்குரிய இருப்பிடங்களில் குழுவாக வாழ்ந்தவர்கள்.

எனவே, அவர்களின் நடனமும் குழு நடனமாகவே அமைந்திருந்தது. மன்னர்களைக் காணச்செல்லும் விறலியோ கூத்தரோ தனிநடனம் செய்வார்கள். எனினும் அகப்பொருளின் மரபின் கீழ் பயின்று வரும் பாடல்களில் குழு நடனங்களையே நம்மால் பார்க்க இயலுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### குரவைக் கூத்து

தொகையும் பாட்டுமான இலக்கியங்களில் மிகப் பரவலாக பேசப்படும் கூத்து குரவையாகும். அக்காலத்துச் சமுதாயத்தில் காணப்பட்ட சில பொழுதுபோக்கு விளையாட்டுகள் போலவே குரவை பாமரருக்குரிய ஒரு கூத்தாக விளங்குகிறது. முதலில் குறவர் வாழும் குறிஞ்சி நிலத்திலேயே குரவைக் கூத்து தோற்றம் பெற்றது. பின்னர் பிற நிலங்களுக்கும் பரவியது. அதன் பெயரளவிலேயே குரவையின் பிறப்பிடம் புலனாகி விடுகின்றது. குறவர்க்கே உரிய கூத்து குறவை ஆனது. அது குறவர் - அவை ஸ்ரீ குறவை - குரவை என்னும் படி குழு நடனமாகவும் நிலை பெற்றது. *'குன்று தோறும் நின்ற குரவை'* என மதுரை காஞ்சியில் கூறப்படுகின்றது. இங்கே குன்றுப்பகுதிக்கே உரியது குரவை என்பது வலியுறுத்தப்படுவதாக தெரிகிறது என தமிழ் ஆய்வாளர் டாக்டர். ஜான் ஆசீர்வாதம் கூறுகின்றார். மேலும் அவர் *'ஒருங்கு நாமாடுங் குரவையுள்'* (கலித்தொகை 103 - 75 - 76) இக் கூற்றிலிருந்து இது பலர் கூடி நிகழ்த்தும் குழு நடனம் எனவும் கூறுகின்றார். குரவை என்பது பலர் கூடி நிகழ்த்தும் கூத்து ஆகும். குரவையில் ஏழு அல்லது ஒன்பது பேர் கூடி வட்டமாக நின்று கற்கடக கை சேர்த்து வீரம், சிருங்காரம் ஆகியவற்றை பொருளாகக் கொண்டு ஆடுவர்.

*'குரவை என்பது எழுவர் மங்கையர்*
*செந்நிலைப் பாண்டியன் கடகக் கை*
*கோத்து*
*அந்நிலைக் கொப்ப நின்றாடலாகும்'*
(சிலப்பதிகாரம்: 77)

எனச் சிலப்பதிகாரம் கூறுகின்றது.

குரவையில் பலவகைகள் காணப்படுகின்றன. அவைகளை நோக்குவோமானால் வழிபாட்டுக் குரவையானது வழிபாட்டின் போது ஆடப்படுகின்றது. பொழுது போக்குக் குரவை, பொழுது போக்குத் தன்மை வாய்ந்தது. பொழுது போக்கு என்ற நிலையிலே அந்தந்த நில மக்கள் குரவையிலே தாமே பங்கு கொண்டு மகிழ்ந்தார்கள். இக்குரவை ஆடுவோர் கள் அருந்தி இருப்பார்கள்.

ஆய்ச்சியர் குரவை தொடர்பில், மாதவியை விட்டுப் பிரிந்த கோவலன், கண்ணகியுடன் மதுரை மாநகர் அடைந்தான். கண்ணகியை மாதரி என்னும் இடைக்குலப் பெண்ணிடம் அடைக்கலம் விட்டுச் சிலம்பு விற்று வருவதற்காக புறப்பட்டுச் செல்லுகின்றான். ஆயர் சேரியில் பல துர் நிகழ்வுகள் இடம்பெற்றன. அதனால் மாதரி ஆயர் குலத்தில் உள்ள பிற மங்கையர்களும் சேர்ந்து இக் குரவையை ஆடினார்கள் என சிலப்பதிகாரம் கூறுகின்றது. இக்கூத்தை அவர்கள் பலமுறை ஆடியுள்ளனர் என்பதால் இது அவர்களுக்கு நன்கு பழக்கப்பட்ட கூத்தாக இருந்திருக்கக் கூடும். அத்தோடு இக்கூத்தை உடனே ஆடத் தொடங்கியதால் இதற்கு ஒப்பனை எதுவும் இல்லை என்பதுவும் புலனாகின்றது.

மலை வாழ் மக்கள் ஒன்று கூடி பத்தினி தெய்வத்தையும் முருகக் கடவுளையும் வாழ்த்திப் பாடுவது குன்றக் குரவையாகும். கண்ணகி தன் கணவனுடன் விமானம் ஏறி வானுலகிற்குச் செல்வதைக் கண்ட குறிஞ்சி வாழ் மக்கள் மிக வியப்புற்று அவளை தம் குல தெய்வமாகக் கருதி அவளுக்காக இக்குரவைக் கூத்தை நிகழ்த்தினர். தொல்காப்பியத்தில் முன்தேர்க் குரவை, பின்தேர்க் குரவை என இரு விதமான குரவைகள் கூறப்பட்டுள்ளன. படைத்தலைவனான அரசன் போருக்கு போவதற்கு முன்னர் தேரின் முன்நின்று ஆடுவது முன்தேர்க் குரவை எனவும் அவனது வெற்றிக்குப் பின் ஆடுவது பின் தேர்க்குரவை யெனவும் குறிப்பிடப்படுகின்றது. இவ்வாறு பல வகைக் குரவைகள் ஆடப்பட்டபோதும் தொழில் முறையில் இவை ஆடப்பட்டவையல்ல.

### துணங்கைக் கூத்து

சங்ககாலக் கூத்துகளுள் குரவையினைப் போன்ற செல்வாக்குள்ள ஒரு கூத்து துணங்கைக் கூத்தாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கூத்து குரவைக்கூத்தோடு இணைய வைத்துப் பேசப்படுகின்றது. இவற்றை இரட்டைக் கூத்துக்கள் என்றும் குறிப்பிடுவர். கூத்துக்களை ஆய்வு செய்த டாக்டர். ஜான் ஆசீர்வாதம் சங்க கால இலக்கியங்களில் துணங்கை மற்றும் குரவை இரண்டினையும் ஒரே குறிப்பில் இணைத்துப் பேசப்படுவதை எடுத்தக் காட்ட மதுரைக் காஞ்சியில் கூறப்பட்ட *'துணங்கையம் சீர் சீர்த்த மூட மறப்ப துணங்கையம் தழு உலின் மணம் கம்புசேரி'* இவ் வரிகளை சுட்டுகின்றார். துணங்கைக் கூத்து முதலில் தோன்றியதா குரவைக் கூத்து முதலில் தோன்றியதா என ஆய்வினை மேற்கொண்ட விற்பன்னர்கள் துணங்கையே முதலில் தோன்றியது என்று கூறுகின்றார்கள். சிலப்பதிகாரமும் துணங்கையினை இணைத்துப் பேசும் போது துணங்கையினையே முன் வைத்துள்ளது.

*'துணங்கையர் குரவையர் அணங் கெழுந்தாடி'*

என்பதேயது. துணங்கையை மகளிர் தவிர ஆடவர் ஆடுவதில்லை. மகளிரோடு ஆடவர் ஆட விரும்பினால் அவர்கள் மகளிரைப்போல் தம்மை உருமாற்றி ஆடவேண்டும். பகலிலும் துணங்கை ஆடப்படும். மர நிழலிலும் கடற் கரையிலும் இதனை ஆடுவர். தகுந்த ஆயத்தங்களுடன் விழாப்போல் துணங்கை கூத்து நிகழும். பேய்த்துணங்கை, போர்த் துணங்கை, மகளிர் துணங்கை என்று சங்ககாலத்தில் துணங்கை மூன்று விதமாக நிகழ்ந்தது. பேய்த்துணங்கை இது பின்தேர்க்குரவை எனவும் மற்றும் போர்த்துணங்கை இது முன்தேர்க்குரவை எனவும் மகளிர் கூடி ஆடுவது மகளிர் துணங்கை எனவும் ஆடப்பட்டுள்ளது. இம் மூன்று விதமான துணங்கைகளிலுமே ஆடும் நெறியில் வேற்றுமையினை உணரலாம் என ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். மகளிர்த் துணங்கையில் கை புணர்ந்தாடுவது முறையாக இருந்துள்ளது. *'கை புணர்ந்தாடும் துணங்கை'* என இலக்கியங்களில் இது கூறப்படுகின்றது. துணங்கை ஆரவாரம் மிகுந்த பாடலுடன் கூடிய கூத்தாகும்.

## வெறியாட்டு

தொகையும் பாட்டுமான சங்க இலக்கியங்களில் துணங்கை மற்றும் குரவைக்கு மேலாக மிக விரிவாகப் பேசப்படுகின்ற கூத்து வெறியாட்டு ஆகும். சிவபெருமானின் கபாலக் கூத்து வழி உருவான பேய்த் துணங்கைகளின் மறுதலைக் கூத்தாக நின்று விளங்கிய ஒரு கூத்து வெறியாட்டு எனலாம். ஆய்வாளர் டாக்டர். ஜான் ஆசீர்வாதம் வெறியாடுவோர் தாமாக ஆடுவதில்லை எனவும் அவர் மீது ஏறிய கடவுளரின் தூண்டுதலால் அதனை ஆடினர் எனவும் தெய்வம் ஏற்பட்டு ஆடும் கூத்து இது எனவும் கூறுவதோடு அக நாநூறு (98-17-20) வரிகளை எடுத்துக்காட்டுகிறார்.

*'வெறி அயர் வியன் களம் பொற்பவல் லோன் பொறி அமையாவையில் நூங்கல்'*

தெய்வம் ஏற்பட்டு ஆடினமையால் அதில் வெறியாட்டு ஆரவாரம் மிகுந்ததாக தோன்றும். இதனால் இலக்கியங்கள்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தனி நபர் கூத்து இதுவாயினும் இதனை ஒரு விழாவுக்கே ஒப்பிட்டு பேசியுள்ளன. சிலப்பதிகார காலத்தில் வெறியாடி உண்மை வெளிப்படுத்தும் மகளிர் சாலினி என்று தனிப் பெயர் பெற்று இருந்தனர் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். முருகனால் பற்றப்பட்டு வெறியாடுவது நிகழ்வதுடன் வன தேவதையால் பற்றப்பட்டு வெறியாடுவதும் நிகழ்வதுண்டு. இதனை மகளிர் நடத்துவர்.

முன்னர் பௌர்ணமி நாளன்று நடு இரவில் வெறியாட்டு நிகழும். முருகாற்றுப்படுத்த வேண்டி நடு நாள் களத்தில் நின்று வேலன், முருகனை தன் மீது வரும்படி அழைப்பான். இவ்வாறு வேலன் அழைக்கையில் அச்சம் தருகின்ற முறையில் முருகன் அவன்மீது வந்திறங்குவான். அவ்வாற்றலால் வேலன் வருங்காலம் உணர்த்துவான். குருதி சிந்திய இடத்தில் இரவில் வெறியாட்டு நிகழ்வதாலும் அச்சம் தருகின்ற முறையில் முருகன் வர வேலன் ஆடுவதாலும் அக் கூத்து அச்சம்மிக்க கூத்தாக அமையும். இது ஒரு சமயச் சடங்காகவே ஆடப்படுகின்றது.

இவற்றைவிட சங்க இலக்கியங்களில் பிற வகைக் கூத்துக்கள் பல உள்ளன. அவற்றில் கலிநடனம், ஆரியக் கூத்து அல்லது கயிறாட்டம் என அழைக்கப்படும். இக் கூத்தைக் கயிற்றின் மேல் நின்று ஆடுவதால் இதனை ஆடுவது எளிதல்ல; இசைக்கேற்ப கவனத்தைச் சிதற விடாது கயிற்றின் மீது நடப்பர்.

அடுத்து குடக்கூத்து; பானையினைத் தலையில் வைத்து ஆடுவதாகும். சிலப்பதிகாரத்தில் மாதவி ஆடிய 11 வகைக் கூத்தில் குடக்கூத்தும் அடங்கும். இக் கூத்தே காலப்போக்கில் கரக ஆட்டமாக மாற்றம் பெற்றிருக்க வேண்டும்.

உறற்கூத்து; உரலைக்கட்டித் தொங்க விட்டு ஆடும் ஆட்டம். இது இக்காலத்தில் பளுதூக்குதல் போன்றது. இது கடுமையான கூத்தான போதிலும் இக்கூத்தை மகளிரே நிகழ்த்தினர். மகளிர் தூக்குவதற்கு வாய்ப்பாக உரல் சிறியதாக அமைந்திருந்தது. உறற் கூத்திற்கு இசைப் பின்னணியிருந்தது. இன்னியம் எனும் இசைக்கருவி இதற்குப் பின்னணியாக இசைக்கப்பட்டது.

கரணக்கூத்து பண்டைய போட்டி நிகழ்வாக நிகழ்ந்த மல்லாடல் கூத்தாகும். மாதவியின் 11 ஆடல் வரிசையில் இந்த மல்லாடலும் இடம் பெற்றுள்ளது. கதையில் கண்ணனும் வானாசுரனும் மோதுகின்றனர். கண்ணன் மல்லனாய்ச் சென்று அறை கூவி அவனைப் பிடித்து உயிர் போக நெரித்து ஆடினான். இதுவே அக்கூத்தாகும்.

பாவைக்கூத்து பாவைகளை வைத்து ஆட்டுவிக்கும் விளையாட்டாகும். அக்காலத்தில் பாவை செய்வதற்கென்றே வல்லுனர்கள் இருந்துள்ளனர். மணற் பாவை, புற்பாவை, மரப்பாவை, தோற்பாவை என்று வளர்ச்சிபெற்றதாக இது காணப்பட்டது.

வென்றிக் கூத்துக்கள் போர்க் கூத்துகளாகும். போருக்கு முன்னர் நிகழ்ந்தவை; போருக்குப் பின்னர் நிகழ்ந்தவை என்று இவை இருவகைப்படும். போருக்குச் செல்லும் வீரர்களை ஊக்குவிக்க ஆடும் கூத்துகள் போருக்கு முன் ஆடும் கூத்து எனவும் வெற்றி பெற்ற வீரர்களை வாழ்த்தி ஆடுவது போருக்கு பின் நிகழும் கூத்து எனவும் கருதப்படுகின்றது. இவற்றில் பலவகைகள் உண்டு. இதில் வாள் மலைக்கூத்து போருக்கு கொண்டு செல்லும் வாள்களை கைகளில் ஏந்தி ஆடும் கூத்து. வாளின் பெயராலே இக்கூத்து வாள் மலைக்கூத்து என அழைக்கப்படுகிறது.

வள்ளிக்கூத்தும் போர்க்கூத்துடன் தொடர்புடையது. சமயத் தன்மையும் சமுதாயப் பண்பும் ஒருங்கிணைந்து அமைந்ததாக இது காணப்படும். கழல்நிலைக்கூத்து போரில் சாதனை புரிந்த வீரனுக்கு கழலணிந்து மகிழ்ச்சியில் ஆடுவது. துடிக்கூத்து துடி என்ற இசைக் கருவியினால் அமைந்த ஒரு கூத்தாகும். சிலப்பதிகாரத்தில் இக் கூத்து விரிவாகக் கூறப்பட்டுள்ளது. சூரனது நெஞ்சைப் பிளந்து அவன் போரினைக் கடந்த முருகன் அக்கடலிலே துடி கொட்டி ஆடியது இது.

சிவனின் கூத்துக்களில் ஒன்றாக கொடுகொட்டி கூத்து அமைகின்றது. சிவன் தேவியை ஒருபக்கத்தில் வைத்தவாறு இக்கூத்தினை நிகழ்த்தினார். திரிபுரத்தை எரியச் செய்யுமாறு சிவபெருமானிடம் தேவர்கள் வேண்ட வடலைத் தீயை தலையிலே கொண்டு திருமாலை அம்பாகவும் உமையை ஒரு பக்கமாகவும் கொண்டு சிவபெருமான் வெற்றிக் களிப்பில் கைகொட்டி ஆடிய ஆடல் இது. மாதவி இக்கூத்தை ஆடியுள்ளாள்.


பாண்டரங்கக்கூத்து தேரின் முன்னிடத்து நின்று நான்முகன் காணும்படி பாதி வடிவாகிய சிவன் வெண்ணீற்றை அணிந்து ஆடியது. இக்கூத்தையும் மாதவி தனது அரங்கேற்றத்தின் போது ஆடிக்காட்டினாள்.

கபாலக்கூத்து தலையோட்டினை குறிக்கும். இதனை ஏந்தி காளிக்கு எதிராக சிவன் இக்கூத்தை ஆடியதாகவும் வரலாறுகள் உள்ளன.

சாந்திக்கூத்து முறையான ஆட்டக் காரர்களால் மட்டுமே ஆடப்பட்டது. விறலியர் ஆட்டங்கள் இவ் வகையையே சேர்ந்தன. பறை முதலிய கருவிகளின் ஆரவார இசைக்கு ஏற்ப இவை ஆடப்படுவன. மயில் ஆடும் அழகு நடனங்களுக்கு இதனை ஒப்பிடலாம்.

கூத்து என்பது ஒரு கலையாகும். பொழுதுபோக்கு அதன் சிறந்த நோக்கமாகும். பண்டைத் தமிழகத்தில் விளங்கிய குரவை துணங்கை, வெறியாடல் போன்ற கூத்துக்கள் மக்கள் வாழ்க்கையில் எல்லாவித நிலைகளிலும் பங்கு கொண்டு விளங்கியுள்ளன. வழிபாட்டில் கூத்து சிறப்பிடம் பெற்றது. தொழிலாக நிகழ்ந்து வருவாயினைத் தேடித்தந்தது. கூத்துக்கலை சிறந்த பொழுது போக்கு கலையாக திகழ்ந்ததோடு கூடவே காதல் மற்றும் வீர வாழ்வுக்கும் உதவியுள்ளது. இவற்றை நோக்கின் கூத்துக்கலை பழந்தமிழர் சமுதாயத்தில் எத்தனை உயர்விடத்தைப் பெற்றிருந்தது என்பதை நன்கு உணர்ந்து கொள்ள முடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## நவநாயகர்கள் - 5

# வித்தைகளுக்கு அதிபதி வியாழன்

**கலாபூசணம் வித்துவான் வசந்தா வைத்தியநாதன்**

*''மறைமிகு கலைநூல் வல்லோன் வானவர்க்கு அரசன் மந்திரி*
*நறைசொரி கற்பகப் பொன்நாட்டினுக்கு அதிபனாகி*
*நிறைதனஞ் சிவிகை மன்றல் நீடு போகத்தை நல்கும்*
*இறைவன் குருவியாழன் இணையடி போற்றி போற்றி!''*

'பிரகஸ்பதி' என்று சாதாரணமாகச் சொன்னாலே அதிகம் படித்தவன், மேதாவி என்று பாமர மக்களும் அறிவர். நீ என்ன பிரகஸ்பதியோ? என்று பொதுவாகக் கேட்பதையும் அறிவோம். நவநாயகர்கள் வரிசையில் ஐந்தாம் இடத்தைப் பெறுபவர் 'வியாழன்' என்ற பிரகஸ்பதி. 'குரு' பகவான் என்று அன்பர்களால் போற்றப்படுபவரும் இவரே. பிரம்மாவின் பேரன் என்ற பெருமைக்கு உரியவர். பிரம்மாவின் மனதில் உதித்த மானச புத்திரர் 'ஆங்கீரச முனிவர்'. இவருக்கும் 'ச்தத்தா' தேவிக்கும் பிறந்தவரே பிரகஸ்பதி ஆவார். இவரது தேவிமார் தாரை, சங்கினி ஆகியோர் ஆவர். பிரகஸ்பதியின் சகோதரர் உதத்தியன். சகோதரி - யோகசித்தி. யோக சித்தியின் புதல்வரே பரத்வாஜ மகரிஷி ஆவார்.

வியாழ பகவான் காசிக்குச் சென்று பல்லாண்டு காலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவம் செய்து தேவர்களுக்கு ஆசாரியனாக விளங்கும் 'தேவகுரு' பதவியைப் பெற்றார். அத்துடன் நல்ல குணங்கள் கொண்டவராக விளங்கும் வரத்தையும் பெற்றார். அமரர்களின் குருவான வியாழன் 'அமிர்த சஞ்சீவினி' மந்திரத்தை அசுர குருவான சுக்ர பகவானிடமிருந்து அறிந்து வர தனது மகனான கசனை அவருக்குச் சீடராக அனுப்புகிறார். 'கசன்' தான் பிரகஸ்பதியின் குமாரன் என்று கூறாமலேயே அவரிடம் மாணவனாகச் சேர்கிறான். சுக்ராச்சாரியாரின் மகள் தேவயானி அழகும், அறிவும், இளமையும் பொருந்தியவள். அவள் கசனின் தோற்றத்திலும், அறிவாற்றலிலும் மயங்கினாள். காதலியான தேவயானியின் உதவியால் தந்திரமாக சுக்கிராச்சாரியாரிடம் இருந்து 'அமிர்த சஞ்சீவினி' மந்திரத்தை அறிந்து கொண்டு விடுகிறான். கடைசியில் உண்மையை அறிந்த அசுர குரு கசனை சாபத்துக்கு உள்ளாக்குகிறார். இச்செய்தி மகாபாரதத்தில் ஆதிபர்வத்தில் வருகின்றது.

''பிரகஸ்பதி இரண்டு கரமுடையவர் எனவும் புத்தகமும் அட்ச மாலையும் ஏந்திக் கொண்டிருக்கும் சாந்த மூர்த்தியானவர்'' எனவும் 'விஷ்ணு தர்மோத்தரம்' என்னும் நூல் பிரகஸ்பதியின் திருவுருவத்தை வர்ணிக்கிறது. வியாழ பகவானின் தேர் நான்கு சக்கரங்களைக் கொண்டது; எட்டுக் குதிரைகள் பூட்டப்பட்டது. பொன்னிறமும் சாந்த குணமும் கொண்ட இவரது அதிதேவதை - பிரமன்; பிரதி அதிதேவதை - இந்திரன். தேவகுருவாகிய வியாழ பகவான் அந்தண குலத்தில் உதித்தவராக முத்துஸ்வாமி தீட்சிதர் தமது நவாஹணக் கீர்த்தனையில் குறிப்பிடுகிறார். தன்னை வழிபட்டவர்களை கல்வி, கேள்விகளில் மேம்பட வைக்கின்றார். மாணவர் கல்விச் சோதனைகளில் வெற்றியீட்ட குரு பகவானையும் அவரது மந்திரத்தையும் கூறி வழிபட்டு வியாழக்கிழமைகளில் கொண்டைக் கடலைச் சுண்டலை நிவேதித்து வந்தால் கோரிய பலன் கைகூடும்.

தென்முகக் கடவுளாகிய தட்சிணாமூர்த்தி யோக நிலையை உணர்த்தும் ஞானகாரகனாவார். பலர் பிரகஸ்பதியையும், தட்சிணாமூர்த்தியையும் ஒன்றாகக் கருதி வழிபடுகின்றார்கள். பிரகஸ்பதி முனிக்குமாரர்; தட்சிணாமூர்த்தி யோக வடிவத்தில் உள்ள சிவ வடிவம். கல்வியும் ஞானமும் கைகூட வியாழன் தோறும் தட்சிணாமூர்த்திக்கு அர்ச்சனை செய்து அவரது தோத்திரத்தைக் கூறி வழிபட்டால் நற்பலன் கிடைப்பது உறுதி. பிரகஸ்பதி தனு இராசிக்கும், மீன இராசிக்கும் தலைவர்; மகரத்தில் நீசன்; கடகத்தில் உச்சன்.

சோழ நாட்டில் திருத்தேவூர் தலத்தில் குரு பகவானுக்கு தனிக் கோயில் உள்ளது. மேலும் ஆலங்குடி, திருவாரூர், மயிலாடுதுறை ஆகிய தலங்களும் சிறப்புடையவையே. எல்லாவற்றிற்கும் மேலாக திருச்செந்தூர் வியாழ க்ஷேத்திரமாக விளங்குகின்றது. கந்தபுராணத்தில் ''பருமணி வயிரம் முத்தம் பவளம் பிறவும், ஆழித் திரையேறி அலைவாயாகும் செந்தி மா நகரம்'' என்று போற்றப்பெறும் திருச்செந்தூர் கந்தனின் ஆறுபடை வீடுகளில் மூன்றாவதாக விளங்குகின்றது. 'அலைவாய்' என்ற பெயருக்கேற்ப கடலலைகள் பேரிரைச்சலுடன் ஆலய மதிற் சுவர்களில் மோதித் திரும்பும் காட்சி பார்ப்பவரை பரவசத்தில் ஆழ்த்தும். 'செந்தின் மேய சேவகன்' நீலக்கடலை நோக்கிய வண்ணம் கிழக்கு நோக்கி அருள் பாலிக்கிறான். இத்தலத்தில் இருந்துதான் சூரபதுமனின் கோட்டையாகிய வீரமகேந்திரபுரிக்குச் சென்று சூரனையும் அவனது படைகளையும் வேரறச் சாய்த்தான் வேற்பெருமான். போருக்குப் புறப்படுமுன் சூரியனையும் அவனது குல வரலாற்றையும், அவனது வலிமையையும் குரு பகவானாகிய வியாழ பகவானை அழைத்து அவரிடமிருந்து கேட்டு அறிந்து கொண்டே யுத்தத்திற்கு ஆயத்தம் செய்தார் முருகன். சூரனை அழித்து வாகை சூடி வந்த செந்தூர்ப் பெருமானை முறைப்படி பூஜித்துப் பேறுபெற்றார் வியாழன். இதனால் இத்தலத்திற்கு 'வியாழ க்ஷேத்திரம்' என்று சிறப்புப் பெயர் உண்டானது.

குருவைப் பற்றி 'காசிகாண்டம்' விரிவாக உரைக்கிறது. பொன் வண்ண மேனியர்; நான்கு திருக்கரங்கள் கொண்டவர்; திருக்கரங்களில் கமண்டலம், அட்சமாலை,



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யோகதண்டம், அபயகரம் ஆகியவற்றை ஏந்தியுள்ளவர். சில நூல்கள் வியாழன் இரு கரங்களைக் கொண்டவர் என்றும் கூறுகின்றன. ''அக்கினியைப் போல் தூய்மை மிக்கவர் என்றும், சிவந்த மேனியும் அழகிய வடிவமும் படைத்தவர் என்றும், எடுப்பான குரல் உடையவர் என்றும், ஏழு வாய்களும், அழகிய மெல்லிய நாக்கும், கூரிய கொம்புகளும், நூறு இறகுகளும் பெற்றவர் என்றும், கையில் இரும்புக் கோடரி தரித்தவர்'' என்றும் இருக்கு வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் 'விச்வரூபா' என்ற பசுவின் மேல் ஏறிவருபவர் என்றும் இருக்கு வேதம் கூறுகின்றது. இவருக்கு உகந்த தானியம் - கொண்டைக்கடலை; பிடித்த மணி - புஷ்பராகம்; மலர் - முல்லை; சமித்து - அரசு; பிடித்த சுவை - இனிப்பு.

சிறந்த கீர்த்தியையும் வாக்கு வன்மையையும் அருளுபவர். ஈசான்ய திசைக்கு உரியவர். வாகீசர், பீதாம்பரர், யுவர், தயாகரர் என்ற பல திருநாமங்கள் இவருக்கு உண்டு. மறத்தை மடித்து அறம் பெருக்கும் இவரை சோதிட நூல்கள் பலவும் புகழ்ந்து போற்றுகின்றன. ஒரு நாட்டில் அமைதியும் வளமும் பெருக குரு பகவானின் நல்லருள் வேண்டும். வாக்கிற்கும் அறிவிற்கும் அதிதேவதையான கிரகம் குரு. இவை இரண்டுமே மனித முன்னேற்றத்தின் முக்கிய காரணிகளாகும். குரு கடகத்தில் உச்ச வீட்டில் ஒரு ஜாதகனுக்கு அமையுமானால் அவன் எந்நாளும் உணவிற்கும், உடைக்கும், உறையுளுக்கும் துன்பப்படவே மாட்டான். ஆனால் குரு மகரத்திலோ, ஏழாமிடமாகி ரிஷபத்திலோ இருந்தால் 'மாரக' குருவாகி இன்னலை விளைவிப்பான். அத்துடன் எத்தனையோ பெண்கள் குருபலன் வராமல் திருமணம் நடக்காமல் துன்பப்படுகிறார்கள். குருபகவான் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை சிம்மராசியில் வரும் பொழுது குடந்தையில் நடக்கும் பெருவிழா 'மகாமகத் திருவிழா' ஆகும்.



சுக்கிரனுக்கு அடுத்த படியாக ஒளி வீசும் கிரகம் வியாழனே. மற்றைய கிரகங்களின் கன பரிமாணத்தின் கூட்டுத் தொகையை விட அதிகமானது. ஒரு தடவை தன்னைத் தானே சுழல பத்து மணி நேரத்திற்கும் குறைவாகவே ஆகிறது. சூரியனுக்கும் பூமிக்கும் உள்ள தூரம் போல் 5 மடங்கு அதிக தூரத்தில் இருக்கின்றது. இக்கிரகம் சூரியனைச் சுற்றி வர 12 வருடங்கள் ஆகின்றன. இதற்கு 12 உப கிரகங்கள் உள்ளன. 8, 9 ஆம் உப கிரகங்கள் வக்கிர கதியால் நகருவது ஓர் அதிசயமாகக் கருதப்படுகின்றது. கிரகங்களில் பெரியது வியாழன்; உரோமர்களால் தேவதைகளுக்கு அரசனாகக் கருதப்பட்டது. JUPITER என்று மழைக்கு அதிபதியாகவும் சொல்லப்படுகின்றது.

நவக்கிரகங்களில் ஐந்தாமிடத்தில் வரும் குருவிற்கு ஏற்ற இரத்தினம் புஷ்பராகம். இது பளிங்குக் கல்லாகவும் வெள்ளைக் கல்லாகவும் கிடைக்கிறது. வைரத்தைப் போலவே தோற்றம் தந்தாலும் சற்று மஞ்சள் கலந்து காட்சியளிப்பது புஷ்பராகமாகும். இதில் நீல நிறம் கலந்து காண்பது கிடைத்தற்கரியது. மஞ்சள் கலந்த வெண்மையும், சுத்த வெண்மையும் உடைய கற்கள் முறையே இரண்டாந்தரம், மூன்றாந் தரத்தையும் சார்ந்தவை. முற்றாக மஞ்சள் நிறம் கொண்ட புஷ்பராகத்திற்கு 'கனக புஷ்பராகம்' என்ற சிறப்பு பெயரும் உண்டு. இக்கற்கள் தென் தமிழ் நாட்டில் குறிப்பாக திருச்சி, கோவை மாவட்டங்கள் மற்றும் மலைப் பகுதிகளில் கிடைக்கின்றன. தஞ்சையில் 'வல்லம்' என்னும் இடத்திலும் கிடைக்கின்றன. பல வகையான கூழாங்கற்களுடனும், பாறைகளுடனும் இவை கலந்து காணப்படுகின்றன. 'மாக்கல்' என்று கூறப்படும் 'ஜிப்சம்' வகைக் கற்களில் சேர்ந்தே இவை வருகின்றன.

**கல்லை அணிவதால் ஏற்படும் பலன்கள்:**

1. புத்திர தோஷங்கள் நீங்கும்.
2. மந்திர சித்திகள் உண்டாகும்.
3. வேத ஞானம், மெய்யறிவு ஏற்படும்.
4. செல்வாக்கு, பட்டம், பதவி, விருது கிட்டும்.
5. சிறந்த ஆசான்களாக விளங்குவார்கள்.
6. உடல் நோய்கள் நீங்கும்.
7. ஆயுள் விருத்தி உண்டாகும்.
8. பகை ஏற்படாது.

சுப கிரகமான வியாழனை பின்வருமாறு துதிக்கலாம்.

**குருபகவான் காயத்திரி:**

*வ்ருஷபத்வஜாய வித்மஹே*
*க்ருணி ஹஸ்தாய தீமஹி!*
*தந்நோ குரு ப்ரசோதயாத்!!*

**துதி:**


*தேவாநாஞ்ச ரிஷீணாஞ்ச குரும் காஞ்சந ஸந்நிபம்*
*பக்தி பூதம் த்ரிலோகேசம் தம்நமாமி ப்ருஹஸ்பதிம்!!*

**தக்ஷிணாமூர்த்தி துதி:**

*கல்லாலின் புடையமர்ந்து நான்மறை ஆறங்க முதற் கற்ற கேள்வி*
*வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய் மறைக்கப்பாவாய்*
*எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டி*
*சொல்லாமற் சொன்னவரை நினையாமல் நினைத்து பவத்தொடக்கை வெல்வாம்!*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலுக்கடியில் கண்டுபிடிக்கப்பட்ட கிளியோபாட்ராவின் அழகிய அரண்மனை








கடலுக்கடியில் நூதனசாலை


சிந்தனையில் கிளியோபட்ரா

பிரான்ஸ் தொல்பொருள் துறையினர் எகிப்தின் அலெக்ஸ்சான்டிரியா துறைமுகத்திற்கு அருகில் கடலுக்கு அடியில் புதிய அரண்மனையைக் கண்டு பிடித்துள்ளார்கள். இந்த அரண்மனை கிளியோபாட்ரா வாழ்ந்த அரண்மனையாக இருக்கலாம் என திடமாக நம்பப்படுகின்றது. இதை ஒரு ஆழ் கடல் நூதன சாலையாக உருமாற்றும் பணி நிறைவடையும் நிலையில் உள்ளது. கி. மு. 69 ஆம் ஆண்டில் பிறந்த ஏழாம் கிளியோபாட்ராவுக்கு ஒன்பது மொழிகள் பேசவும் எழுதவும் தெரிந்திருந்ததுடன் கணிதம்உட்பட வானியலிலும் புலமையுடையவராகத் திகழ்ந்துள்ளாள். கடல் அலைகள் மற்றும் இயற்கையின் சீற்றத்தினால் அரண்மனையின் பல பகுதிகள் அழிவுற்று காணப்பட்டாலும் அரண்மனையின் நூல்நிலையத்தில் கிளியோபாட்ரா சிந்தனை செய்யும் தோற்றத்தில் அமைந்த அழகிய சிலை ஒன்று மிகுந்த ஆர்வத்தைத் தூண்டுவதாக இருக்கின்றது. இது உலகின் முதலாவது கடலுக்கடியிலான நூதனசாலையாகும்.


சுழியோடிகள் ஆய்வு


அலெக்ஸ்சான்டிரியா கடல் பகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2000 ஆண்டுப் பழைமைச் சிறப்புடன் திருவாரூர் 'பெரிய கோயில்'

சென்னையிலிருந்து சுமார் 290 கி. மீ. தொலைவில் அமைந்திருக்கின்றது திருவாரூர் திருக்கோயில். திருவாரூர் என்ற சொல்லுக்கு எங்கும் சிவரூபத் திருவருள் கூடிய இடம் என்று பொருள்படும்.

திருவாரூர் திருக்கோவில் 2000 ஆண்டுகள் பழைமையானது என்று ஆராய்ச்சியாளர்கள் மதிப்பிடுகின்றனர். இங்குள்ள சிவன் சுயம்பு மூர்த்தியாக அருள்பாலிக்கிறார். தியாகராஜர் என்றால் 'கடவுள்களுக்கெல்லாம் ராஜா' என்று பொருள். தியாகராஜர் கோயில், ஆலயங்களுக்கு எல்லாம் முதன்மையானதாக விளங்குகின்றது. திருவாரூர் திருமூலட்டானம் என்றும் திருவாரூர் பூங்கோயில் என்றும் அழைக்கப்படுகிறது. திருவாரூரின் சிவனுக்கு வான்மீகிநாதர் என்று பெயர். பாம்புப்புற்றில் எழுந்தருளிய சிவலிங்கம். தியாகராஜர் என்றும் மங்கலப்பெயர் உள்ளது.

ஒன்பது ராஜ கோபுரங்கள், 80 விமானங்கள், 12 பெரிய மதில்கள், 13 மிகப்பெரிய மண்டபங்கள், 15 தீர்த்தக்கிணறுகள், மூன்று நந்தவனங்கள், மூன்று பெரிய பிரகாரங்கள், 365 லிங்கங்கள் (இவை வருடத்தின் மொத்த நாட்களை குறிப்பதாக சொல்கிறார்கள்), 100 க்கும் மேற்பட்ட சன்னதிகள், 86 விநாயகர் சிலைகள், 24 க்கும் மேற்பட்ட உள் கோயில்கள் என பிரமாண்டமாக விளங்குகிறது. இக்கோயிலை பெரியகோயில் என்றும் சொல்வர்.

பண்டைய சோழ மண்டலத்தின் ஒருபகுதியே திருவாரூர் பிரதேசமாகும். கரிகாலன் கி.பி. 50 முதல் 95 வரை ஆண்டதாக வரலாற்றாசிரியர்கள் தெரிவிக்கின்றனர். கரிகாலனுக்கும் முற்பட்ட புராண காலச் சோழர்களான முசுகுந்தன், கன்றுக்காக மகனைக் கொன்ற மனுநீதிகண்ட சோழன் வாழ்ந்த இடமாக கூறப்படும் இடம் திருவாரூர் ஆகும். 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட சோழர்கள் ஆட்சியில் கட்டப்பட்டிருக்கலாம் என்ற கருத்து வலிமை பெற்றிருக்கிறது. கண்டராதித்ய சோழனின் மனைவியான செம்பியன் மாதேவி இக்கோவிலை கற்றளிக் கோவிலாக மாற்றியதாகவும், பின்னர் குலோத்துங்க மன்னர்கள் காலத்தில் பெரியதாக விரிவாக்கப்பட்டதாகவும் வரலாறு கூறுகிறது.

சோழ அரசர்கள் முடிசூட்டிக் கொள்ளும் ஐந்து ஊர்களுள் திருவாரூரும் ஒன்று. (மற்றைய ஊர்கள் காவிரிப்பூம்பட்டினம், உறையூர், செய்ஞலூர், கருவூர்).

திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வராலும் பாடப்பெற்றது திருவாரூர். இக்கோயில் 63 நாயன்மார்களில் இருபத்து மூவருக்குத் தொடர்புடைய தலமாகும்.

கோயிலில் சோழர்கள், பாண்டியர்கள், விஜயநகர வேந்தர்கள் ஆகியோரின் கல்வெட்டுகள் மொத்தம் 65 உள்ளன.

நாள்தோறும் ஆறு கால பூஜைகள் நடைபெறுகின்றன. பங்குனிப் பெருவிழாவும் சித்திரை வசந்தோற்சவமும் ஆடிப்பூரமும் சிறப்புடையன. எல்லா விழாக்களும் மாதாந்திர உற்சவங்களும் முறையாக நடைபெறுகின்றன.

பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை தான் சிவாலயங்களில் பிரதோஷ பூஜை நடத்தப்படும். ஆனால் இங்கு தினமும் மாலையில் பிரதோஷ பூஜை நடத்தப்படுகிறது. இதை 'நித்திய பிரதோஷம்' என்பார்கள்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

திருவாரூர் கோயில் ஒரு பெரும் வளாகம். கோயிலின் நாற்புறமும் சுமார் 30 அடி உயரமுள்ள உயர்ந்த மதில்களுடன் விளங்குகிறது. ராஜகோபுரம் சுமார் 120 அடி உயரமுள்ளது. தெற்கு வடக்காக 656 அடி அகலமும், கிழக்கு மேற்காக 846 அடி நீளமும், மொத்தம் ஐந்து வீதிப் பிரகாரங்களும் கோயிலுக்கு அழகு சேர்க்கின்றன. கிழக்குக் கோபுரவாயில் வழியாகச் செல்லும்போது, விநாயகர், முருகன் கோயில்கள் இருபுறமும் காணப்படுகின்றன. பின்னால் பிரமநந்தி எழுந்தருளியுள்ளார். மழை வேண்டி நீர் கட்டுவதும், பசுக்கள் பால் தராதவிடத்து நன்கு கறக்க அறுகுசாத்தி அதைப் பசுக்களுக்கு உண்ணக் கொடுப்பதும் இன்றும் மக்களிடையேயுள்ள நம்பிக்கையும் பழக்கமுமாகும்.

முதல் பிரகாரத்திலுள்ள மகிஷாசுரமர்த்தினி பிரதான துர்க்கையாகும். மேலும் இரண்டு துர்க்கை சந்நிதி முதல் பிரகாரத்தில் உள்ளன. இரண்டாம் பிரகாரத்தில் நான்கும், கமலாம்பாள் சந்நிதியில் ஒன்றும் ஆக மொத்தம் எட்டு துர்க்கை சந்நிதிகள் காணப்படுகின்றன. கோயிலின் மேற்கு கோபுர நுழைவாயிலில் ஆஞ்சநேயர் சந்நிதி உள்ளது. இவரை வழிபட்டால் தொலைந்த பொருள் கிடைக்கும் என்பது நம்பிக்கை. அம்மன் சந்நிதியின் உள்பிரகார விநாயகர் சந்நிதியில், ஐயப்பனும் அருள்பாலிக்கிறார்.

இத்தலத்து சண்முகரை வழிபட்டால் பகை விலகும். நீலோத்பலாம்பாளை வழிபட்டு அர்த்தஜாமத்தில் நைவேத்தியம் செய்து பால் சாப்பிட்டால் குழந்தை வரம் கிடைக்கிறது. பிரிந்த தம்பதிகள் ஒன்று சேருவதும் நிகழ்கிறது. ருணவிமோசனப் பெருமானை வழிபட்டால் கடன் தொல்லை, உடற்பிணிகள் விட்டு விலகும்.

நவக்கிரகங்கள் இங்கு நேர்கோட்டில் சிவனை நோக்கியபடி அமைந்துள்ளன. தியாகராஜர் கோயிலில் 84 விநாயகர்கள் உள்ளனர். இவர்களில் நால்வருக்கு தனி சிறப்பு உண்டு. திருவாரூரில் மூலவரை வன்மீகநாதர் என்ற திருப்பெயரிட்டு அழைக்கின்றனர். இவர் தலையில் பிறைச்சந்திரனை சூடியுள்ளதைப் போல, இத்தலத்து நாயகி கமலாம்பிகையும் சந்திரனை நெற்றியில் சூடியிருக்கிறாள். கலைமகள், மலைமகள், அலைமகள் ஆகிய முப்பெரும் தேவியரின் அம்சமாக விளங்குகிறாள். வலக்கரத்தில் மலர் ஏந்தியும், இடது கரத்தை இடையில் வைத்தும், கால்களை யோகாசன நிலையில் அமைத்தும் ராணி போல் காட்சி தருகிறாள்.

சிவன் கோயில்களில் தேவாரம் பாடியதும் 'திருச்சிற்றம்பலம்' எனக் கூறி முடிப்பார்கள். ஆனால், சிதம்பரம் கோயிலுக்கும் முந்தைய கோயில் திருவாரூர் எனக் கருதப்படுவதால், இந்தக்கோயிலில் மட்டும் தேவாரம் பாடி முடித்ததும், 'திருச்சிற்றம்பலம்' என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதில்லை. சிவபெருமான் இத்தலத்தில் மட்டும் 364 திருவிளையாடல்கள் நிகழ்த்தியுள்ளார்.

தியாகராஜர் கோயிலில் அம்பிகையான நீலோத்பலாம்பாள் தனி சந்நிதியில் அருள்பாலிக்கிறாள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரஸ்வதி வீணை வைத்திருப்பது வழக்கம். ஆனால், திருவாரூர் சிவன் சந்நிதி பிரகாரத்தில் வீணை இல்லாத சரஸ்வதியை தவக்கோலத்தில் காணலாம். இவள் சிவனை நோக்கி தவமிருக்கிறாள்.

இக்கோயிலில் இரண்டு சண்டேசுவரர் சந்நிதிகள் உள்ளன. 1) எமசண்டர் - எமனே சண்டராக அமர்ந்திருக்கிறான். 2) ஆதிசண்டர் - (சண்டேஸ்வரர்)

தியாகேசர் சந்நிதியில் தேர் வடிவில் ஒரு விளக்கு உள்ளது. இங்குள்ள பஞ்சமுக வாத்தியம் சிறப்பானது. ஒன்று தாமரைப்பூப் போலவும், மற்றையது எவ்வித அடையாளமுமில்லாமலும், நடுவில் உள்ளது பெரியதாகவும் இருக்கும். மான் தோலால் செய்யப்பட்டது. இது ஒவ்வொரு முகத்திலும் தனித் தனியாக அடிக்கப்படும் போது ஏழு முறையும், ஐந்திலும் சேர்ந்து அடிக்கும்போது முகத்திற்கு ஒன்றாக ஐந்து முறையும் அடிக்கப்படும்.

இங்கு வாசிக்கப்படும் நாதஸ்வரம் மிகப் பெரியது. இக்கோயிலிலுள்ள ஆயிரங்கால் மண்டபம், கல்தூண்களை மட்டுமே உடையது. விழாக்களின்போது அவற்றின் மீது பந்தல் அமைத்துக் கொள்வர். இம்மண்டபத்தின் பெருமையை சேக்கிழார் பாடியுள்ளார்.

ஒருமுறை இந்திரனுக்கு அசுரர்களால் ஆபத்து ஏற்பட்டது. அதை முசுகுந்த சக்கரவர்த்தி என்பவரின் உதவியுடன் இந்திரன் சமாளித்தான். அதற்கு கைமாறாக முசுகுந்த சக்கரவர்த்தியிடம் 'என்ன வேண்டும்?' என கேட்க, திருமால் தன் நெஞ்சில் வைத்து பூஜித்த விடங்க லிங்கத்தைக் கேட்டார். தேவர்கள் மட்டுமே பூஜிக்கத்தக்க அந்த லிங்கத்தை ஒரு மானிடனுக்குத் தர இந்திரனுக்கு மனம் வரவில்லை. தேவசிற்பியான மயனை வரவழைத்து, தான் வைத்திருப்பதைப்போலவே 6 லிங்கங்களை செய்து அவற்றைக் கொடுத்தான். முசுகுந்தன் அவை போலியானவை என்பதைக் கண்டு பிடித்து விட்டார். வேறு வழியின்றி, இந்திரன் நிஜ லிங்கத்துடன், மயன் செய்த லிங்கங்களையும் முசுகுந்தனிடம் கொடுத்து விட்டான். அவற்றில், நிஜ லிங்கமே திருவாரூரில் உள்ளது. மற்ற லிங்கங்கள் சுற்றியுள்ள கோயில்களில் உள்ளன. இவை 'சப்தவிடங்கத்தலங்கள்' எனப்படுகின்றன. 'சப்தம்' என்றால் ஏழு. திருவாரூரில் 'வீதிவிடங்கர்', திருநள்ளாறில் 'நகர விடங்கர்', நாகப்பட்டினத்தில் 'சுந்தர விடங்கர்', திருக்குவளையில் 'அவனி விடங்கர்', திருவாய்மூரில் 'நீலவிடங்கர்', வேதாரண்யத்தில் 'புவனி விடங்கர்', திருக்காரவாசலில் 'ஆதி விடங்கர்' என்ற பெயர்களில் விடங்க லிங்கங்கள் அழைக்கப்படுகின்றன. இந்த லிங்கங்கள் கையடக்க அளவே இருக்கும். சப்தவிடங்கத்தலங்கள் உள்ள கோயில்களில் சுவாமியை 'தியாகராஜர்' என்பர்.

தியாகராஜ சுவாமிக்கு தினமும் அபிஷேகம் கிடையாது. இந்திரன் பூஜித்த சிறிய மரகதலிங்கத்திற்கு (வீதி விடங்க லிங்கம்) தான் காலை 8.30, 11மணி, இரவு 7 மணிக்கு அபிஷேகம் நடக்கும். அபிஷேகத்திற்கு பின் சிறிய வெள்ளிப்பெட்டியில் மலர்களுக்கு நடுவே இந்த லிங்கம் வைக்கப்படும். அதன் மேல் வெள்ளிக் குவளை சாற்றி, அதிகாரிகள் முன்னிலையில் பெட்டி பூட்டப்படும். மற்ற நேரங்களில் பூட்டிய இந்த பெட்டி தியாகராஜரின் வலதுபுறத்தில் இருக்கும்.

ஆறு சிவத்தலை விராட புருடனின் ஆறு ஆதாரங்கள் என்று போற்றுவது சைவமரபு. அம்முறையில் திருவாரூர் மூலாதாரத்தலம். ஐம்பூதத் தலங்களில் பிருதிவித்தலமாகும். அதாவது பூமிதலமாகும்.

கோயில் ஐந்து வேலி, குளம் ஐந்து வேலி, ஓடை ஐந்து வேலி என்ற பழமொழி மூலம் இதன் சிறப்பை உணரலாம். (ஐந்து வேலி - 1000 அடி நீளம் 700 அடி அகலம்) இத்தலத்தின் கோயில், கமலாலயக் குளம், இறைவனுக்குச் சார்த்தப்பெறும் செங்கழுநீர் மலரோடை இவை ஒவ்வொன்றும் ஐந்துவேலி பரப்புடையது.

## திருவாரூர் தேர்

மாசி மாத அஸ்தத்தில் கொடி ஏற்றி பங்குனி மாதம் ஆயில்ய நட்சத்திரத்தில் தேரோட்டம் நடைபெறுகிறது. 'திருவாரூர் தேரழகு' என்றும் 'திருவாரூர் தேரசைவது போல் அசைகிறான்' என்ற பழமொழியும் நாட்டு மக்களிடம் திருவாரூர் தேர் பற்றிய பிம்பத்தை ஏற்படுத்தி வைத்திருக்கிறது. 'ஆழித்தேர் வித்தகனே நான் கண்டது



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆரூரே' என்று திருநாவுக்கரசர் சொல்கிறார். அவர் காலம் ஏழாம் நூற்றாண்டு. இதன் மூலம் ஏழாம் நூற்றாண்டிற்கு முன்பே தேர்த்திருவிழா நடந்து வருவதை அறியலாம். தமிழகத் தேர்களில் திருவாரூர் தேரே பெரியதாகும். இதனால் இதனை 'ஆழித்தேர்' என்று அழைக்கின்றனர். 'ஆழி' என்பது சக்கரமாகும். 1926 ஆம் ஆண்டு தேரோட்டத்தின்போது ஏற்பட்ட தீ விபத்தில் திருவாரூர் தேர் முழுவதும் எரிந்தது. இரண்டு நாட்கள் எரிந்ததாக கூறப்படுகின்றது. பின்னர் 1928 ஆம் ஆண்டு புதுத்தேர் உருவாக ஆரம்பித்து, 1930 ஆம் ஆண்டு மார்ச் மாதம் மூன்றாம் திகதி மீண்டும் ஓடியது. இன்று காணும் தேர் இதுவாகும். அலங்கரிக்கப்படாத ஆழித்தேரின் உயரம் 30 அடியாகும். விமானம் வரை தேர்ச்சீலைகளால் அலங்கரிக்கப்படும் பகுதி 48 அடி; விமானம் 12 அடி; தேர்க்கலசம் 6 அடி என அலங்கரிக்கப்பட்ட தேரின் உயரம் 96 அடியாகும். இரும்பு அச்சுக்கள், சக்கரங்கள் உள்பட அலங்கரிக்கப்படாத மரத்தேரின் எடை சுமார் 220 தொன்களாகும். இதன் மீது 5 தொன் எடையுள்ள பனஞ்சப்பைகளும், 50 தொன் எடையுள்ள மூங்கில்களும்; சுமார் 10 தொன் எடையுள்ள சவுக்கு மரங்களும் பயன்படுத்தப்பட்டு அலங்கரிக்கப்படுகின்றன. நான்கு வடங்களும் ஒவ்வொன்றும் சுமார் 425 அடி நீளம் கொண்டவை. வடம் இழுக்கப் பயன்படும் கயிற்றின் சுற்றளவு 21 அங்குலமாகும். முன்பெல்லாம் தேர் நகர்ந்து ரத வீதிகளைச் சுற்றிவர ஒரு மாதம் கூட ஆகும். மொத்த ஊர்களும் கலந்துகொண்டால் தான் தேர் நகரமுடியும். இப்போது தேர் இழுக்க ஊர்க்கூட்டங்கள் வருவதில்லை.

இத்தலம் மொத்தம் நான்குத் தீர்த்தங்களைக் கொண்டது. 1. கமலாலயம் - இது தேவதீர்த்தம் எனப்படுகிறது. 2. சங்கு தீர்த்தம் - இது ஆயிரங்கால் மண்டபத்தின் அருகிலுள்ளது. இதற்கு அமுததீர்த்தம் என்றும் பெயர். 3. கயா தீர்த்தம் - இது ஊருக்கு அப்பால் கேக்கரை என்ற இடத்தில் உள்ளது. 4. வாணி தீர்த்தம் - (சரஸ்வதி தீர்த்தம்) மேற்குப் பெரிய பிரகாரத்தில் சித்திரசபை மண்டபத்திற்கு எதிரில் உள்ளது.

திருவாரூருக்குள் நுழைகையிலேயே கமலாலயம் என்ற குளம் கண்ணில் படுகின்றது. குளத்துக்கு காவேரியில் இருந்து நீர் வந்து மறுபக்கம் வழிந்து மீண்டும் காவேரிக்கே சென்றுவிடும் வகையில் வடிகால் அமைக்கப்பட்டுள்ளது. கமலாலயத்தின் குளத்தின் மத்தியில் உள்ளது யோகாம்பாள் சமேத நாகநாத சுவாமி கோயிலாகும். பிரதோஷ காலத்தில் இங்கு வந்து வழிபடுவது மிகச் சிறந்த பலன்களைத் தரும். இந்த குளம் தஞ்சை நாயக்கர் காலத்தில் வெட்டப்பட்டது. இப்போதும் இந்த குளத்தின் நில உரிமை மன்னர்களின் வம்சாவளியினரிடமே உள்ளது.

தியாகேசருக்கு பக்கத்தில் இரண்டு வாள்கள் உறையிட்டு வைக்கப்பட்டிருக்கும். பண்டைய காலத்தில் அரசர்கள் வாள்களை தெய்வசக்தி உடையவாளாக கருதினர். அவற்றிற்கு வழிபாடும் செய்தனர். தெய்வத்திடம் இருந்து தங்களது வாள்களை பெற்றுப் போருக்குச் செல்லும் மரபும் உண்டு.

- பஸ்தியாம்பிள்ளை ஜோண்சன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கதிர்காமம் சமாது மட பட்டயம்

க. தங்கேஸ்வரி பி.ஏ தொல்பொருளியல் சிறப்பு

(சென்ற இதழ் தொடர்ச்சி)

**கதிர்காம சாதுமட பட்டயம் முன்புறம் வருமாறு:**

சூரிய - சந்திரர் குறியீடுகள் நடுவில் வேல் கீறப்பட்டுள்ளது. நடுவிலே கதிர்காமம் என்பது 'கெதிாகாம' என எழுதப்பட்டது. இரு புறமும் காந்தருவர் இருவர் பறப்பது போலும், வலப்புறம் பிள்ளையாரும் நடுவிலே திருவாசிக்குள் முருகன், வள்ளி தெய்வானை அம்மன்களுடன், மயிலுடனும் இடப்புறம் மாணிக்க கங்கையும் வரையப்பட்டுள்ளது. மாணிக்கக் கங்கைக்குள் மீன்கள் வேறு ஜீவராசிகளும் காணப்படுகின்றன.

அடுத்த படியாக நவ வீரர்கள் ஒன்பது பேரும் எதிர் எதிராக ஒரு புறம் நால்வரும் மறுபுறம் ஐவரும் வாள்களைக் கையிலேந்தி நிற்கும் (நடப்பது போன்ற) நிலையில் வரையப்பட்டுள்ளனர். நவ வீரர்களின் பெயர்கள் குற்று இடப்படாத எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளது. அவை வருமாறு:

விளதி வீரன - வினதி வீரன்

வீாமாததாண்டன - வீரமாக்த்தாண்டன்

வீாகெமபிரன - விரகெம்பீரன்

விாபூவுனா - வீரமுஷணன்

வீாதுாநான - வீரதுரங்கன்

வீாபூசஙகன - வீரபுஜங்கன்

வீாதுாகூான - வீரதூசூரன்


வீாபாகு தெவன - வீரபாகுதேவன்

வீாவசநன - வீரவச்சநன்

இதற்கு கீழே பட்டய வரிகள் 18 வரிகள் ஒழுங்கற்ற குற்று இடப்படாத எழுத்துக்களால் தொடர்கிறன.

பிள்ளையார் சுழியுடன் தொடர்ந்து ஆண்டு, திகதி, தமிழ் எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளன. அதன்படி பட்டயத்தில் எழுதப்பட்டுள்ள திருத்தமற்ற, குற்று இடப்படாத முறையில் எழுதப்பட்டவையும் சரியாக வாசிக்கப்பட்டு எழுதியவையும் கீழ்வருமாறு:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1. த எனபயக ஆணடு விரேதஇருதி வருச மசி ததி 1000 700 301
1731 ஆம் ஆண்டு விரோதகிருதி வருசம் சித்தி(ரை)
2. ணா மாதம யடு செவாயக கிழமை ளன கனு
ரை மாதம் 15 செவ்வாய்க் கிழமை நாள் அனுஷ
3. வுநடதேதிர முமது திகையும கூடின புண்ணிய
நட்செத்திரமும் துதிகையும் கூடின புண்ணிய
4. தினததிலே கதிரகாம சுவாமி யா கதிநவி அவாகள
தினத்திலே கதிர்காம சுவாமி யர் கதிர்நவி அவர்கள்
5. சனை தியில மடம பழனி அய்யான கயில முதலி
சன்னதியில் மடம் பழனி அய்யனார் கயிலை முதலி(யார்)
6. யாா நல்ல தமபி முதலியாா முனனிலயாக
யார் நல்லதம்பி முதலியார் முன்னிலையாக
7. கொழமபுககு ஓடி வநத பண வணககாநாவோ----
கொழும்புக்கு ஓடி வந்த பண வண்க்கர் நாடு வெ
8. ளளாழா மடெருளயிசலாமான மஞாககாய ரன
வெள்ளாச் செட்டிகள் இசுலாமான மரைக்காயர்
9. சஙவததிர சனமுமயினச மம தியாயி சநதிரான சூ
சங்குவத்திர சனமும் சமாதியாகி சந்திர சூரியன்
10. ரி யாள உளள மடடுமே வாரத தெததம பண
(ரியான்) உள்ள மட்டும் வாரத் தெத்தம் பண்ணி குடுத்த
11. பரிசாவது கொழுமபுககு ஓடி வநத பண வணக கா
பரிசாவது கொழும்புக்கு ஓடி வந்த பணவணக்காரும்
12. நா பபண வணககாா ஓணணுகடு காலயிஞருயால விழுககாடு
நாப்பண வண்ணக்களும் ஒண்ணுக்கு கால் இனாரு பால விழக்காடு
13. குடுப பொமாகமும குததகா மதுா ககு யா தாமமாருவ
குடுப்போமாகவும் இந்த தன்மத்திற்கு யாதாகிலுமொருவர்
14. இட கூவ பண்ணின போகள தமிழவன ஆஞல கெஙகைக
இடையூறு பண்ணின் போக்கள தமிழவன் ஆனால் கெங்கைக்க
15. ரையிலே மகாபாதகஙக வள பணனி வதாழ நதிலே
(க)ரையிலே மகாபாதகங்களை பண்ணிய தாழமதிலே
16. போ வாாகள இசலாமமானவாகள ஆஞல மகக நதி
போவார்கள் இசுலாம்மானவர்கள் ஆனால் மக்கநதி(லே)
17. லே பளள யை யிடித்த தொழருதிலெ பொவாாகள இ
லே பள்ளியை யிடித்த தொழுநதியிலே போவார்கள் (இ)
18. இப்படி சமமதிதது எழுதிக குடுதத படடையம
இப்படி சம்மதித்து எழுதிக் குடுத்த பட்டயம்

இரு பக்கங்களிலும் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

**வலப்பக்கம்**

மதிசூதநன - காசுபதி. மகேசன
மதிசூதனன் - காசுபதி - மகேசன்

**இடப்பக்கம்**

ககைளயிமுதலியார - ள ம ன
கனகளயி முதலியார். தன
அருளபபு முதலியார் -
அருளப்பு முதலியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இப்பட்டய விளக்கம் (சாசன விளக்கம்) வருமாறு:**

ஐம்பொன்னாலான இந்த சமாது (சமாதி) மட பட்டயம் என்பது சுமார் 4 கிலோ எடையுடையது. இதன் மேற்பகுதியில் தொங்க விடுவதற்கு ஏற்ற வகையில் செய்யப்பட்டுள்ளது. சுமார் 12 அடி நீளமும், 8 அடி அகலமும் உடையது. 1731ஆம் ஆண்டிலே பொறிக்கப்பட்ட இப்பட்டையம் (சாசனம்) மறைத்தே வைக்கப்பட்டுள்ளது. கதிர்காமம் கந்தசுவாமி கோயிலில் இன்று கப்புறாளை எனப்படும் சிங்கள பூசகர்கள் பூசை செய்தாலும், இவர்களது உரிமை வம்சாவளியானது எனக் கூறப்படினும், ஆதியில் கதிர்காமத்தில் பிராமணப் பூசகர்களே பூசை செய்துள்ளனர் என்ற விடயம் இப் பட்டயத்தின் மூலம் தெளிவாகத் தெரிகிறது.

**பட்டயத்தின் முன்புறம் -**
**வாசிக்கப்பட்ட சரியான வாசகம்**
**பட்டயத்தின் வரிகளுடன் வருமாறு:**

*1731 ஆம் ஆண்டு விரோகித வருஷம் சித்திரை மாதம் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நாள் அனுஷ நட்சத்திரமும் திதியும் கூடின புண்ணிய தினத்தில் கதிர்காம சுவாமியார் கதிர்நவி அவர்கள் சன்னதியில், மடம் பழனி அய்யனார் கயிலை முதலியார், நல்லதம்பி முதலியார் முன்னிலையில் கொழும்புக்கு ஓடிவந்த பணவணக்கார நாடு வெள்ளாளச் செட்டிகள், இசுலாமான மரைக்காயர், மளசடங்குப் பத்திரசனம் சமாதியாகி சந்திர - சூரியர் உள்ள மட்டும் தாராதெத்தம் பண்ணி (தாரை வார்த்து) குடுத்த பரிசாவது கொழும்புக்கு ஓடி வந்த பணவணக்கார நாப்பணவணக்காரர் ஒண்னுக்கு பால விழக்காடு குடுப்போமாகவும் இந்த தன்மத்திற்கு (தர்மத்திற்கு) யாதாகிலுமொருவர் இடையூறு பண்ணல் போகள்ள, (போகயில) தமிழவன் ஆனால் கெங்கைக்கரையில் மகாபா தங்கள் பண்ணினதாக முற்றத்தில (நகரத்தில் என கொள்ளலாம்) போவாக்கன். இசுலாமானவர்கள் ஆனால் மக்கநதியில் பள்ளியினை இடித்த தொழுவத்திலே போவார்கள். இப்படி சம்மதித்து எழுதிக் கொடுத்த பட்டயம்*

*மதிசூதனன், காசுபதி, மகேசன்,*

*கனகளாயி முதலியார், அருளப்பு முதலியார்.*

**பட்டயத்தின் விளக்கம் வருமாறு:**

பட்டயத்தின் முதல் மூன்று வரியில் ஆண்டு நட்சத்திரம், மாதம், திகதி, திதி கூறப்படுகின்றது. ஐந்தாவது வரியில் கதிர்காம சுவாமிகள் கதிர்நவி அவர்கள் சன்னதி மடம் எனப்படுகிறது. கதிர்காம சுவாமியை முஸ்லிம்களும் வழிபட்டுள்ளனர். அதாவது இஸ்லாம் ஆன முஸ்லிம் எனலாம். அவர்கள் கதிர்நவி என வழிபட்டுள்ளனர். செட்டிகள் இவர்களை பணவணக்கார நாடு வெள்ளாளச் செட்டிகள் என அழைத்தனர். இங்கு மலையாளச் செல்வாக்கு அதிகமாக காணப்படுகின்றது. நாடு வெள்ளாளச் செட்டிகள், மளசங்டகு பத்திரர், தாரா கொத்தம் பண்ணி, குடுத்த, தன்மம், போகள போன்றன மலையாள சம்பிரதாயமாக இருந்துள்ளது. செட்டியார்கள் மலையாளத்தைச் சேர்ந்தவர்கள். அதேபோல இசுலாம் மதத்திற்கு மாறியவர்களும் இங்கு வழிபட்டுள்ளனர். மளசடங்கு பத்திரர் என்போரும் மலையாளச் சாதியினராவர். இவர்கள் எல்லோரும் கதிர்காம சமாதிமட உரிமையாளராக இருந்துள்ளனர். பணவணகார நாடு வெள்ளாளச் செட்டியார் என்பது மலையாள செட்டிகளையே குறிப்பதாகும்.

இவர்கள் எல்லோரும் வெள்ளைக்காரரின் ஆக்கினைக்கு பயந்து கொழும்புக்கு ஓடி வந்தவர்கள். இவர்களுக்கு இவ்வுரிமை ஒன்னுக்கு ஒன்னாக பல விழுக்காடு (பல சந்ததியினருக்கு) கொடுக்கப்பட்டு இந்த தர்மத்திற்கு தீங்கு செய்பவர்களுக்கு தண்டனையும் வழங்கப்பட்டது. தமிழரானால் அதுவும் இந்துவானால் கங்கைக்கரையில் மகாபாதகம் பண்ணினவர்களாகவும் இசுலாமானவர்கள்

> **கதிர்காமத்தில் பிராமணப் பூசகர்களே ஆதிகாலத்தில் பூஜை செய்துள்ளனர் என்பதை தெளிவுபடுத்தும் பட்டயம்.**

மக்கநதியிலே பள்ளிவாசலை இடித்து, நரகத்திற்கு போவார்கள் என சாபமிட்டு எழுதப்பட்டுள்ளது. எழுதிக் கொடுத்தவரின் பெயர் கீழே குறிப்பிட்டுள்ளது. மதிசூதனன், காசுபதி, மகேசன் எனவும் கனகளயி முதலியார், அருளப்பு முதலியார் எனவும் கொடுத்தோர் விபரம் கூறப்பட்டுள்ளது. சாட்சிகளாக நல்லதம்பி முதலியார், கயில முதலியார், பழனி அய்யன் போன்றோர் பெயர்கள் முன்னரே ஆறாவது வரியில் கூறப்பட்டுள்ளது.

மேலும் பளனி அய்யர் கதிர்காமத்தில் பூசை செய்ததாகவும் அவரது பரம்பரையினர் உரித்துடையவர்கள் எனவும் இப்பட்டயம் கூறுகிறது. இப்பழனி அய்யர் பரம்பரையினர் இப்பட்டையத்திற்கு உரியவர்கள் எனப்படுவர். இதில் வரும் தாரா தெத்தம், போகள என்பதை போன்ற சொற்கள் மலையாளச் சொற்களாகும். இப்பிராமணர்கள் பரம்பரை காசியில் இருந்து வந்தவர்கள். காசிப கோத்திர சன்னியாசிகள் பரத்துவாசர் பரம்பரையில் கௌஷ்டிய குடிகள் எனப்படுவர்.

இராசசிங்க மன்னன் காலத்தில் கல்யாணகிரி சுவாமி, கோயில் திருப்பணியில் இறங்கியிருந்தார். இவர் சிருங்கேரி ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் மடத்திலிருந்து வந்தவர். 'தசநாமிகன்' எனப்படும் வகுப்பு பிராமணர். தசநாமிகளின் கிரி, புரி, பாரதி, சரஸ்வதி, வன, கரண்ய, பர்வத, ஆச்ரம், தீக்குத, பாரதி தீர்த்த என பத்து பிரிவுகள் உண்டு. இந்த பத்து உப பிரிவில் 'கிரி' என்ற பிரிவைச் சேர்ந்தவரே கலியாணகிரி சுவாமிகள் ஆவர். இவரே பின்னர் முத்துலிங்க சுவாமி எனப்பட்டார். ஆகவே ஆதியில் கதிர்காம சுவாமிக்கு பூசை செய்தவர்கள் காசிய கோத்திர சன்னியாசிகள் வழிவந்த பிரா மணர்கள். கோயில் திருப்பணி செய்ததோடு மடத்தையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கட்டியவர் காசி சிறுங்கேரி மடத்திலிருந்து வந்த கல்யாணகிரி சுவாமிகள் ஆகும். பண்டு தொட்டு காசியிலிருந்து வருபவர்களே பூசை செய்வது மரபாகும். (இவர்கள் பற்றிய விபரம் பின்னால் விளக்கப்படும்) இப்பட்டயத்தின் படி பழனி அய்யர் பரம்பரை பூசை செய்துள்ளது என்பது புலனாகிறது.

**பட்டயத்தின் பின்புறம்**

சாதுமட பட்டயம், யாழ்பாண கந்தப்பமுதலியார் கானார்க்கால முது செட்டியார் காரியம்பிள்ளை, முதுமலைப்பெருமால்,உசநெயினாப்பிள்ளை, மரைக்காயர், ஆட்கொன்டா பிள்ளை, காலாப்பிள்ளை, சேதுப்பிள்ளை, கண்யை முதலியார் காரியம், பொப்பாணரோங்கப்பிள்ளை காரியம், ககைப்பச் செட்டியார் காரியம், முதுவெல செட்டியார், சங்கர் அயன் காரியம், நல்லப்பன் பெரிய திருசாமி செட்டியார் காரியம், இரிசப்பசெட்டியார், மயிரிச்சசெட்டியார், சந்திரதாரஅய்யன் காரியம், திருமுடிச் செட்டியார், கோமாப்ப செட்டியார் காரியம், திருவனாத பிள்ளை, வயித்தியனாத பிள்ளை, காரியம், அச்சந்ததி விழதான பொன்னம்பலச் செட்டியார் காரியம் முத்தையன், சின்னார்மச் செட்டியார், திருவெங்கிடநாதன் பாலகிருஷ்ண பிள்ளையவர்கள் காரியம், சின்ன அகமது மரைக்காயர் மாப் பிள்ளை முதலியார் காரியம், கறுத்தா அவுகாப்பிள்ளை மாணாக்க சதாசிவம்கன்னத்துறைச் செட்டியார் விசவநாதப் பிரமனின் முகமது நெயினா மரைக்காயர் காரியம், ஒசு நெயினார் இசுப்ப முதலியார் காரியம், தொப்புத்துறை தில்லைநாயக்க பண்டா, வெங்கிடபதியா பிள்ளைகாரியம், கூடலூர் அய்யம் பெருமாள் செட்டியார் காரியம், இராமசங்கர் செட்டியார் காரியம் உசானாலெவ்வை, மாப் பிள்ளை மரைக்கார் காரியம், செய்யது மீரா அலியார் மரைக்கார் காரியம், மகமது மீரா அகமது நயினா லெவ்வை காரியம் இசனாசாலிப்பிள்ளை சின்னா செட்டியார் காரியம், தலுங்குப்பிள்ளை மீராலெவ்வைவீரளகு முதலியார், காரியம் ஆறுமுகம் உசனாபிள்ளை மரைக்காயர், காரியம் அகமது லெவ்வை மரைக்காயர், பாட்டாளி செங்காவலப்ப முதலியார் காரியம் சுப்பிரமணியம், சூரிய மூர்த்திமுதலியார் அனந்தப்பன் பிருசால்வை மரைக்காயர் காரியம், சின்னத் தம்பி செட்டி காரியம், மாமு நயினாப்பிள்ளை சின்னத்தம்பி செட்டியார் சுப்பிரமணியம் இராமநாத முதலியார், யாழ்ப்பாணம் அழகக் கோன் முதலியார், காரியம் வினை தீரித்தான் வயித்தியநாதன் என 37 வரிகளுடன் முடிவுறும் இரண்டு பகுதிகளிலும் குறிப்பிட்டுள்ள அனைத்துப் பெயர்களும் சாட்சிகளாக இல்லா விட்டாலும் எழுதும்போது இருந்தவர்க்கும் அல்லது வெள்ளைக்காரர் சுட்டு அழித்ததற்கு பயந்து ஓடி வந்தவர்களுமாகலாம். கொழும்புக்கு ஓடி வந்தவர்கள் என்ற சொல் பல இடங்களில் பாவிக்கப்பட்டுள்ளது.

அதற்கு கீழ் முன்புறம் போலவே கையொப்பம் எழுதப்பட்டுள்ளது. மேலும் மாதுறை குலசேகர முதலியார் எனவும் கூறப்பட்டுள்ளது.

இச்செப்புப் பட்டயத்தை எழுதியோர் பெயராக பட்டயத்தின் கீழ் உள்ள பெயர்கள் இருக்க வேண்டும். யாழ்பாணம் வினாயக மேந்திகி கி.மாச. அய்யன் சின்னத் தம்பி, துளசிநாதன், தோப்புத் துறை சிதம்பரம் செட்டியார், பட்டயத்தின் இடப்பக்க ஓரத்தில் எ.பா.மூதாப்பிள்ளை என இப்பட்டயத்தின் பின்புறமும் முன்புறம்போல எழுதப் பட்டாலும் பல பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பண்பாட்டைப் பேண உருவாக்கப்பட்ட இலங்கைத் தமிழ் மாதர் சங்கமும் கலாலயமும்

அந்நியர் ஆட்சி நம் நாட்டில் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்த 19 ஆம் நூற்றாண்டு காலப்பகுதி அது. அந்நிய பழக்க வழக்கங்கள், கல்வி, கலாசாரப் பண்பாடுகள் காரணமாக எமது வாழ்க்கை முறை மற்றும் கலாசாரம் ஆகியவை பாதிப்படையத் தொடங்கின. அதற்கு முன்னர் 1909 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 4 ஆம் திகதி கொழும்பு மாநகரில் சில தமிழ் மகளிர் இணைந்து இலங்கைத் தமிழ் மாதர் சங்கத்தை ஸ்தாபித்தனர்.

தமிழ் மொழியிலும், தமிழ் பண்பாட்டிலும், இந்திய நுண்கலைகளிலும் கொண்ட தீராத காதலால், அவற்றைப் பேணி வளர்ப்பதே தமது தலையாய குறிக்கோளாகக் கொண்டு அவர்கள் இயங்கினார்கள். இதனால் கலாசார பணியும், சமுதாய சேவையுமே அவர்களுடைய முக்கிய நோக்கங்களாக இருந்தன. 1909 ஆம் ஆண்டு இலங்கைத் தமிழ் மாதர் சங்கத்தை ஆரம்பிக்க உற்சாகமும், உதவியும், உறுதுணையும் அளித்து, அதன் ஸ்தாபக அங்கத்தவராக விளங்கியவர் அந்நியப் பெண்ணான டாக்டர் மேரி ஹெலன் ரண்டம் அவர்கள் ஆவார். இவர் தனது திருமண பந்தத்தின் மூலம் தமிழ் சமுதாயத்தில் ஒருவரானார். தமிழ் சமுதாயத்தின் பண்பாட்டையும், அதிமேன்மையான நோக்கங்களையும் பேணிப் பாதுகாக்க ஒரு சங்கம் அமைக்க வேண்டும் என்ற சீரிய எண்ணத்துடன் செயற்பட்டவர்தான் இவர். அவருடைய உன்னத முயற்சியின் பலனால் உருவாக்கப்பட்ட இலங்கைத் தமிழ் மாதர் சங்கத்தின் முதல் தலைவியான தங்கம்மா சரவணமுத்து வரலாற்றில் இடம்பிடித்தவர். இவ்வுயர்ந்த பணியில் உப தலைவியான எட்வின் நைல்ஸ், செயலாளரான வில்லியம் வேட்ஸ்வத் மற்றும் பொருளாளரான ஜே.சி.வி ரண்டம் ஆகியோர் கைகோர்த்துக் கொண்டார்கள். இலங்கைத் தமிழ் மாதர் சங்கத்தின் வெள்ளி விழாக் கொண்டாட்டத்தின்போது தலைவியான தையல்நாயகி திருநாவுக்கரசு, உப தலைவர்களான என்.சின்னத்தம்பி, டாக்டர் நல்லம்மா சத்தியவாகீஸ்வர ஐயர் மற்றும் ஆர்.ராஜேந்திரா, செயலாளர் டாக்டர் ஐ.டேவிட், உதவிச் செயலாளர் கமலம் கிருஷ்ணதாசன், பொருளாளர் ஆர். சபாநாயகம் ஆகியோர் சங்கத்தின் எழுச்சிக்கு அயராது உழைத்தவர்கள் ஆவார்கள்.

இவ்வாறு சிறப்பு மிக்க இலங்கைத் தமிழ் மாதர் சங்கமானது 1941 ஆம் ஆண்டு அரங்கேற்றிய 'சுபத்திரா அர்ஜுனா' என்னும் நாட்டிய நாடகத்தையும், 1947 ஆம் ஆண்டு அரங்கேற்றிய 'காலவரிஷி' நாட்டிய நாடகத்தையும் யாரும் இலகுவாக மறந்து விடமாட்டார்கள். 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கும்



1925ஆம் ஆண்டில் இலங்கைத் தமிழ் மாதர் சங்க உறுப்பினர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைபவத்திற்கு 'குலௌஸ்டர் கோமகன்' இலங்கை வந்திருந்தார். அவருடைய வருகையை முன்னிட்டு 'Pageant of Lanka' என்னும் பிரமாண்டமான கலை நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. அக்கலை நிகழ்ச்சியில் தமிழ் மன்னனான எல்லாளனின் பெருமையை சித்திரிக்கும் காட்சியை இலங்கைத் தமிழ் மாதர் சங்கம் பொறுப்பேற்றதுடன், அதில் கர்நாடக சங்கீதத்தையும், பரத நாட்டியத்தையும் இணைத்து அனைவரதும் பாராட்டையும் பெற்றது. இவ்வாறான நாட்டிய - நாடகங்களின் வெற்றியும், அதனால் கிடைத்த பாராட்டும், உற்சாகமும் 'கலாலய இசை - நடனக் கல்லூரி' உதயமாவதற்கு காரணமாயிற்று. 1948 ஆம் ஆண்டு இலங்கை பெற்ற சுதந்திரம் காரணமாக ஏற்பட்ட பெருமிதம் மற்றும் தேசிய உணர்வு ஆகியவற்றால் எமது பண்பாடு, கலாசாரம், மொழி, இலக்கியம் ஆகியவற்றை போற்றிப் பாராட்ட வேண்டும் என்ற பேரவா அனைவருக்கும் ஏற்பட்டது.

இதனால் நாட்டில் ஒரு புதிய கலாசார மறுமலர்ச்சி உண்டானது. ஏறத்தாள சம காலத்தில் இலங்கைத் தமிழ் மாதர் சங்கம் கலாலயத்தையும், சைவ மங்கையர் கழகம் இசை நடனக் கல்லூரியையும் கொழும்பு மாநகரிலே நிறுவின. இதனால் இளம் தமிழ் சந்ததியினர் தமது நுண்கலைகளை நுகர்ந்து, அனுபவித்து பயனும் இன்பமும் பெற்றனர்.

இலங்கைத் தமிழ் மாதர் சங்கம் 1948 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதலாம் திகதி கலாலய இசை நடனக் கல்லூரியை ஸ்தாபித்தது. சீமாட்டி நேசமணி குமாரஸ்வாமி, சீமாட்டி புவனேஸ்வரி வைத்தியநாதன், திருமதி.பி.சீ.வில்வராயன், திருமதி. முத்தம்மா விக்னராஜா, திருமதி.கனகம்மா ஆழ்வாப்பிள்ளை, திருமதி.எஸ்.சோமசுந்தரம், திருமதி. மனோன்மணி பாலேந்திரா, திருமதி. லிங்காம்பிகை சச்சிதானந்தன் ஆகியோர் கல்லூரி ஸ்தாபிப்பதற்கு முக்கிய காரண கர்த்தாக்களாக விளங்கியவர்கள்.

திருமதி. லிங்காம்பிகை சச்சிதானந்தன் கலாலயத்தின் முதலாவது அதிபராக பல காலம் சேவை புரிந்தார். இதனால் அவரது உருவப்படம் கலாலயத்தின் பொன்விழா கொண்டாட்டத்தின்போது திரை நீக்கம் செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

கலாலயாவின் ஆரம்ப விழா இலக்கம் 171, ஜெனரல் லேக் வீதியில் அமைந்திருந்த Friend - in - Need Society மண்டபத்தில் நடைபெற்றபோது, கலாலயத்தின் முதல் பரத நாட்டிய ஆசிரியையான விஜயலக்ஷ்மி சண்முகம் பிள்ளையின் மாணவிகள் பரதம் ஆடி சபையோரை மகிழ்வித்தனர். கலாலயம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் சொந்தக் கட்டடம் இல்லாத காரணத்தால் Friend - In - Need Society மண்டபத்திலேயே வகுப்புக்கள் நடைபெற்றன. சங்க அங்கத்தவர்களின் கடுமையான உழைப்பின் பலனாக 1952 ஆம் ஆண்டு இலங்கை அரசிடம் இருந்து 90 வருட குத்தகையில் சங்கத்துக்கு அரச காணி கிடைத்தது. அக்காணியில் அவுஸ்திரேலிய அரசு, இந்திய அரசு,


டாக்டர் மேரி ரட்ணம்


திருமதி. திருநாவுக்கரசு


டாக்டர் சத்யவாகீஸ்வர ஐயர்


திருமதி. சரவணமுத்து


பண்டிட் ஜவஹர்லால் நேரு


ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்புக் கலைக் கழகம் மற்றும் தனியார் பலருடைய நன்கொடைகள் மற்றும் உதவிகள் மூலம் கலாலய மண்டபம் உதயமானது. தற்போது இக்கட்டடம் இலக்கம் 400/2, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு 7 இல் அமைந்துள்ளது.

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட இந்திய பிரமுகரான விஜயலக்ஷ்மி பண்டிட் அவர்கள் 1954 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16 ஆம் திகதி இக்கலாலயத்தை வைபவ ரீதியாகத் திறந்து இலங்கைத் தமிழ் மாதர் சங்கத்தினரின் நீண்ட நாள் கனவை நிறைவேற்றினார்.

''நான் கலாலயத்திற்கு விஜயம் செய்தபோது உங்கள் கலை நிகழ்ச்சிகளைக் கண்டு ஆனந்தம் அடைந்தேன். இக்கலாசார மறுமலர்ச்சி இளம் இலங்கையரிடையே மட்டில்லா மகிழ்ச்சியையும் இன்பத்தையும் நிலவச் செய்யும். ஆடலும் பாடலும் உங்கள் பண்பாட்டுடன் ஒருங்கிணைந்தது. இந்தப் பாரம்பரியச் சொத்து பாதுகாக்கப்பட்டால், அது இலங்கைக்கு பலத்தையும் பயனையும் அளிப்பதோடு, இந்நாட்டிற்கும் மற்றைய நாடுகளுக்கும் இடையே பாலமாகவும் அமையும்'' என ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் 1954 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21 ஆம் திகதி வானொலி மூலம் பிரியாவிடை விசேட செய்தி ஒன்றை அனுப்பினார்.

''1948 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கலாலயத்தில் முதலாவதாக பதிவு செய்யப்பட்ட மாணவி என்ற பெருமை எனக்கு உண்டு'' என்கிறார் கலாலயத்தின் தற்போதைய அதிபரான திருமதி. தயா மகிந்தா அவர்கள். இக்கல்லூரியானது பரத நாட்டியத்துக்கும், இன்னோரன்ன இந்திய நடன வகைகளுக்கும் ஒரு முன்னோடியாக விளங்கியது. அக்காலங்களில் இலங்கை அரசும், கலாசார அமைப்புக்களும் ஒழுங்கு செய்யும் விசேட வைபவங்களிலும், வெளிநாட்டு தலைவர்கள் மற்றும் பிரமுகர்கள் விஜயம் செய்யும்போதும் ஏற்பாடு செய்யப்பட்ட உயர் மட்ட கலை நிகழ்ச்சிகளிலும் கலாலயத்தின் நாட்டிய - நாடகங்களே அதிகம் இடம் பிடித்தன. 1952 ஆம் ஆண்டு பிரித்தானிய மகாராணி



சுதந்திர தினமான 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி, இலங்கைத் தமிழ் மாதர் சங்கம் அரங்கேற்றிய 'Pageant of Lanka' வில் 'எல்லாள அரசனின் அரண்மனைக் காட்சி'



இலங்கைத் தமிழ் மாதர் சங்கம் 1932 ஆம் ஆண்டு ஸ்ரீநேரு, அவரது மனைவி கமலா, மகள் இந்திரா, ஸ்ரீமதி சடோபாத்யாய மற்றும் ஸ்ரீமதி சரோஜினி நாயுடு ஆகியோரை கொழும்பு பார்ன்ஸ் பிளேஸில் உள்ள 'மகேந்திரா' இல்லத்தில் வரவேற்று உபசரித்தபோது எடுத்த படம்.

இரண்டாம் எலிசபெத் ராணி இலங்கைக்கு விஜயம் செய்தபோது 'Discovery of Adam's Peak' என்ற நிகழ்ச்சியை கொழும்பு கலைக்கழகம் அரங்கேற்றியது. அதில் கலாலயத்தின் 'முதலாம் பாதயாத்திரை' என்ற நாட்டிய - நாடகமும் இடம்பிடித்தது. பின்னர் அணிசேரா நாடுகளின் தலைவர்களின் மாநாட்டுக்கு வருகை தந்திருந்த பாரதப் பிரதமர் ஸ்ரீ ஜவகர்லால் நேரு, அலி சஸ்த்ராமித்யோ போன்றோரை வரவேற்க 'தர்சனம்' என்னும் நாடகம் கலாலய மண்டபத்தில் அரங்கேறியது. மேலும் 1973 ஆம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்த கலா ஷேத்ரா அதிபர் ருக்மணி தேவி அம்மையார் கலாலயத்துக்கு விசேட விருந்தினராக வருகை தந்திருக்கிறார்.

ஆகவே இலங்கையின் வரலாற்றிலும், தமிழ் மக்களின் பாரம்பரியத்துடனும் தமிழ் மாதர் சங்கமும் கலாலயமும் பின்னிப் பிணைந்துள்ளன. தமிழ் மாதர் சங்கமானது நூற்றாண்டைக் கடந்தும், கலாலயமானது பொன் விழாவைக் கண்டும் பெருமை கொள்கின்றன. அவற்றின் சேவை மேலும் தமிழ் மக்களுக்குக் கிடைக்க வேண்டும் என வாழ்த்துகிறோம்.

**உமா பிரகாஷ்**


**கலாலயப் பொன் விழா வாழ்த்துப்பா**
இயற்றியவர் - பாலாம்பிகை நடராஜா

*மொட்டவிழ்த்து மணம் பரப்பும்
நறுமலர்கள் போலே
இசை நடனக்கலை கமழும்
கல்லூரி கலாலயம்
இலங்கைத் தமிழ் மாதர் சங்கம்
வித்திட்ட கலைக்கூடம்
உயர்கலைக்கு வழிகண்டு
ஓங்கி வளர் கேந்திரம்
மருவு பெருமை மாதரின்
ஆற்றலுக்கே சொந்தம்
வாணி அருளால் ஐம்பது
ஆண்டுகள் பணிபுரிந்தே
மாண்புடன் பொன்விழா
கொண்டாடும் திருநாளிலே
நல்லார் எல்லாரும் ஆசி
கூறி வாழ்த்துவோமே
பாங்குடன் பல்லாண்டு
புகழ்மேவ சிறப்புடன்
சிந்தைக் கினிய கலாலயம்
வாழியவே
வாழிய வாழிய வாழியவே*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரியாத புதிர் எழுத்துக்கள்

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக தொல்லியல்துறையினர் உலகில் மிகத்தொன்மையான அதாவது 2500 வருடங்கள் பழைமையான எழுத்துருக்களை துருக்கியில் கண்டுபிடித்துள்ளார்கள். சுமேரியர்களால் உருவாக்கப்பட்ட ஆப்பெழுத்துக்களின் தொடக்ககால எழுத்துவகையான படஎழுத்துக்களைச் சார்ந்ததாக இருக்கக்கூடும் எனக் கருதப்படுகிறது. இவ்வகை எழுத்துக்கள் ஹுரியன் வகை மொழியை எழுதுவதற்குப் பயன்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது. இவ்வகை எழுத்துக்கள் குறித்த ஆய்வுகள் தொடர்ந்து மேற் கொள்ளப்பட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரிம்னா பள்ளத்தாக்கு

## உலக தொழிநுட்ப புரட்சியின் ஆரம்ப இடம்

பூமித் தாயின் மடிக்குள் கோடானு கோடி செல்வங்கள் மட்டும் மறைந்து கிடக்கவில்லை. பல்லாயிரக் கணக்கான மனித வரலாறுகளும் மறைந்து கிடக்கின்றன என்றால் மிகையில்லை. அத்தகையதொரு வரலாற்றைத் தருவது ரிம்னா பள்ளத்தாக்கு ஆகும். (Timna valley)

இஸ்ரேலின் தென் பகுதியில் அறபாவுக்கு (Arabah) தென் மேற்கில் அக்கபா குடா மற்றும் (Gulf of Aqaba) எலற் நகருக்கும் சுமார் 30 கிலோ மீட்டர் வடக்காக அமைந்திருப்பது ரிம்னா பள்ளத்தாக்கு ஆகும். செம் உலோக வளம் பொருந்திய இப்பிரதேசம் கி.மு. ஆறாம் சகத்திரளில் இருந்து (Millenium) மனிதர்களால் சுரங்கங்கள் அமைப்பதன் மூலமாக தீவிரமாகத் தோண்டப்பட்டு இக் கனிமம் வெட்டி எடுக்கப்பட்டிருக்கின்றது.

கற்காலத்தில், கி.மு. 5ஆம் சகத்திரள்வின் முற்பகுதியில் எகிப்தியர்கள் செம்பு உலோகத்தைக் கண்டு பிடித்து, ரிம்னா பள்ளத்தாக்கில், உலகின் முதலாவது செம்பு உலோக உற்பத்தியை ஆரம்பித்தார்கள்.

வரலாற்றின் மிக முக்கியமாக செம்பு உலோக சுரங்கத் தொழில் குறித்து மிக விஸ்தாரமாகக் காட்டுவதற்கு எகிப்தியர்களும் ஏனையவர்களும் வேண்டிய ஆதாரங்களை விட்டுச் சென்றிருக்கின்றார்கள்.

கி.பி. 14ஆம் நூற்றாண்டில் ரிம்னா பள்ளத்தாக்கில் செம்பு உலோக வளம் நிரம்பியிருக்கிறது என அதனைச் சுற்றி வாழ்ந்தோர் கேள்விப்பட்ட வேளை, எகிப்தியர்கள் ரிம்னா பள்ளத்தாக்கின் ஊடாக வர்த்தகப் பாதையை நிறுவினார்கள். அதே வேளை வட மேற்கு அராபியக் குடா நாட்டில் இருந்து மிடியனைற் மக்களும் (Midianites) உள்ளூர் அமலேகைற் மக்களும் (Amelekites) எகிப்தியர்களோடு சேர்ந்த செப்பு சுரங்க வேலைகளில் ஈடுபட்டு வந்தார்கள். கி.மு. 12ஆம் நூற்றாண்டில் இந்த தொழிலில் எகிப்தியர்களின் ஆதிக்கம் வீழ்ச்சி கண்டாலும் மிடியனைற் மக்கள் அங்கு தொடர்ந்து தொழிலில் ஈடுபட்டனர்.

அவர்தம் முன்னேற்றகரமான கலாசாரத்தினால், பல்லாயிரக்கணக்கான ஆடம்பர தொல் பொருட்கள் மட்டுமன்றி, ஒரு பெரும் பொக்கிஷமான ஹதர் ஆலயத்தையும் கண்டுபிடிக்க முடிந்தது.

ரோமன் ஆட்சிக் காலத்திலும், கி.பி. முதலாம் இரண்டாம் நூற்றாண்டிலும் இஸ்ரேலியர்களாலும், பாலஸ்தீனியர்களாலும் தொடரப்பட்ட சுரங்கத் தொழில் கி.பி. 7ஆம் நூற்றாண்டில் அராபியர்கள் ஆட்சியைக் கைப்பற்றியதன் பின் அராபியக் குடாநாட்டிலிருந்து வந்த உம்மயாட் மக்களாலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வந்தது.

தொழில் நுட்பப் புரட்சியின் ஆரம்ப இடமாக விளங்குவதும் ரிம்னா பள்ளதாக்குதான். அப்போது மக்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது நாளாந்த வாழ்வில் உலோகத்தை உபயோகிக்க ஆரம்பித்தார்கள். உலோகத்தை தோண்டி எடுக்க எகிப்தியர்கள் உலோகத்தாலான உபகரணங்களைப் பாவித்ததுடன் குழாய் வடிவிலான அம்புகளை, சுமார் 30 மீட்டர் தூரம் நிலத்துக்குள் செலுத்தும் படியாகச் செய்து உலோகத்தை எடுத்தார்கள். இவை அக்காலத்தில் புரட்சிகரமான நடவடிக்கைகளேயாகும்.

1930களில் இது குறித்து விஞ்ஞான ரீதியாக கவனமும் பொது மக்களது ஆர்வமும் பெருகவே, ரிம்னா பள்ளத்தாக்கில் நிகழ்ந்த செம்பு உலோகச் சுரங்க நடவடிக்கைகளை ஆராய்ந்த நெல்சன் குளுக் இச்சுரங்கங்கள் சொலமன் மன்னனின் (கி.மு. 10ஆம் நூற்றாண்டு) காலத்துக்கு உரியது எனக் குறிப்பிட்டு 'சொலமன் மன்னனின் சுரங்கங்கள்' எனப் பெயரிட்டார். ஆனால் இந்தச் சுரங்க வேலைகள் கி.மு. பத்தாம் நூற்றாண்டுக்கு உரியதல்ல என பின்னாளில் நடைபெற்ற ஆராய்ச்சிகள் எடுத்துக் காட்டின.


**அட்டைப்பட விளக்கம் :**

ரிம்னா பள்ளத்தாக்கின் மேற்கு செங்குத்துப் பாறைப் பகுதியில் இயற்கையாக உருவாகிய பாறை வளைவுகள். செங்குத்து மண் பாறைகளில் காணப்பட்ட வெடிப்புகள் வழியாக நீர் பல நூற்றாண்டு காலமாக வேகமாகப் பாய்ந்ததன் காரணமாக இந்த வகை அரிய தோற்றங்கள் கொண்ட வளைவுகள் உருவாகின என்று நம்பப்படுகின்றது.



1959ஆம் ஆண்டில் லண்டன் பல்கலைக்கழக கல்லூரியின் அகழ்வாராய்ச்சி உலோக ஆய்வு கழகப் பணிப்பாளர் பேராசிரியர் பெனோ ரொதென்பேர்க், அரபா ஆய்வுக் குழுவுடன் ரிம்னா பள்ளத்தாக்கிற்கு ஆய்விற்கு சென்றார். அவர்கள் அங்கு ஆழமான ஆராய்ச்சிகளை மேற்கொண்டார்கள்.

1990 ஆம் ஆண்டளவில் 10 ஆயிரம் செப்பு சுரங்கங்கள் உருக்கும் உலையுடன் கூடிய முகாம்கள், பாறை ஓவியங்கள், வணக்க இடங்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயங்கள், ஆபரணங்கள் மற்றும் உலகில் வேறெங்கும் அதற்கு முதல் கண்டுபிடிக்கப்பட்டிராத பல புதைபொருட் களையும் கண்டுபிடித்தார்கள்.

பேராசிரியர் பென்னின் அகழ்வாய்வும், பிரதேச மீளாய்வும் கற்காலத்தின் பிற்பகுதியில் இருந்து மத்திய காலம் வரை, ரிம்னா பள்ளத்தாக்கின் நீண்டதும் சிக்கலானதுமான செப்பு உற்பத்தி வரலாற்றை புனரமைப்புச் செய்ய வழி வகுத்தது.

ரிம்னா பள்ளத்தாக்கின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செப்புச் சுரங்கங்களுக்கு அப்பால், அதன் அற்புதமான கல் உருவங்களும், மண் உருவங்களும் பூகர்ப்பவியலாளர்களையும் இயற்கையை நேசிப்பவர்களையும் மிகவும் கவர்ந்து உள்ளன.

மண் பெரும்பாலும் சிவப்பாகக் காணப்பட்டாலும், அது மஞ்சள், ஒரேன்ஜ், வெளிர் நிறம், கடும் மண்ணிறம், அல்லது கறுப்பு ஆகிய நிறங்களில் காணப்படுகின்றது. செப்பு சுரங்கங்களுக்கு அருகில் வெளிர் பச்சை அல்லது நீல மண்ணையும் காண முடியும். நீரும் சுழல் காற்றும் அங்கு சில தனித்துவமான வடிவங்களையும் உருவாக்கி இருக்கின்றது.

ரிம்னா பள்ளத்தாக்கில் மிகவும் கவனத்தை ஈர்ப்பதும், பிரசித்தமான உருவமாகத் தோன்றுவதும் சொலமனின் தூண்களாகும். இந்தத் தூண்கள் இயற்கையான அமைப்புகளாகும். பல நூற்றாண்டுகாலமாக நீரின் வேகமான ஓட்டம், மண் செங்குத்துப் பாறையின் வெடிப்பின் ஊடாக பாய்ந்ததின் மூலம் ஏற்பட்ட தனித்துவமான தூண் வடிவிலான அமைப்புகளின் தொடர்களாக இவை மாறியுள்ளன.

1930களில், இதனை பார்வையிட்ட அமெரிக்க அகழ் வாய்வாளரான நெல்சன் குளுக், இந்தத் தூண்கள் மன்னன் சொலமன் காலத்துடன் தொடர்புடையது எனக் கூறி, 'சொலமன்' என்ற பெயரையும் சூட்டினார். இந்தக் கருத்து ஏற்கப்படவில்லை. இதற்கு நிரூபணம் இல்லை. எனினும் இப்பெயர் புழக்கத்தில் வந்ததுடன், அங்கு ஆய்வுக்கும் தூண்டியது. இங்கு சம காலத்தில் ஒரு தேசிய பூங்காவும் உள்ளது.

இங்கு மிகவும் கருத்தைக் கவரும் வகையில் தோன்றும் இயற்கை உருவம் இராட்சத காளான் உருவமாகும். இயற்கையால் உருவாக்கப்பட்ட மண்பாறை உருவம் இதுவாகும். அங்கு வேறு பல 'காளான்'களும் காணப்படுகின்றன.

குறிப்பிட்ட பகுதி, கி.மு. 12, 13 ஆம் நூற்றாண்டில், எகிப்திய செப்பு உற்பத்தி இடமாகும். முன்னுள்ள வேலி இட்ட பகுதி ஒரு வேலைத்தலமும், களஞ்சியப் பகுதியும் உள்ள இடமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னால் உள்ளது செப்பு உருவாக்கும் உலை. இடப் பக்கம் உள்ளது சுரங்கத் தொழிலாளர்களின் கோயில். இடது புறத்தில் மலைக்கு மேல் மேலதிக இடங்கள் உள்ளன. இவை தற்போது அகழ்வாய்வு செய்யப்படுகின்றன. இதில் வேலைத்தலங்கள், மூலப்பொருட்களின் சேமிப்பு அறைகள் ஆகியன உள்ளன.

கரி, செப்பு, களிமண், நீர் மற்றும் மூலப்பொருட்கள் கல் அடுப்பில் போடப்பட்டு, நெருப்புக்கு காற்றைத் தள்ள துருத்திகள் உபயோகிக்கப்பட்டன. அதன் மூலம் செம்பு கனியத்தை உருக்கி, செப்புக் கட்டிகளைச் செய்தனர். அந்த உலை 10 - 12 மணித்தியாலங்களில் 5 கிலோ கிராம் உலோகத்தை உற்பத்தி செய்தது.

வேலைத் தலங்களுக்கு கிழக்காக ஒரு வணக்கத்தலம் உள்ளது. இதில் எகிப்திய சுரங்கத் தொழிலாளர்கள் வழிபாடு செய்வர். அங்கு முன் புறத்தில் ஒரு பாத்திரமும், அதன் பின் பக்கத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட கற்களும், மத்தியில் அர்ச்சனைப் பொருட்களை வைக்கும் மேசையும் உள்ளது. அத்துடன் அங்கு அர்ச்சிக்கப்பட்ட மிருகங்களின் எலும்புத் துண்டுகள், பழங்களின் எச்சங்கள், களிமண் மற்றும் கல்லால் ஆன பாத்திரங்கள் ஆகியன இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டன.

பள்ளத்தாக்கின் மேற்கு செங்குத்துப் பாறைப் பகுதியில் உருவாகி நின்ற வளைவுகளையும் காணலாம். சொலமனின் தூண்கள் மற்றும் காளான் போன்று இவை தனித்துவமானவை அல்ல. உலகின் வேறு பகுதிகளிலும் இவை காணப்படுகின்றன.

சொலமனின் தூண்களுக்கு முன்பாக, 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த எகிப்திய சுரங்கத் தொழிலாளர்கள், ஹதர் பெண் தெய்வத்திற்கு ஒரு கோயிலைக் கட்டினார்கள். அங்கு நடத்தப்பட்ட ஆய்வில், முத்திரைகள், ஆபரணங்கள், கலைப்பொருட்கள் உட்பட நூற்றுக்கணக்கான எகிப்திய பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன. கோயில் நீள் சதுரமாக இருந்தது.

எகிப்தியர்களின் காவல் தெய்வமான ஹதர், சுரங்கத் தொழிலாளர்களின் காவல் தெய்வமாக விளங்கியது. கோயில் கலையிலும், கட்டிடக் கலையிலும் ஹதர் தெய்வத்தின் குறிப்புகள் உள்ளன.

இக்கோயில் கி.மு. 14ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் எகிப்திய சுரங்கத் தொழிலாளர்களுக்காக கட்டப்பட்டது. நில நடுக்கத்தினால் அழிவுற்ற கோயிலை 13ஆம் நூற்றாண்டில் திரும்பவும் கட்டினார்கள். இக்கோயிலில் கண்டெடுக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான பண்டைய எகிப்திய சித்திர எழுத்துகள், உருவச் சிலைகள், ஆபரணங்கள் மற்றும் தொல்லியற் பொருட்கள், அகழ்வாராய்ச்சியாளர்களுக்கு முக்கிய தகவல்களை வழங்கியுள்ளன.

பள்ளத்தாக்கு எங்கும் பல பாறை ஓவியங்களைக் காண முடியும். இவை அங்கு ஆட்சி செய்த பல்வேறு







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





மன்னர்களின் காலத்தில் செதுக்கப்பட்டவையாகும். மிக பிரபலமான ஓவியங்களை எகிப்தியர்கள் செதுக்கியுள்ளனர். மாடுகள் இழுக்கும் தேர்களில் கோடரிகள் மற்றும் கவசங்கள் கொண்டு எகிப்திய போர் வீரர்கள் செல்வதான பாறை ஓவியங்களும் உள்ளன. சுரங்கங்களில் இருந்து சுமார் இரண்டு மைல்களுக்கு அப்பால் அமைந்திருக்கும் தேர்களை பார்வையாளர்கள் சென்று பார்ப்பதற்கு ஒரு வீதியும் உள்ளது.

மேற் கண்ட பகுதியில் ஒரு காலத்தில் நிலவிய கலாசாரம் மற்றும் பல்வேறு வாழ்க்கை முறைகள், சடங்குகள் என்பவற்றை அறிவதற்கு அகழ்வாராய்ச்சியாளர்கள் இச் செதுக்கல் சிற்பங்களையும் ஓவியங்களையும் பயன் படுத்தினர். அத்துடன் அவர்களுக்கு அங்கிருந்த மரங்கள், மிருகங்கள் மற்றும் மக்களின் வேலை, வாழ்க்கை போன்றன குறித்தும் தகவல்களை வழங்குகின்றன. இங்கு றொதன்பேர்க் கண்டு பிடித்த விடயங்களை பொது மக்களுடன் பகிர்ந்து கொள்ளும் பொருட்டு, யூத தேசிய நிதியைப் பயன்படுத்தி ரிமோ பள்ளத்தாக்கு திறக்கப்பட்டது. அங்கு செல்வதற்கான வீதிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இப்பள்ளத்தாக்கு பரிசுத்த வேதாகமத்தில் குறிப்பிடப்படவில்லை. ஆனால் வேதாகம காலத்தில் செப்பு உலோக சுரங்கத் தொழில் நடைபெற்றுள்ளது. 35 சதுர மைல் பரப்புள்ள இப்பகுதியில் உயர்ந்த மலைகளும் உள்ளன. இங்கு உற்பத்தி செய்யப்பட்ட உருக்கு செப்புக் கட்டி, உபகரணங்கள் செய்வதற்காக வேறு இடங்களுக்கு கொண்டு போகப்பட்டன. செப்பு உலோகம், பித்தளை உலோகத்திற்கு உபயோகமாக இருந்ததினால் பண்டைய உலகத்தில் அது மிகவும் முக்கியமான உலோகமாக விளங்கியது. ரிம்னா பள்ளத்தாக்கில் 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட சுரங்க அம்புகள் கண்டுபிடிக்கப்பட்டன.

ரிம்னாவில் மூன்று வகையான மட்பாண்டங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. வழமையான சாதாரண சில்லின் உதவியுடன் செய்யப்படும் மட்பாண்டங்கள் கையால் செய்யப்பட்ட மட்பாண்டங்கள் மற்றும் கையால் செய்யப்பட்ட கரடுமுரடான மட்பாண்டங்கள் என மூன்று வகையாகும். சாடிகள், நீர் அருந்தும் பாத்திரங்கள், சமையலுக்கு உதவும் பானைகள், சட்டிகள் போன்றவை மற்றும் வீட்டுத் தேவைக்கான பாத்திரங்கள் இவற்றில் அடங்கும்.

- கங்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# தென் இந்திய சாஸ்திரீகத்தில்
# புல்லாங்குழல்

- சுபாஷினி பத்மநாதன் -

இந்திய வாத்திய இசை வரிசையில் உன்னத வாத்தியமாக மிளிர்வது புல்லாங்குழல் ஆகும். இன்றைய இசை அரங்கங்களாயினும், நாட்டிய அரங்கங்களாயினும் புல்லாங்குழலின் பங்களிப்பும் அதன் முக்கியத்துவமும் தனித்துவம் மிக்கது. அதன் ஒலிநாதம் உள்ளத்தைத் தொட்டு நெகிழ வைக்கும் இயல்பானது. தமிழரின் வாழ்க்கை முறையுடனும், இந்து மத வரலாற்றுப் பாரம்பரியத்துடனும் இணைந்த வாத்தியமாக புல்லாங்குழல் விளங்குகின்றது.

இந்திய வாத்திய இசை வரலாற்றில், ஆன்மீக வாத்தியக் கருவிகளில் ஆத்ம திருப்தியை இயல்பாகவே நல்கும் வாத்தியமாக புல்லாங்குழல் இடம் பிடித்துள்ளது.

பண்டைய இந்திய வாத்தியங்கள் தத, ஸுஷிர, அவனந்தா மற்றும் கண என நான்கு முக்கிய பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுக் காணப்பட்டன. இவை முறையே தந்தி இசைக்கருவிகள் ஆன நரம்பிசைக் கருவிகளாகவும், தோலிசைக் கருவிகளாகவும் மற்றும் கஞ்சக் கருவியான கைத்தாளக் கருவிகளாகவும் வேறுபடுத்தப்பட்டு கையாளப்பட்டன. இன்றும் அதே வரையறைத் தொகுப்பு இந்தி இசையில் வரலாற்றில் பெரிதும் கையாளப்பட்டு வருகின்றன.

தென் இந்திய இசை வடிவில் மிக உன்னதமான இடத்தைப் பிடித்துள்ள இப் புல்லாங்குழல் இசை வாத்தியம், ஆன்மீகம் செறிந்ததும் தெய்வீக தொடர்புகளுடன் சரித்திர சங்கீதவியலில் புராண, இதிகாச கால வரலாற்றுப் பின்னணியுடன் ஒன்றித்துள்ள ஒன்றாகும். இவ்வரிய இசை வாத்தியம் ஆங்காங்கே பன்சீரி, வேணு, வன்சி, குசால் மற்றும் முரளி ஆகிய பண்டைய பெயர்களைக் கொண்டு விளங்குகின்றது. அத்துடன் இவ்வாத்தியம் துநோவர் மற்றும் நடை என வேத காலத்தில் குறிப்பிட்டு அழைக்கப்பட்டதாக அறிகின்றோம்.

புல்லாங்குழல், காலத்தில் பழைமையானதாக விளங்கியபோதும் அதன் வடிவமைப்பும் பாவனைப் பிரயோகமும் பெரிதளவில் பெரும் மாற்றம் பெற்றதாக இன்றுவரை அறிந்திலோம். பண்டைய காலத்தில் புல்லாங்குழல் பௌத்த மக்களாலும் பக்தி வழிபாட்டிற்குப் பயன்படுத்தப்பட்டு வந்தது. ஆலயங்களிலும், சிற்பக்கலைக் கூடங்களிலும் இதன் முக்கியத்துவத்தை உயிரோட்டமான சிற்பங்கள் மூலம் காட்டியுள்ளார்கள். ஆலயச் சிற்பங்களிலும், ஸ்ரீ கிருஷ்ணபிரானின் வழிபாட்டு உருவச்சிலையிலும் புல்லாங்குழல் வாத்தியம் காணப்படுகிறது.

பௌத்த மத சிற்பங்களில் செழுமையை எடுத்துக் காட்டும் கந்தகாரிலும் மற்றும் எல்லோரா, அஜந்தா சிற்பங்களிலும் புல்லாங்குழல் பாவனை இடம் பெற்றிருக்கக் காணலாம்.



ஓசை, ஒலி வளம் செறிந்ததும் இலகுவில் எடுத்துச் செல்லக் கூடியதுமான இவ்வாத்தியம் ஒலி நாதத்தால் மனித மனத்தை மட்டுமல்ல உலகின் அனைத்து ஜீவராசிகளின் மனத்தையும் தொட்டு ஈர்க்கக்கூடிய காந்த சக்தி வாய்தது. மேலும் ஏறத்தாள மனித குரல் வளத்தை ஒத்ததாக இதன் நாதம் விளங்குகின்றது. நீண்ட உருளையாகத் தோன்றும் இப்புல்லாங்குழல் ஒரு பக்கம் மூடப்பட்டும் ஏறத்தாள எட்டுத் துளைகளைக் கொண்டதாக விளங்கும். விரல் பயன்பாட்டிற்கு மட்டும் இவ்வெட்டுத் துளை பெரிதும் பங்களிப்பினை வழங்குகின்றது. விரல்கள் பயன்பாட்டுத் துளைத் தவிர ஊதும் துளையானது விரல் பயன்பாட்டுத் துளைகளில் இருந்து சற்றுத் தள்ளி தனித்துக் காணப்படுவது வழமையாகும். அவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாறே குழல்களின் நீளம், நிறம், உள்வட்ட விட்டப் பருமன் என்பன குழலுக்கு குழல் மாற்றம் பெற்று விளங்குகின்றன. இந்த வகையில் அடிப்படை அமைப்பு மாறாத விடத்தும், பரிமாண ரீதியில் அதன் தோற்றம் மாற்றம் பெற்று விளங்குகின்றது.

சாதாரணமாக எட்டு அங்குலம் தொடக்கம் இரண்டரை அடி நீள வடிவமைப்புக்குள் உள்ளதாக புல்லாங்குழல் காணப்படுகின்றது.

ஊதும் துளையினூடாக காற்று விசை அழுத்தம் கொடுக்கப்பட்டு விரல் துளையினூடாக நாத ஒலியானது விரல் அசைவுப் பாவனையூடாக மட்டுப்படுத்தப்படுகின்றது. கீழ் நிலைச் சுரங்கள் மேல் நிலைச் சுரங்கள் ஆகியன விரல்களின் ஓட்ட நிலைப்பாட்டிற்கு அமைய கட்டுப்படுத்தப்படுகின்றன.

கர்நாடக சங்கீதத்தில் பயன்படுத்தப்படும் புல்லாங்குழல் வாயில் வலது புறமே பெரிதும் வைக்கப்பட்டு ஊதப்படுகின்றது. வலது புற வாயில் சமாந்தரமாக இரு கைகளாலும் ஏந்தியே பயன்படுத்தப்படுகின்றது. இருகைகளின் பெருவிரல்கள் இக்குழலை தாங்கிப்பிடிக்க பெரும் பங்களிப்பை நல்குகின்றன. மூங்கிலினாலான இவ்வாத்தியம் உள் பக்கம் குடையப்பட்டு துளைகள் சீரியவகையில் திரையாகத் துளையிடப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன. துளைகளை விரல்களால் அமுக்கும் பாங்கும் பாணியுமே இவ்வாத்திய ஓசை ஒலி வளத்தை மட்டுப்படுத்துகின்றன. சுரப்பயன்பாடு, கமகப்பயன்பாட்டிற்கு பெரும் பங்களிப்பை நல்குகின்றன.

ஆரம்ப காலத்தில் இக்குழல் இசை வாத்தியங்கள் பல வகை மூலப் பொருட்களினாலே செய்து பயன்படுத்தப்பட்டன. இரும்பு, வெண்கலம், வெள்ளி, தங்கம் போன்ற உலோகங்களினாலும் இவை தவிர தந்தம், செஞ் தந்தம், கருங்காலி போன்றவற்றாலும் அமைக்கப்பட்டிருந்தன. மிகவும் பண்டைய காலங்களில் மூங்கில், சந்தன மரம், வெண்கலம், செங்காலி, கருங்காலியிலுமே குழல்கள் செய்தனர். ஆயினும் மூங்கிலால் செய்யப்படும் குழல்களே உத்தமம் என்றும் வெண்கலத்தால் செய்யப்படும் குழலானது மத்திமம் என்றும் மற்றைய மூலப்பொருட்களால் செய்யப்படும் குழல்கள் அதமம் என்றும் குறிப்பிடப்பட்டன. இன்றுங் கூட புல்லாங்குழல் எனக் கர்நாடக சங்கீதத்தில் பயன்படுத்தப்படுவது மூங்கிலால் செய்யப்பட்ட குழலேயாகும்.

வாத்தியக் கருவியாக விளங்கும் இக்குழல் வாத்தியமானது மூன்று முக்கிய வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளன. முதலாவதாக இடம்பெறுவது இசை அரங்குகளில் பயன்படுத்தப்படும் குழல் வாத்தியமாகும். இது பொதுவாக வாய்க்கு சமாந்தரமாக வலது புறத்திலும் இடது புறத்திலும் பயன்படுத்தப்படும் வாத்தியமாகும்.

இரண்டாவதாக இடம்பெறும் குழலானது இடைக்கால ஆயர் குலத்தினரிடம் பிரபல்யம் பெற்று விளங்கிய வாத்தியமாகும். இதுவே பொதுவாக புல்லாங்குழல் எனக்குறிப்பிட்டு அழைக்கப்பட்டது. மூங்கிலால் செய்யப்பட்ட இக்குழலே இன்று கர்நாடக இசையில் முன்னணியில் உள்ள வாத்தியமாக விளங்குகின்றது. இதனை ஆங்காங்கு ஆயர்குழல் எனக் குறிப்பிட்டு அழைக்கின்றனர். மற்றையது நெடுங்குழல் எனக் குறிப்பிட்டு அழைக்கப்படும் வாத்தியமாகும். இது நீள வாக்கிலும், செங்குத்தாகவும் பயன்படுகின்றது. இத்தகைய குழல் வாத்தியத்தை தமிழல் 'தூம்பு' எனக் குறிப்பிட்டழைப்பர்.

மேலும் குழல் வாத்தியத்தை உஜ்வல வாத்தியம் என்றும் ஜீவ வாத்தியம் என்றும் குறிப்பிட்டு அழைப்பர். உஜ் வாத்தியமானது மனோகர வாத்தியம் என்றும், ஜீவ வாத்தியமானது எக்காலத்திலும் வாசிப்பதற்கு உகந்த வாத்தியம் எனக் குறிப்பிட்டு அழைக்கப்படுகின்றது.

இந்த காற்றிசை வாத்தியமானது உலகளாவிய ரீதியில் எக்கலாசாரத் துறையிலும் காணப்பட்டபோதும், இந்திய இசைக்கு அடுத்ததாக முக்கியமாக மேற்கத்திய இசை உலகிலும் இடம் பிடித்துள்ளது. இந்திய இசையில் இருந்தே இவ்வாத்தியம் மேற்குலகிற்கு சென்று இடம் பிடித்துள்ளதாக நம்பப்படுகின்றது. மேற்கத்திய குழல் வாத்தியமானது பெரிதும் மரத்தால் செய்யப்படுகின்றது. அதன் துவாரங்களின் விட்டம், இந்தியக் குழல்களின் விட்டத்திலும் பார்க்க பெரிதாகக் காணப்படுவதுடன் அக்குழல் வாத்தியம் வெளிப்படுத்தும் ஒலி நாதமானது இனிமையும், ரம்யமும், தத்ரூபமும் கொண்டதாக விளங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலியாட்டம் கலையா ? விளையாட்டா ?

தமிழர்களின் தொன்மையான ஆடற் கலைகளில் ஒன்றாக விளங்குவது புலியாட்டம். இது எந்தக் காலகட்டத்தில் தோன்றியது என்ற சரியான கணிப்பீடுகள் இல்லை. ஆனாலும் கி. மு. 10ஆம் நூற்றாண்டிற்குப் பிந்தைய காலங்களில் தோன்றியிருக்கலாம் எனவும், திருவள்ளுவர் காலத்திலேயே இது ஆடப்பட்டிருக்கிறது எனக் கூறுவாரும் உளர். தமிழர்களால் ஆடப்பட்ட பல ஆடற்கலைகள் அழிந்துவிட்ட நிலையில் ஒரு சில ஆட்டங்கள் மட்டுமே இன்றும் நடந்தேறிவருகின்றன. அவற்றில் முக்கியமானது புலியாட்டம். பாட்டும், வசனமும் இல்லாத மரக்கால் ஆட்டம், பொய்க்கால் குதிரையாட்டம் ஆகியவற்றோடு புலியாட்டமும் தமிழக மக்களின் வாழ்வியலோடு கலந்த நிகழ்த்து கலையாகும்.

தமிழர்களின் பாரம்பரிய அடையாளங்களான நாட்டுப்புறக் கலைகளைப் பாடசாலை, கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு கற்றுக்கொடுத்துவரும் ஆசிரியரான கலைமணி தாரா முரளியிடம் புலியாட்டம் பற்றியும், அதன் தொன்மை மற்றும் தமிழர்களின் வாழ்வியலோடு உள்ள தொடர்பு பற்றியும் உரையாடினோம்.

**புலியாட்டம் என்பது தமிழர்களின் விளையாட்டா, கலையா?**

**நாட்டுப்புறக் கலைமணி தாரா முரளியுடன் ஒரு நேர்காணல்**

-----

**நேர்முகம் பாலமுருகன், சென்னை**



தமிழர்களின் பொழுதுபோக்கிற்காக ஆடப்பட்டவை விளையாட்டுகள். நிகழ்த்தப்பட்டவை கலைகள். இதில் பொழுதுபோக்கு ஆட்டங்களில் ஒன்றாக விளங்கும் பசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலியாட்டம் மற்றும் ஆடுபுலியாட்டம் போன்றவற்றோடு மேடைகளில் நிகழ்த்தப்பட்ட புலியாட்டத்தை தொடர்புபடுத்தக்கூடாது. புலியாட்டம் வேறு, ஆடுபுலியாட்டம் வேறு. வேலையில்லாத நேரங்களில் கிராமங்களில் வசிக்கும் முதியவர்கள் பொது இடங்களில் இன்றும் ஆடுபுலி ஆட்டத்தை விளையாடி வருவதைப் பார்க்கலாம். இந்த ஆட்டத்திலிருந்துதான் சதுரங்க ஆட்டம் தோன்றியது.

ஆனால், புலிபோல் வேடமிட்டு மக்களை மகிழ்விக்க ஆடும் ஆட்டமே புலியாட்டம். தன் உடம்பெங்கும் புலியைப் போன்று வர்ணக் கோடுகளையும் இடுப்பில் ஒரு வாலையும் கட்டிக்கொண்டு தப்பு மேளத்திற்கு ஏற்ப ஆடுவது புலியாட்டம். இன்றும் கோயில் திருவிழாக்கள், அரசு விழாக்கள், ஊர்வலங்கள் போன்ற சூழல்களில் புலிவேட நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது. தஞ்சை, நாகூர் மாவட்டப் பகுதிகளில் வசிக்கும் முஸ்லீம்கள் சந்தனக்கூடு விழாவிற்கு புலியாட்டத்தை கட்டாயமாக ஏற்பாடு செய்கின்றனர்.

பொதுவாக நாட்டுப்புற நிகழ்த்து கலைகளை கலை, இனம், வகை என்றவாறு பாகுபடுத்தினால் புலிவேடம் போடுவது கலையாகவும், ஆடுவது இனமாகவும், வகை என்பது சமூகமாகவும் குறிப்பிடலாம். புலியாட்டத்தில் வேடம், நடனம், ஒட்டம், சங்கிலி புங்கிலி ஆட்டம் என பல வகைகள் உண்டு. புலிவேடமிட்டவர் புலியின் குணாதிசயங்களை அப்படியே உள்வாங்கி வெளிப்படுத்துவார். அப்படி வெளிப்படுத்தும்போது அவருக்கு பாட்டு கிடையாது. ஆனால் புலியின் குணாதிசயங்களை அவர் பாவனைகளாக வெளிப் படுத்துவதற்கு தாள வாத்தியங்கள் உதவிசெய்வது உண்டு. எனவே, புலியாட்டத்தை பாவனை ஆட்ட வகைகளில் ஒன்றாகவும் கருதலாம்.

பரதநாட்டியங்கூட பாவனை ஆட்டம்தான். தாள வாத்தியங்கள் இசைக்க பரதநாட்டியத்தில் எவ்வாறு அடி பிசகாமல் ஆடுகிறார்களோ அதே இலக்கணம் தான் புலியாட்டத்திற்கும் உண்டு. எனவே, இதுபோன்ற ஒற்றுமைகளைக் கணக்கிட்டால் புலியாட்டம் கலையே என்றும் அந்த அடிப்படையிலேயே மக்கள் இதனை ரசித்து வரவேற்றார்கள் என்கிற முடிவுக்கும் வரலாம்.

**புலியாட்டத்திற்கும் சிலம்பாட்டத்திற்கும் ஒற்றுமைகள் உண்டா?**

ஆம்! புலியாட்டம், சிலம்பாட்டம் இரண்டையும் மனம்போன போக்கில் ஆடிவிடமுடியாது. முந்தைய காலத்தில் போர்க் கலைகளில் ஒன்றான சிலம்பாட்டத்தைக் கற்றுக் கொண்டவர்களாலேயே புலியாட்டம் ஆடப்பட்டிருக்கிறது. சிலம்பாட்டத்தைக் கற்றுக்கொள்ளும் குழுவினரில் நன்கு தேர்ச்சி பெற்றவர்கள் மட்டுமே புலியாட்டதைப் பயில்வதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். சிலம்பாட்டத்தில் ஒன்று முதல் நான்கு வரை உள்ள அடிமுறைகள் அப்படியே





புலியாட்டத்திலும் இடம் பெறுகின்றன. அதனால்தான் சிலம்பாட்டதிற்குரிய பக்க இசை அப்படியே புலியாட்டத்திற்கும் பொருந்துகிறது. புலியை வேட்டையாடித் தாக்கவரும் ஆட்டக் கலைஞரும் கம்பால் தாக்க வரும் சிலம்பாட்டக் கலைஞரும் சிலம்பாட்டக் கால் வைப்பு முறைகளை அப்படியே பின்பற்றுகின்றனர். இக் கால்வைப்பு முறையினால் புலியின் மிக மெதுவான பம்முதலையும், மிக விரைந்த பாய்ச்சலையும் இக் கலைஞரால் இவ்வாட்டத்தில் காட்டமுடியும்.

சிலம்பாட்டம் அறிந்த ஒருவர் புலியாட்டத்தை தினமும் ஒரு மணி நேரம் வீதம் கற்றுக்கொண்டால் ஒரே மாதத்தில் மிகச் சிறப்பாக தேர்ச்சி பெறமுடியும். தமிழர்களின் நிகழ்த்து கலைகளில் புலியாட்டத்தையும், சிலம்பாட்டத்தையும் தவிர்க்க முடியாது. புலியாட்டம் பொழுதுபோக்கு கலை என்றால், சிலம்பாட்டம் தற்காப்புக் கலை.

**புலியாட்டக் கலைஞர்கள் அக்காலத்தில் சமுதாய மதிப்புக்குரியவர்களாக கருதப்பட்டார்களா?**

புலியாட்டக் கலைஞர்களுக்கு சோழர்கள் காலத்தில் நல்ல மதிப்பிருந்ததாக கல்வெட்டுகள் மூலம் அறியமுடிகிறது. கோவில்களில் பணியாற்றிவந்த தேவரடியார்களுடன் புலியாட்டக் கலைஞர்களும் இணைந்து வாழ்ந்திருக்கின்றனர். இவர்களுடன் வாணியர், கைக்கோளர், உவச்சர், இடையர், சிவபிராமணர்கள் எனப் பல்வேறு சமுதாயப் பிரிவினரும் ஆடற் பெண்களும் ஒரே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமடைவளாகத்தில் வசித்து வந்ததாக இரத்தினகிரி சிவன் கோயில் கல்வெட்டு குறிப்பிடுகிறது. காஞ்சிபுரம் கச்சபேசுவரர் கோயிலில் உள்ள கல்வெட்டு, அகத்தீசுவரர் கோயில் கல்வெட்டு, திருக்குன்றக்குடி உடைய நாயனார் கல்வெட்டு போன்றவற்றிலும் புலியாட்டக் கலைஞர்களுக்குரிய முக்கியத்துவம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. மேலும், புலியாட்டக் கலைஞர்கள் சிலர் அரசசபை உறுப்பினர்களாகவும் இருந்துள்ளனர். பழுவேட்டரயர்களின் ஆளுகைக்கு உட்பட்ட சிறு பழுவூர் கல்வெட்டுக்களில் இது குறிப்பிடப்பட்டுள்ளது.

**தமிழர்களின் அக்காலத்தைய சமூக உறவு பற்றி புலியாட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறதா?**

ஆட்டம் என்பதே உடல் மொழிதான். நாம் பேசும் தாய்மொழி தமிழ். ஆனால் உண்மையாகப் பார்த்தால் அது இரண்டாவது மொழிதான். முதல் மொழி நமது உடல் மொழிதான். வாயால் பேசுகின்ற மொழி தோன்றுவதற்கு முன்னர் மனிதர்களின் உணர்வுகளையும், உணர்ச்சிகளையும் வெளிக்காட்டுவதற்குப் பயன்பட்டது உடல் மொழிதான். பரத நாட்டியம் முதல் அத்தனை ஆட்டங்களிலும் உடல் மொழி இன்றியமையாத ஒன்றாக இருக்கிறது. அதே பாணிதான் புலியாட்டத்திலும் கடைப்பிடிக்கப்படுகிறது.





தகவல் தொடர்பாளர்கள் ஏழு லட்சம் உடல் சைகைகள் இருப்பதாக உணர்ந்துள்ளனர். ஆய்வாளர்கள் ஐந்தாயிரம் சைகைகளையும், பொருளையும் புலப்படுத்தும் வகையான உடல் அசைவுகளை பட்டியல் செய்துள்ளனர் என்பது வியக்கத்தக்கது. இதில் புலியாட்டத்தில் இமை அசைவுகள் மூலம் 23 மாறுபட்ட உணர்வுகளைப் பிரதிபலிக்க முடிகிறது. மேலும், தலை, முன்கைகள், விரல்கள், கால்கள் மற்றும் பிற உடல் அசைவுகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி ஆயிரக்கணக்கான மனித உணர்வுகளைப் பிரதிபலிக்க முடிகிறது. இந்த உடல் அசைவுகள் மூலம் பிரதிபலிக்கும் அர்த்தங்களும் உணர்வுகளும், உணர்ச்சிகளும் ஆபத்தான காலங்களிலும், போர்க் காலங்களிலும் ஒற்றர்களுக்கு தேவையான சமிக்ஞைகளாக செயல்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த அடிப்படையில் பார்த்தால் புலியாட்டக் கலைஞர்கள் என்பவர்கள் ஆடற்கலைஞர்களாக மட்டுமல்லாது நாட்டின் பாதுகாப்பு உள்ளிட்ட இதர விடயங்களிலும் பயன்படுத்தப் பட்டிருப்பார்கள் என்பது புலனாகிறது.

மேலும், புலியாட்டக் கலைஞர்கள் மூலம் சில சமூக அவலங்களையும் தோலுரித்துக் காட்டிய நிகழ்வுகள் ஏராளம் உண்டு. உதாரணமாக,

*''வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்*
*புலியின்தோல் போர்த்து மேய்ந்தற்று''*

என்கிறார் வள்ளுவர். வலிமையற்ற பசு, புலித்தோலைப் பயன்படுத்திக்கொண்டு மேய்ந்து தன் தேவையை நிறைவு செய்துகொள்வதைப்போன்று, மனதை அடக்க வலிமையற்ற சில தவசிகள் அந்த வேடத்தைப் போட்டுக்கொண்டு வசதியாக வாழ்கிறார்கள் என்பது இதன் பொருள். உண்மையில் பார்த்தால் எந்தப் பசுவும் புலிவேடம் போடுவதில்லை. ஆனால், அப்படிப் போடுவதாக மனிதர்களை எடுத்துக்காட்டி, அதற்கொரு உவமையாக பசுவை எடுத்துக்காட்டுகிறார் வள்ளுவர்.

இதுபோல்

*''புலிக்கணமும் சீயமும் போர்க்களிறும் போல்வார்*
*வலிச்சினமும் மானமும் தேசம்''* என்றும்

*''கொல்முரண் இரும்புலி அரும்புழைத் தாக்கிச்*
*செம்மறுக்கொண்ட வெண்கோட்டு யானை''*

என்று நற்றிணையிலும்

*''மறங்கொள் இரும்புலித் தொல்முரண் தொலைத்த*
*முறஞ்செவி வாரணம்''*

என்று கலிப்பா அடிகளும் புலி பற்றிய பாடல்களைக் கொண்டுள்ளன. இப் பாடல்களின் கூற்றுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவும் புலியாட்டத்தின் மூலம் மக்களுக்கு கலைகள் உணர்த்தப்பட்டிருக்கின்றன.

**பரத நாட்டியத்தில் அடவுகள் உள்ளதுபோல் புலியாட்டத்திலும் அடவுகள் உள்ளதா?**

புலியாட்டக்காரர் ஒருவர் புலியின் செய்கைகளை, இயல்புகளை தன் இரு கரங்களின் லாகவத்தாலும், முக பாவத்தாலும் வெளிப்படுத்தித் தன்னைப் புலியாக பார்ப்பவர் உள்ளங்களில் நிலை நிறுத்தும் ஆற்றல் வாய்ந்தவராக இருக்க அடவு முறைகள் அவசியம். ஆட்டக்கலையின் கூறுகளை விவரிப்பது அடவு. இதை முறை என்றும் கூறலாம். எந்த ஆட்டத்தை ஆடினாலும் அதற்கு முறை என்பது கண்டிப்பாக இருக்கவேண்டும். அப்படியே புலியாட்டதிலும் அடவு முறைகள் இருக்கின்றன. புலியாட்டத்தில் கால், கை, முகம் ஆகிய மூன்று உறுப்புகளுமே அதன் அடவுகளை வெளிப்படுத்துவதில் முன்னிலை வகிக்கின்றன. கால்கள் பதுங்குதலையும், முகம் உறுமல் மற்றும் உணர்வுகளைப் பிரதிபலிக்கவும், கைகள் பல்வேறு நடிப்புகளையும் வெளிக்காட்டும்.

ஆட்டக் கலைஞர் முதலில் மறைவிடத்திலிருந்து புலி பாய்ந்து வருவதுபோல் வலக்காலைத் தூக்கி முன்புறம் ஊன்றி இடக்காலை முன் வைத்து உடலைக் குனியச் செய்து இரு கைகளையும் கூப்பி, சபைக்கு வணக்கம் சொல்லிய பின்னரே ஆடத் தொடங்குவார். அப்படி ஆடும்போது பின்வரும் அடவுகள் இடம்பெறுகின்றன.

1. கால்களைக் குறுக்கும் நெடுக்குமாக மாற்றிப்போட்டு ஆடுதல்
2. காலை பின், முன்பாகச் சுழற்றுதல்
3. கால்களை முன்பின் தட்டித் தூக்கியாடல்
4. காலை முன்னால் வைத்து எம்பிக் குதித்துத் திரும்பி ஆடல்
5. குனிந்து காலை இழுத்துச் சுற்றிப் போடுதல்
6. பின்னால் அரைவட்டத்தில் நடந்து ஆடுதல்
7. இரு கைகளையும் ஊன்றி குதிகாலில் அமர்ந்து திரும்பித் திரும்பி ஆடல்
8. பக்கவாட்டில் ஒரு காலை மண்டியிட்டு திரும்பி ஆடல்.

இந்த எட்டுவகையான அடவுகளும் முக்கியமானவை. இவை தவிர பார்வையாளர்களை மகிழ்விக்கச் செய்வதற்காக தனிப்பட்ட அடவு முறைகளையும் ஆட்டக் கலைஞர்கள் சூழலுக்கு ஏற்ப செய்துகொள்வதுண்டு. புலியாட்டம் தோன்றியது தமிழ்நாட்டில். தமிழர்களின் கலைகளில் அழியாத கலைகளில் ஒன்றாக இருப்பது புலியாட்டம். இவ்வாட்டத்தை கடுவாய் ஆட்டம் என்று கூறுவோரும் உண்டு.


## GET கலைக்கேசரி DELIVERED TO YOUR HOME

Please complete the form given below, along with your Cheque/Money Order written in favour of 'Express Newspapers (Ceylon) (Pvt) Limited' and send it to our Head Office at No185,Grandpass Road, Colombo 14,Sri Lanka.
Tel:+94-11-5322700 / 5738046 Fax:+94-11-5517773

For more details, please contact : Overseas Subscriptions **Arjun** -on arjun@expressnewspapers.net/Mobile:+94 777 801034
Local Subscriptions **S. Sandrasegar** - +94 77 5359106 / +94 -11 - 5322783

**Online Payment : www.kalaikesari.com / Subscription**

**ORDER FORM :**

கலைக்கேசரி KALAIKESARI

**Manager Subscriptions**
**Kalaikesari**
**No. 185, Grandpass Road, Colombo - 14,**
**Sri Lanka.**

**Tel : +94-11-5322783 / +94-11-5738046**
**Fax :+94-11-5517773**
**E-mail : subscription@kalaikesari.com**

Cheque should be drawn in favour of
**Express Newspapers (Ceylon) (Pvt) Limited**

FOLD HERE

Title : Mr. ☐ Mrs./ Miss ☐ Dr. ☐ Prof. ☐
First Name :........................................
Last Name :........................................
Institution :........................................
Apartment/Other Nos :........................................
Street / Road :........................................
Town/City/State :........................................
Country :........................................
Amount Enclosed : ........................................(12 / 6 Issues)
Mode of payment : ☐ Cheque / ☐ Money Order
Online Payment : www.kalaikesari.com / Subscription


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் ஆரம்பகால நூலகங்கள் வரலாற்றுத் தேடல்

நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டு ஒரு தீவாக உள்ள இலங்கை நாட்டின் வரலாற்றுக் காலத்திலிருந்தே சிங்களவர் தமிழர் என்கின்ற இரண்டு இனங்கள் வாழ்ந்து வருகின்றன. இவ்விரண்டு இனங்களும் மதம், மொழி, பண்பாடு அரசியல் பொருளாதாரம் முதலான பல்வேறு விடயங்களிலும் அடிப்படையில் வேறுபட்டு நிற்கின்றன. இவ்விரண்டு இனங்களில் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதியில் தமிழரும் தெற்கு மற்றும் மேற்குப் பகுதியில் சிங்களவர்களும் அதிகளவில் செறிந்து வாழ்கின்றனர்.

இத்தகைய தன்மையைக் கொண்டுள்ள இலங்கை நாட்டினுடைய நூலக வளர்ச்சி பற்றிய வரலாற்றினைப் பின்வருமாறு பிரித்து நோக்குவது இலகுவானது.

1. ஆரம்பகால நூலகங்கள்
2. மத்தியகால நூலகங்கள்
3. சுதந்திரத்திற்குப் பிற்பட்ட கால நூலகங்கள்

எனினும் இக்கட்டுரை ஆரம்பகால நிலமைகள் பற்றியே விரிவாகக் குறிப்பிட்டுள்ளது.

### நோக்கம்

இந்த ஆய்வு பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

- ஆரம்ப கால நூலக நிலைமைகளைக் கூறுதல்.
- தெளிவான வரலாறு இன்மையைச் சுட்டிக் காட்டுதலும் அதற்கான காரணங்களைக் கூறுதலும்.
- இப்பிரதேசத்தின் நூலக வரலாறு தொடர்பாக ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தல்.

### ஆரம்பகால நூலகங்கள்

இலங்கைச் சிங்கள மக்களுடைய புராதன வரலாற்றைத் தொடர்ச்சியாகக் கூறும் நூல்களாகத் தீபவம்சம், மகாவம்சம், சூளவம்சம் ஆகியவை உள்ளன. இந்த நூல்களில் கி.மு ஆறாம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி 1815 வரையாக ஏறத்தாழ இருபத்தைந்து நூற்றாண்டு கால வரலாறு இடையறா வண்ணம் பதியப்பட்டுள்ளது.[1]

இலங்கையில் புத்தமதம் பிரதான மதமாகக் கொள்ளப்படுகின்றது. இங்கு எழுத்துக்கலை மிகப் பழைய காலம் முதலே அறியப்பட்டிருந்ததாயினும் புத்தரின் போதனைகள் வாய்மொழி மூலமே போதிக்கப்பட்டுள்ளன. ஏடுகளை எழுதுவதில் சிரமம் எதிர்நோக்கப்பட்டமையாலும், ஏடுகள் அளவிலே பெரியனவாகவும் அவற்றைப் பாதுகாத்துக் கொள்வதில் பல்வேறு பிரச்சினைகள் எதிர்கொள்ளப்பட்டமை காரணமாகவும் சுவடிகளில் தங்கியிருப்பதிலும் பார்க்க வாய்மொழியான மதப் போதனையில் ஈடுபடுவதிலேயே பௌத்த துறவியர் நாட்டம் கொண்டிருந்தனர்.[2]

பௌத்த சமயம் தொடர்பில் வாய்மொழியாக நிலவி வந்த கருத்துக்கள் கி.மு முதலாம் நூற்றாண்டில் பாளி மொழியில் எழுத்துருவம் பெறத் தொடங்கியது. பௌத்த மதச் சிந்தனைகள் எழுதப்பட்ட ஓலைச் சுவடிகள் பௌத்தத் துறவியர் தங்கி வாழும் இடங்களான

**யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 'யாழ்ப்பாண வாழ்வியல்' கண்காட்சியில் இடம்பெற்ற ஆய்வுக் கருத்தரங்கில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் உதவி நூலகர் திருமதி. மைதிலி விசாகரூபன் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை.**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விகாரைகளில் பாதுகாப்பாக வைக்கப்பட்டன.[3]

விகாரைகள் பலவும் சுவடிகளைச் சேகரித்துப் பாதுகாக்கும் சுவடி நூலகங்களாகச் செயற்பட்டன. இலங்கையில் முதலில் தோன்றிய நூலகமாக மாத்தளையில் அமைந்துள்ள 'அலுவிகாரை (Aluvihare) நூலகம் குறிப்பிடப்படுகின்றது.

கி.மு முதலாம் நூற்றாண்டில் அனுராதபுரத்தை ஆட்சி செய்த வட்டகாமினி அபயன் (Vattagamini Abahya – 1st Century .B.C) என்ற சிங்கள அரசன் புத்த சமய நூலாகிய திரிபீடகத்தை (Tripitaka) இந்த அலுவிகாரை நூலகத்தில் எழுதி வைத்துப் பாதுகாத்ததாக அறிய முடிகின்றது.[4] இவ்வாறு இலங்கையின் பல்வேறு இடங்களிலும் அமைக்கப்பட்ட பௌத்த விகாரைகளில் சுவடி நூலகங்கள் பல காணப்பட்டதற்கான ஆதாரங்களைப் பழைய வரலாற்றுத் தொகுப்புகளிலிருந்து அறிய முடிகின்றது.

ஆரம்ப கால நூலகங்கள் பலவும் இன்றைய பல்கலைக்கழக நூலகங்களைப் போன்று நூற் களஞ்சியங்களைக் கொண்டிருந்தன. பண்டைய பிரதான மடாலயங்கள் பெரும்பாலானவற்றில் ஓலைச் சுவடிகளைக் கொண்ட நூல் நிலையங்கள் இருந்தன. பௌத்த சமய நூல்கள் இங்கு கவனமாகப் பாதுகாக்கப்பட்டன.[5]

புராதன பௌத்த மன்னரின் வரலாற்றைக் குறிப்பிடும் தீபவம்சம், மகாவம்சம், சூளவம்சம் என்பவற்றைப் போல தமிழ் மன்னர்களின் புராதன வரலாற்றைக் கூறும் நூல்களாகக் கைலாயமாலை *(கி.பி 16)*, யாழ்ப்பாண வைபவமாலை *(கி.பி 18)*, யாழ்ப்பாண வைபவ கௌமுதி *(1918)* முதலான நூல்களைக் கருதுவர். இலக்கியங்களான இந்த நூல்கள் தரும் குறிப்புக்கள் மூலம் அக்கால இலக்கிய வளர்ச்சி நிலைமைகளை அறிய முடிகின்றது.

### சரஸ்வதி மகாலயம்

பதின்மூன்றாம் நூற்றாண்டளவில் சரஸ்வதி மகாலயம் என்ற பெயரிலமைந்த நூலகம் யாழ்ப்பாணத்தில் நல்ல நிலையில் செயற்பட்டது. இந்த நூலகத்தில் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட பழைய நூல்கள் காணப்பட்டன. தற்போது நாயன்மார்கட்டு என அழைக்கப்படும் இடமே முன்னர் சரஸ்வதி மகாலயம் இருந்த இடமென அறியப்படுகின்றது.[6] இந்நூலகம் தொடர்பாகப் பின்வருவன போன்ற தகவல்களைப் பெற முடிகிறது.

கி.பி பதின்மூன்றாம் நூற்றாண்டில் முத்துக் கவிராயர் எழுதிய கைலாயமாலை எனும் நூலில் *(வரி 209, 210)* இந்நூலகம் பற்றிய செய்தி பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

'யாழ்ப்பாணத்து அரசன் வரோதய செகராசசேகரன் காலத்தில் வைத்தியம், சோதிடம் என்பன தொடர்பான நூல்கள் எழுதப்பட்டன. இவை இந் நூலகத்தில் வைத்துப் பாதுகாக்கப்பட்டன.

கைலாயமாலையின் வழி நூலாகக் கருதப்படுகின்ற யாழ்ப்பாண வைபவமாலை நூலில் கி.பி *1215 - 1441* வரையான காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் சுதந்திரமான தமிழ் இராட்சியம் நடைபெற்றிருக்கின்றது. இக்காலப் பகுதியில் ஆட்சி செய்த விஜயகாலிங்க ஆரியச் சக்கரவர்த்தி என்னும் மன்னன் காலத்தில் யாழ்ப்பாணத்தில் கல்வி வளர்ச்சி வசதிகளை உருவாக்கும் நோக்கில் இம் மன்னனால் சரஸ்வதி மகாலயம் நூலகம் உருவாக்கப்பட்டது.

### சரஸ்வதி மகாலயம் அழிப்பு

இந்நூலகம் பின்னாளில் அழிவடைந்ததாக அறிய முடிகின்றது.[7]

'சோழ ராஜனால் அனுப்பப்பட்ட அவனது புதல்வனான ஒருவன் சிங்கை ஆரியச் சக்கரவர்த்தி என்னும் பெயரோடு முடிசூடப்பெற்று அரசாண்டான். அவன் தனது இராசதானியாகிய நல்லூருக்குத் தன் நாட்டிலிருந்தும் பிற இடங்களில் இருந்தும் பண்டிதர்களை அனுப்பி வைத்து ஒரு கிராமத்து வயல் நிலங்களையும் விடுவித்தான். இக்கிராமம் இப்போதும் சங்குவேலி என்னும் பெயரோடு விளங்குகின்றது. இப்பண்டிதர்கள் ஆக்கிய நூல்கள் யாவும் சரஸ்வதி மகாலயம் என்னும் நூலகத்தில் வைக்கப்பட்டன. அது சிங்கள அரசன் ஒருவனால் தீ வைக்கப்பட்டது என்று சரித நூல் கூறுகின்றது. அதனால் போலும் அவர்கள் செய்த நூல்களாயினும் செய்யுள்களாயினும் எமக்குக் கிடைத்தில.' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

செகராசசேகர மன்னனின் தம்பியாகிய பரராசசேகரன் என்னும் மன்னன் யாழ்ப்பாணத்தை ஆட்சிசெய்த காலத்தில் அழிந்து போன நூலகம் புனரமைப்புச் செய்யப்பட்டது என்னும் தகவலை சி.கணேசையர்[8] மற்றும் செ.இராசநாயகம்[9] போன்றவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இவ்வாறான கருத்துகளின்படி நோக்கும்போது யாழ்ப்பாணத்திலே பதின்மூன்றாம் நூற்றாண்டு மற்றும் அதனையடுத்த காலப் பகுதிகளில் நூலகங்கள் கல்வி வளர்ச்சிக்கு ஏற்ப நல்ல நிலையில் அமைக்கப்பட்டன என அறிய முடிகின்றது.

### சுவடி நூலகங்கள்

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலின் ஆதீனத்தில் சிறந்த சுவடி நூலகம் ஒன்று செயற்பட்டது என்ற தகவலைப் பெற முடிகின்றது. இவ் ஆலயம் ஏழு அல்லது எட்டாம் நூற்றாண்டிற்குரியதாகக் கருதப்படுகின்றது.[10] ஆலயத் தோற்றம் பற்றிய கதை யாழ்ப்பாண வைபவ மாலையிலும் காணப்படுகின்றது.

இவ் ஆலயத்தின் சுவடி நூலகத்தில் கிரந்தம் மற்றும் தமிழ் போன்ற மொழிகளில் எழுதப்பட்ட ஓலைச் சுவடிகள் சேகரித்து வைக்கப்பட்டிருந்தன. தமிழ் இலக்கணம், இலக்கியம், சமயம், தத்துவம் மற்றும் இவ்வாலய பரிபாலனம் போன்ற விடயங்களைக் கொண்டனவாக இச் சுவடிகள் காணப்பட்டன.[11]

பழுதடைந்த ஓலைச் சுவடிகளை மீண்டும் எழுதுவதற்காகப் படியெழுதுவோர் நியமிக்கப் பட்டிருந்தனர். இக்கோவிலின் அருகாமையில் அமைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்ட ஆலயங்களின் தேவைகளுக்கு இச் சுவடிகள் கொடுத்து உதவப்பட்டன.

ஆரம்ப காலங்களில் சுவடிச் சாலைகளில் காணப்படுவதை விட ஏராளமான சுவடிகள் தனிநபர்களிடம் காணப்பட்டிருந்தன. ஓலைச் சுவடிகளின் பதிப்பு முயற்சியில் ஈடுபட்டிருந்தவர்களான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், சி.வை.தாமோதரம் பிள்ளை முதலானோரின் இத்துறை அனுபவங்கள் இதற்கு ஆதாரமாக உள்ளன.

பௌத்த மரபின் வரலாற்றினை நோக்கும் போது கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலப்பகுதியிலிருந்து ஏடுகளும் நூல்களும் பௌத்த சமயப் பின்னணியில் காலங்காலமாகப் பேணப்பட்டமை போன்ற ஒரு வரன்முறையான சுவடிகள் பாதுகாப்பு முறை தமிழ் மரபில் அல்லது யாழ்ப்பாணப் பகுதியில் காணப்பட்டதா இல்லையா என்பதனை அறிவதற்கான புராதன சான்றுகள் இதுவரை இல்லை. ஏட்டுச் சுவடிகள் சுவடிக் கூடங்களில் அல்லது வழிபாட்டு இடங்களில் பாதுகாக்கப்படாத காரணத்தினால் பெரும்பாலும் தனியார் வீடுகளில் ஆங்காங்கு காணப்பட்டிருக்கின்றன எனக் கருத இடமுண்டு.

காலங்காலமாகக் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கியதாகக் கூறப்படும் தமிழ் மரபில் நூலகங்கள் அமைக்கப்படாமல் இருப்பதற்கான வாய்ப்புக்கள் குறைவே! எனினும் அவை பற்றிய தகவல்களை அறிய முடியாத நிலை காணப்படுகின்றது.

### நூலக வரலாற்று வெறுமையும் காரணங்களும்.

பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை தமிழர் பிரதேசங்களில் நூலக வரலாற்றை குறிப்பிடக்கூடிய ஆதாரங்கள் இதுவரை கிடைக்கவில்லை. ஆனால் பௌத்தமதம் இலங்கைக்கு வந்த காலப்பகுதியிலிருந்து வரலாற்றுப் பதிவுகளை பேணும் பெரும்பணியை பௌத்த விகாரைகளும் வழிபாட்டுத் தலங்களும் தொடர்ந்து செய்து வந்துள்ளன. தீபவம்சம், மகாவம்சம் போன்ற நூல்கள் இப்பணியை செவ்வனே நிறைவேற்றியுள்ளன. ஆனால் கைலாயமாலை எழுதப்பட்ட காலம் வரை தமிழ்ப் பிரதேசம் சார்ந்த வரலாற்றைக் கூறும் ஆதாரங்கள் இதுவரை கிடைக்கவில்லை.

இந்நாட்டின் தென்பகுதி மற்றும் மேற்குப்பகுதி மக்களின் வரலாறு தெளிவாகக் கூறக்கூடியளவு இருப்பதற்கு தீபவம்சம், மகாவம்சம், சூளவம்சம் முதலான இலக்கியச் சான்றுகள் உள்ளமை மட்டும் காரணமல்ல, பின்வருவன போன்ற வேறு சில காரணங்களும் உள்ளன.

1. புராதன காலத்துச் சிங்கள இராட்சியப் பிரதேசங்களில் வலிமையானதும் நீடித்து நிற்கக் கூடியதுமான கருங்கற்கள் போதியளவு இருந்தன. கருங்கற்களைக் கொண்டே அரசர்கள் தமது மாளிகைகளையும் பௌத்தத் துறவியர்கள் தமது விகாரைகள் முதலான கட்டிடங்களையும் அமைத்தனர். இக்கற்களிலேயே அரச சபையின் சாசனங்கள் முதலானவற்றையும் செதுக்கினர். ஏறத்தாழ ஆயிரம் வருடங்கள் கழிந்த பின்னரும் கூடப் பாறைகளிலும் கற்றூண்களிலும் எழுதப்பட்ட வரலாற்று ஆதாரங்கள் யாவும் சிங்கள பௌத்த மரபின் உண்மைகளைத் தொகுப்பதற்குரிய சான்றினைத் தருவனவாக அமையலாயின.

இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் பௌதீக நிலவுருவ அமைப்புப்படி இத்தகைய கருங்கற்கள் பெரும்பாலான இடங்களில் இல்லை. சுண்ணாம்புக் கற்களே அதிகம் காணப்படுகின்றன. இவற்றைப் பயன்படுத்தியே இப் பகுதியில் புராதன கட்டிடங்களும் அமைக்கப்பட்டிருக்கும். சிங்கள மக்கள் புராதன காலத்தில் எழுதவும், கட்டிடங்கள் அமைக்கவும் பயன்படுத்திய கற்கள் போன்று வலிமை பொருந்தியனவாக சுண்ணாம்புக் கற்கள் இருப்பதற்கு வாய்ப்பு இல்லை.[13]

புராதன இலங்கையில் அரசியல் வரலாற்றை நோக்கும் போது அங்கு அடிக்கடி போர்கள் நடைபெற்றிருக்கின்றன. அதிகளவு அழிவுகள் ஏற்பட்டிருக்கின்றன. நல்லாட்சிகள் பல அடியோடு அழிக்கப்பட்டிருகின்றன. இச்சந்தர்ப்பத்தில் அதிகளவு பொருட்கள் நிலத்தின் கீழ் புதையுண்டு போவதற்கு வாய்ப்புக்கள் உண்டு. எனினும் கட்டிட இடிபாடுகள், கல்வெட்டுகள், பழைய நாணயங்கள் முதலான புராதன காலத்து நூலக வரலாற்றை கூறக்கூடிய தொல்பொருட் சின்னங்களோ அல்லது கல்வெட்டு முதலான தொல்லியல் ஆதாரங்களோ இதுவரை கிடைக்கவில்லை. அத்தகைய நோக்கில் அமைந்த ஆய்வுகளும் இடம் பெறவில்லை.

தொல்லியல் சான்றாதாரங்கள் இல்லாமைக்கான பிரதான காரணம் பொதுவாகவே புராதன காலத்து அரசர்கள் வாழ்ந்த தமிழ்ப் பிரதேசங்களில் அகழ்வாராய்ச்சிகள் விரிவான அளவில் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. அரசர்கள் பலரும் இப்பிரதேசத்தை சிறப்பாக ஆண்டதாக கூறப்படுகின்றது. இவர்கள் தமது ஆட்சியின் நடவடிக்கைகளைக் கல்வெட்டுகள் முதலானவற்றில் பொறித்திருப்பார்கள். ஆனால் கடந்த காலத்தை அடிப்படையாகக் கொண்ட வரன்முறையான ஆய்வுகள் இதுவரை மேற்கொள்ளப்படாமையால் இத்தகைய வரலாற்று ஆதாரங்கள் கிடைக்கவில்லை. இதுபோன்ற பல்வேறு காரணங்களால் பண்டைய காலத்து நூலக நிலைமைகளைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியவில்லை.

இப்பிரதேசங்களில் விரிவான புதைபொருள் ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டுமென்பது வரலாற்றுத் துறைசார்ந்த ஆய்வறிஞர்களின் ஒருமித்த கருத்தாக உள்ளபோதிலும் ஏறத்தாழ 1950களின் பின்னர் இலங்கையில் மிக மோசமான நிலையில் தீவிரமடைந்துவிட்ட சிங்களவர் தமிழர் என்ற இன முரண்பாட்டுச் சூழ்நிலை இத்தகைய ஆய்வுகளில் ஆய்வாளர்கள் ஈடுபடாமைக்கும் அல்லது ஆர்வங்காட்டாமைக்கும் பிரதான காரணங்களாக உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போதைய சூழலில் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் வரலாறு சார்ந்து ஆய்வு மேற்கொள்வது சிக்கலான விடயமாகும். இதனால் ஆராய்ச்சியாளர்கள் தயங்கினர் அல்லது தவிர்த்தனர். இவ்வாறான காரணத்தாலும் புராதன வரலாறு பற்றிய ஆய்வுகள் துலக்கம் பெறாமல் உள்ளன.

காலங்காலமாக வரலாற்றுச் சம்பவங்கள் பதிவு செய்யப்படாமை, பௌதீகச் சூழலில் நலிவான தன்மைகள், புதைபொருள் ஆய்வுக்கான சூழல் இன்மை, ஒல்லாந்தர், போர்த்துக்கேயர் முதலான அந்நியர் ஆட்சியின் அழிவுகள் என்பவற்றால் இலங்கையின் வடக்குக் கிழக்குப் பிரதேசத்தின் வரலாற்று மூலாதாரங்கள் இல்லாது ஒழிக்கப்பட்டது. எனினும் இவ்வாறான இடர்களின் மத்தியில் 18 ஆம் நூற்றாண்டிலிருந்து பேணிப் பாதுகாக்கப்பட்ட பெறுமதி வாய்ந்த ஆவணங்களைக் கொண்ட யாழ்ப்பாணப் பொதுநூலகம் 1981 இல் எரிந்து போனதனால் அண்மைக்கால வரலாற்று ஆதாரங்களைக் கூட பெற்றுக் கொள்ள முடியாத சூழ்நிலை காணப்படுகின்றது.

இவ்வாறான தன்மைகளால் பௌத்த மதத்தின் சமய விடயங்கள் காலங்காலமாக அடுத்த தலைமுறையினருக்கு கையளிக்கப்பட்ட முறைகளையே இலங்கை முழுமைக்குமான நூலக வரலாறாக கூறும் மரபு தொடர்ந்து காணப்பட்டு வருகின்றது.



அலுவிகாரை கோவில் தொகுதி

நூலகவியல் மற்றும் நூலகத்துறை சார்ந்த அறிவின்மை, ஆர்வமின்மை இத்துறையில் விரிவான ஆய்வுகள் முன்னெடுக்கப்படாமை, நூலகவியல் ஆய்வுகளை ஊக்குவிக்கக் கூடிய சூழ்நிலை இன்மை, ஆய்வு நெறியாளர்கள், துறைசார்ந்த வல்லுனர்களின் பற்றாக்குறை போன்ற நிலைமைகளும் முழுமையான நூலக வரலாறு பற்றிய சிந்தனையை வளர்த்தெடுக்கப்பட முடியாமைக்குரிய காரணங்களாகும். இன்றைய காலம் வரைக்கும் இலங்கையின் நூலக வரலாறு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளும் மிகக் குறைவாகவே கிடைக்கின்ற இத்துறை சார் ஆக்கங்களும் மேலே குறிப்பிட்ட கருத்துக்களை நிரூபிப்பனவாக உள்ளன.

இந்நாட்டினுடைய புராதன நூலகங்கள் பற்றிய நீண்ட வரலாற்றிலே ஆரம்பத்திலிருந்து 13 ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியில் வடக்குக் கிழக்கு பிரதேசத்தின் நூலகங்கள் பற்றிய குறிப்புகள் இடம்பெறவில்லை என்பதனால், இப்பிரதேசங்களில் நூலகங்கள் இருக்கவில்லை எனக் கருதுவது பொருத்தமற்றது.

நூலகங்கள் பற்றிய வரலாறு மட்டுமல்ல இக்காலகட்டத்தில் இப்பிரதேசங்களின் அரசியல் மற்றும் சமூக பொருளாதார வாழ்வியற் செய்திகளும் கூட கிடைக்கவில்லை. எனவே தற்போது குறிப்பிடப்படுகின்ற இலங்கையின் புராதன நூலக வரலாற்றையே இந்நாட்டின் முழுமையான நூலக வரலாறாக கருதும் போக்கும் உள்ளது. இது மறு பரிசீலனை செய்யப்பட வேண்டிய கருத்தாகும்.

முன்னர் போரினால் அழிவுகள் ஏற்பட்டுள்ளன. தொல்லியல் சான்றுகள் இதுவரை கிடைக்கவில்லை. அகழ்வாராய்ச்சிகள் செய்யக்கூடிய அரசியல் சூழ்நிலையும் நீண்ட காலமாக இல்லை. மேல்நாட்டவரது ஆட்சிக்காலத்திலும் பல்வேறு மாறுதல்களும் அழிவுகளும் ஏற்பட்டுள்ளன.

ஆரம்ப மற்றும் மத்தியகால நூலக நிலமைகளை அறிந்து கொள்ள முடியாமைக்கு இத்தகைய பல காரணங்கள் தடையாக உள்ள நிலையில் மாற்று வழி முறைகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டியது துறைசார் அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளது.

**அடிக்குறிப்புகள்**

1. இலங்கையில் கல்வி: நூற்றாண்டு விழா மலர் பாகம்-1. 1969. பக்: xxxvi
2. மேலது xxxix
3. ஆர். எஸ். தம்பையா, 'இலங்கையில் நூலகங்கள்' நூலகவியல் காலாண்டுச் சஞ்சிகை. மலர் 3, இதழ் 2, டிசம்பர் 1987. ப.10
4. Lankage Jeyasiri "Library Movement in SriLanka" IN: Roads to wisdom. (Ishvari Corea - ed), 1980. P.33
5. ஈஸ்வரி. கொறயா 'நூல் நிலைய சேவை', இலங்கையில் கல்வி: நூற்றாண்டு விழா மலர். பாகம் 3. 1969, பக் 1375.
6. க.சி குலரத்தினம் 'பொன்விழா பொலிவு காணும் பொதுசன நூலகம்' யாழ்ப்பாணப் பொதுசன நூலகத் திறப்பு விழா மலர், பக்.57
7. சி.கணோசையர், ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரித்திரம், யாழ்ப்பாணம் 1939. பக்.6
8. மேலது பக் 9 - 10.
9. செ.இராசநாயகம். யாழ்ப்பாணச் சரித்திரம் யாழ்ப்பாணம், 1933. பக்.17
10. சு.து.ஷண்முகநாதக் குருக்கள் (கோயில் பிரதம குரு) நேர்காணல் 28.12.2011
11. மேலது நாள் 28.12.2010
12. ஆ.சிவநேசச் செல்வன் 'மாவிட்டபுரம் ஆதீன சுவடிச்சாலையும் ஏட்டுப் பிரதிகளும்' பூர்வகலா மலர், (1973) பக் 42 - 44)
13. மு.குணசிங்கம். இலங்கைத் தமிழர் வரலாற்று மூலங்கள்: அனைத்துலகத் தேடல். 2005 பக் - 205

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைத்தேவியின் அரவணைப்பால் இசைப் பொக்கிஷமாய் மிளிர்ந்த

# ஜிக்கி

- பத்மா சோமகாந்தன்

சுமார் 1955 ஆம் ஆண்டுகளிலே இலங்கை வானொலி 'ராஜா - ஜிக்கி' கலியாணம் என்றொரு ஒலிபரப்பைச் செய்து மக்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியது. இதனை செவியுற்றோர் ராஜாஜி என அன்பாக அழைக்கப்படும் சக்கரவர்த்தி ராஜகோபாலச்சாரியாருக்கே திருமணம் என ஒரு கணம் திகைப்புறக்கூடிய வகையில் இரட்டை அர்த்தத்தில் வேடிக்கை செய்து அன்று முழுவதுமே ஏ.எம். ராஜா-ஜிக்கியின் காதற் பாடல்களை ஒலிபரப்பி நேயரை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியது.

யாரிடமுமே வரன் முறையாக இசையைப் பயின்ற அனுபவமேயில்லாத, ஆனால் யாவரையுமே தன் இன்னிசையால் கொள்ளை கொள்ளக் கூடிய வல்லமை மிக்க கிருஷ்ணவேணி என்ற சிறுமி 'ஜிக்கி' என்ற செல்லப் பெயருடனேயே தன் வாழ்நாள் முழுவதும் இசையுலகிலும் ரசிகர் மத்தியிலும் பெரும் பிரபலமாக வாழ்ந்தார் என்பதும் ஒரு ரசனையான சம்பவம் தான். கிருஷ்ணவேணி சின்னஞ் சிறு பாலகியாக இருக்கும்போதே 'ஜிகு ஜிகு' என முணுமுணுத்தபடி பாடியும் ஆடியும் படு சுட்டியாகவும் துரிதம் போட்டுத் திரிந்தபடியால் ஜிக்கி எனத் தந்தையால் செல்லமாக அழைக்கப்பட்ட பெயர் நிரந்தரமாக நிலைத்தே விட்டது.

திருப்பதிக்கு அண்மித்ததான சந்திரகிரி என்ற சிற்றூரில் பிள்ளைவாள் கஜபதிநாயுடு, ராஜகாந்தம்மா தம்பதியின் மூத்த மகளாக 1937ஆம் ஆண்டில் பிறந்த ஜிக்கி, இறைவன் கொடையாக இனிமையான மென்மை சேர்ந்த குரல் வளமும் யாருடைய கிட்சையுமில்லாமல் இயல்பாகவே பாடும் வல்லமை பொருந்தியவராகவும் காணப்பட்டமை பெற்றோரையும் இசைவாணரையுமே திகைப்புறச் செய்தது. சிறுமியின் பிரத்தியேகமான இசைச் செழுமையின் சிறப்பை அவதானித்த இசை ரசிகர்களும் இசை ஆசிரியர்களும் ஜிக்கியை 6, 7 வயதுகளிலே மேடை ஏற்றிப் பாட வைத்து மகிழ்ந்தனர். பாடறியாத ஏடறியாத பள்ளிக்கூடந்தானுமறியாத ஜிக்கி, தாய்மாமனான சிட்டிபாபு அவரது தொழில் நிமித்தம் ஜெமினி ஸ்ரூடியோ சொன்ற போது, இவளும் கூடவே சென்றாள். 'ஞானசௌந்தரி' படத்திற்கான வேலைகள் அங்கே நடந்து கொண்டிருந்தன. 'அருள் தாரும் தேவமாதாவே ....ஆதியே எங்கள் ஜோதி...' என்ற கம்பதாசனின் பாடல் அங்கே பதிவிற்காக ஆயத்தமாகிக் கொண்டிருந்தது.

இயல்பாக எவ்வித வழிகாட்டலுமின்றிப் பாடக்கூடிய வல்லமைமிக்க சிறுமியிடம் அப்பாடலின் பல்லவியைப் பாடக் கேட்டபோது, அவள் பாடினாள். அருமையாக அப்பாடல் அமையவே அதனைப் பதிவு செய்து விட்டனர். ஏனைய அடிகளைப் பாடவிருந்த பி.ஏ.பெரியநாயகி பாடினார்.

எவ்வித கூச்சமோ, அச்சமோ இன்றி எவ்வித அறிவுறுத்தலும் சொல்லிக் கொடுக்கப்படாமல் இருந்தும், பெரும் பெரும் பாடகரெல்லாமே இத்தகையதொரு நெருக்கடியில் இடறி விழும்போது, முன்பின் வைபோகம் தெரியாத ஒரு சிறுமி வெகு உணர்ச்சிபூர்வமாக அநாயாசமாகப் பாடியதைக் கேட்ட அனைவரும் வியந்து நோக்கினர்.

அன்னையிடம் அருள் வேண்டிப் பாடிய முதல் பல்லவியுடனேயே அம்மாளின் அருள்மாரி பொழிந்தது போல் கொல்லபாமா, பந்துலம்மா எனப் பல தெலுங்குப் படங்களில் பின்னணி இசைபாடும் வாய்ப்பை உடனே பெற்றுக் கொண்டார் இச்சிறுமி.

இவருடைய இசையைக் காதில் விழுத்திய இசைமேதை ஜி.ராமநாதன் தந்தி மூலம் செய்தியனுப்பி இவரைத் தன்னிடம் வரவழைத்தார். அப்போது ஜிக்கிக்கு வயது 13. அவர் இசையமைத்துக் கொண்டிருக்கும் 'மந்திரிகுமாரி' என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படத்திற்கான பின்னணியைத் திருச்சி லோகநாதனுடன் சேர்ந்து பாடவைக்க வேண்டுமென்பதே ராமநாதனின் திட்டம்.

இந்தச் சிறுமியின் குரல் மந்திரிகுமாரியில் கதாநாயகி வேடமிட்டுள்ள மாதுரிதேவிக்கு எப்படிப் பொருந்தும்? இது சரியே வராது என இயக்குநர், தயாரிப்பாளருட்பட பலரும் தடுத்தனர். இசைமேதையோ பிடிவாதமாக ஜிக்கியே பாடவேண்டுமென்று கூறிப் பாடவும் வைத்தார். அந்த இரு பாடல்களும் தான் இசையில் ஒரு துளி கூட ரசனையில்லாத அசமத்தர் மனதையும் கூடக் கிறங்கடிக்கும் வகையில் ஜிக்கி திருச்சிலோகநாதன் ஆகியோரின் குரலில் பாடப்பட்ட 'உலவும் தென்றல் காற்றினிலே', 'வருவாய் நீ வருவாய்' என்ற பாடல்கள் ஆகும். மந்திரிகுமாரி வெற்றிப் படமாக வெளி வந்தது. பட்டித் தொட்டியெல்லாம் இப்பாடல் இசைகள் ஒலிக்கப்பெற்றுப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தின. இதுவே ஜிக்கியின் முழுப்பாடலுடனான திரையுலகப் பின்னணி இசைப்பிரவேசம்.



இப்படமும் இவர்களது பாடல்களும் பெரும் வெற்றியை எட்டியதால் ஜி.ராமநாதன் தனக்கு அதிர்ஷ்டமான தேவதையாக எண்ணி ஆஸ்தான பாடகியாக ஜிக்கியை வரித்துக்கொண்டார். ஜிக்கியின் குரல் வளம் இசை மேதை ஜி.ராவின் இசைவளத்தோடு மிக ஒன்றிப்போனதால் ஜிக்கியின் உச்சஸ்தாயி ஸ்வரஸ்தானங்கள் எல்லாம் கூட மிக இனிமையாகவும் சரளமாகவும் செவியை நிறைத்துக் கேட்போர் மனதை நெகிழச்செய்தன; குளிர்வித்தன.

'அவன்' என்ற படம் இந்தி, தமிழ், தெலுங்கு என மும்மொழிகளிலும் தயாரானது. இந்தியின் பின்னணிப் பாடகராக முக்கேஷும் லதா மங்கேஸ்கரும் இணைந்து பாடினர். தமிழ், தெலுங்கு என இரு மொழிகளிலும் வெளிவந்த இதே படத்தின் பின்னணிப் பாடல்களைப் பாடல்களை ஜிக்கி - ஏ.எம். ராஜா இருவரும் அணி செய்தனர். யாரிடமுமே பாடங்கேட்டு முறையாக இசையைக் கற்காத வெறும் பதின்னான்கே வயது நிறைவேறிய சிறுமி இத்தனை அற்புதமாய்ப் பாடுகிறாளே எனக் கேட்டு வியப்புற்ற லதா, அவள் இசையில் தன் மனதைப் பறிகொடுத்தாரென்றால் இது சாதாரண விஷயமே அல்ல! மகிழ்வினால் மனம் நிரம்பிய லதா, ஜிக்கியைப் பார்த்துத் தனக்கு நிகராகப் பாடக்கூடிய திறமை மிக்கவள் இவளே எனப் பாராட்டினார். மேற்படி பாடல் இடம்பெற்ற வட இந்திய படத்தின் நடிக ஜோடிகள் பெரும் புகழ் வாய்ந்த நர்கீஸ் - ராஜ்கபூர் ஆகியோராவார். ராஜ்கபூர் ஜிக்கியைப் பார்த்து, இவளே தென்னிந்தியாவின் லதா எனப் பாராட்டி மகிழ்ந்தார்.

இயல்பான இசை வளத்தினாலே சாதாரணர்களை மட்டுமல்ல பல இசை மேதைகளையும் கவர்ந்த திறமைசாலியாக ஜிக்கி, 'குமாரி' என்ற படத்திலே முதன் முதல் ஏ.எம். ராஜாவுடன் இணைந்து பாடினார். இப்படம் பெரிதாக ஒரு வெற்றிப்படம் எனக் குறிப்பிடமுடியாவிட்டாலும் இவ்விருவருடைய இசையில் வெளியான இப்படத்தின் பாடல்கள் மக்கள் மனதைக் கிறங்கடித்தன எனலாம். இந்தக் தேனிசைக் குரல்களின் இணைவும் மக்களின் லயிப்பும் சேர்ந்தே நிஜ வாழ்விலும் கணவன் மனைவியாகக் குடும்பத்திலும் ஒன்றிணைந்தனர். அந்நன்நாளை ஒட்டித்தான் இலங்கை வானொலி அவர்களது காதல் பாடல்களை ஒலிபரப்பியது.

1955 களிலே 'மகேஸ்வரி' என்ற சினிமாவிற்காக 'அழகு நிலாவின் பவனியிலே' என்ற பாடலில் இருவரும் பங்கு கொள்ளுகின்றனர். இடைவேளைக்காக வாத்தியக் கலைஞர்கள் மண்டபத்தை விட்டு வெளியேறவும் ஜிக்கியும் ராஜாவுமே தனிமையில் அங்கு விடப்பட்டிருந்தனர். அப்போது ராஜா சிறிது துணிச்சலுடன் பாடல் பிரதியை ஜிக்கியிடமிருந்து பெற்று, அதில் தனது எண்ணக் கிடக்கையைக் குறித்து எழுதி ஜிக்கியிடம் கொடுத்தார். ஜிக்கியின் மனம் ராஜா சார்பாக இருந்தாலும் எட்டுச் சகோதரர்களுடைய பொறுப்பு, விதவையான தாய், சீதனம் இவற்றை எல்லாம் நினைவூட்டித்தன் இயலாமையைத் தெரிவித்தார்.

சீதனம் என்ற பேச்சே வேண்டாம் என ராஜா தன் மனதைத் திறக்கவும் இருவரும் உடன் பட்டு மனம் விரும்பினர். சென்னையில் ராஜா - ஜிக்கியின் திருமணம் கோலாகலமாக நிறைவேறியது.

அழகு நிலாவில் இணைபிரியா ஜோடிகளாகப் பவனி வந்து, சிங்காரப் பைங்கிளிகளாக, செந்தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேனிசையை அள்ளி அள்ளி வீசும் இந்த ஜோடிகளின் ஆசைபொங்கும் இல்லறவாழ்வு அணைந்திடாத அமர தீபமாகத் திகழ வேண்டுமென இன்னிசை ரசிகர்கள் யாவரும் வாழ்த்தி மகிழ்ந்தனர்.

ஆந்திராவிலே ராமச்சந்திரபுரத்தில் 1-7-1929 ஆம் ஆண்டில் பிறந்த ராஜாவின் தந்தையார் பெயர் மன்மதராஜு. தாயார் லக்ஷ்மம்மா. ராஜாவின் முழுப்பெயர் ஏமல மன்மதராஜு ராஜா. இதனாலே அவர் ஏ.எம். ராஜாவானார். இவரது மூத்த சகோதரியின் பெயர் நாகம்மா. நாகம்மா பிறந்து ஏழு ஆண்டுகளாகியும் தனக்கொரு ஆண் மகவு வேண்டுமென்ற வேண்டுதலோடு தந்தையார் ஒரு பிள்ளையார் கோவிலை வீட்டிகருகே கட்டினார். அவர் வேண்டியபடியே ஆண் குழந்தை பிறந்தது. ஆனாலும் ராஜா பிறந்த ஒரு மதத்தால் தந்தையார் மரணித்து விட்டார்.

தந்தையார் மறைந்ததால் வருமானமின்றி வறுமையுற்றிருந்த குடும்பமாயினும் ராஜா முறையாகக் பள்ளிக் கல்வியையும் இசையையும் மேற்கொண்டார். ஜிக்கிக்கு இணைவாகவே தென்றலின் மென்மை வருடுவது போன்ற மென்மையான சுகமான சாரீரம் இளமையிலேயே இவரது இசை வன்மைக்கு மெருகேற்றியது. இந்தி சினிமாப் பாட்டை கூடத் திரையில் கேட்டபடி அப்படியே பாடும் வல்லமை ராஜாவிடம் நிறையவே காணப்பட்டது. பாடலைக் கேட்கவோ ஆசை. கையில் பணத்திற்கோ வழியில்லை. இத்தகுநாட்களில் ராஜா, கொட்டகைக்குப் பின்னாலே போய் நின்று பாட்டு கேட்டு ரசிப்பானாம். சிறு பையனாயிருக்கும் போதே இசையிலே அத்தனை மோகம்.

இசையோடு கல்லூரிப் படிப்பையும் முடித்து பச்சையப்பன் கல்லூரியில் பி.ஏ. பட்டப்படிப்பைப் படிக்கும்போதே எச். எம். வி. இசை நிறுவனம் அக் கல்லூரி இசைப் போட்டியில் முதலிடம் பெற்ற ராஜாவின் இனிய குரலை இரு பாடல்களாகப் பதிவு செய்து பெருமை பெற்றது.

பின்னணிப் பாடகராகத் திரையுலகில் புகழீட்டிவந்த ராஜா, ஸ்ரீதரின் இயக்கத்தில் 'கல்யாண பரிசு' படத்தின் பாடல்களுக்கு இசையமைக்கும் பணியிலும் ஈடுபட்டுப் பெரும் பெருமையீட்டினார். ராஜாவின் பாடல்களைப் போலவே அவரது இசையமைப்பில் 'வாடிக்கை மறந்ததும் ஏனோ', 'உன்னைக் கண்டு நான் ஆட', 'ஆசையினாலே மனம்', 'துள்ளாத மனமும் துள்ளும்', 'காதலிலே தோல்வியுற்றான்' என அருமையான பல பாடல்கள் வைரமாக ஜொலித்தன. ராகத்தினுடைய சுயரூபம் முற்று முழுதாக வெளியே தெரியாமல், அதனுடைய வீச்சும் குறையாமல் புதிய நுட்பங்களைப் பயன்படுத்தி இசையை ஆக்கும் பாங்கு எல்லா பாடல்களிலுமே கச்சிதமாக இனிமையைப் பொழிந்து தள்ளியது. மெல்லிசை உலகிலே தனது முத்திரையை இறுக்கமாகப் பதித்துக் கொண்ட ராஜா தெலுங்கிலும் தனது திறமையை வெளிக் கொணர்ந்தார்.

ராஜா - ஜிக்கியின் திருமணத்தின் பின் தம்பதி மனம் நிறைந்த குடும்ப வாழ்வை மேற்கொண்டிருந்தாலும் பொதுவாக திருமணத்தின் பின் பெண்களுக்கு ஏற்படும் சங்கடம் ஜிக்கியையும் தப்பவிடவில்லை. இனிய குரல் வளத்தோடு முதல் தரப் பின்னணிப் பாடகியாக வலம் வந்து கொண்டிருந்தவர் பாடுவதைப் புறக்கணிப்பதென்றால் எப்படி? மனத்துயரம் சிறிது காலம் ஜிக்கியை வருத்தியதால் உடல் நலிவுற்றார். நோய் அவரை இறுகி அணைத்துக் கொண்டது. உட்கொள்ளும் மருந்தினைவிட இடையிடையே ஓரிரு பாடல்கள் பாடவும் ஜிக்கி உடல் நலம் தேறினார்.

இந்த இனிய இசைத் தம்பதிக்கு சந்திரசேகர், மகேஷ்குமார் என இரு ஆண்களும் நான்கு பெண் குழந்தைகளும் பிறந்தனர்.

இந்த இசைத் தம்பதியின் டுயட் பாடல்களைக் கேட்டு மயங்காதோர் இல்லை எனக் கூறுமளவிற்குக் குரல் பொருத்தமும் ஜோடி சேர்ந்து பாடும் லாவகமும் உள்ளத்தை அப்படியே குளிர வைக்கும். அந்தளவு தூரம் மனித உணர்வுகளை சாமரை வீசி அமைதியடைய வைக்கும் வலு இவர்களின் இசையிலுண்டு. 1989 ஆம் ஆண்டில் இவ்வினிய தம்பதி மேடை நிகழ்ச்சியொன்றில் கலந்து பாடிவிட்டு புகைவண்டியில் ஊர் திரும்பும்போது ராஜா பிளாட்பாரத்தில் மயங்கி விழுந்து உயிர் நீத்தார். ஆறாத்துயருற்ற ஜிக்கி குடும்ப பாரத்தைத் தனது தோளிலே சுமந்து கொண்டார். நீண்ட இடைவெளிக்குப் பின்னர் பாடும் தொழிலையே இறை சேவையாக ஏற்று இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, கனடா, அமெரிக்கா எனப் பல்வேறு நாடுகளுக்கும் தன் இரு மகன்மாருடன் சென்று இசை மழை பொழிந்து ரசிகர்களுக்கு இனிய இசை விருந்தூட்டி மகிழ்வித்தார் ஜிக்கி. 2004 ஆம் ஆண்டு 16 ஆம் திகதி ஜிக்கி அமரரானார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








போர்த்துக்கேயரால் 16 ஆம் நூற்றாண்டில் கென்யா நாட்டில் மொபாசா நகரில் கட்டப்பட்ட கோட்டை உலக பாரம்பரிய, பாதுகாக்கப்பட வேண்டிய சின்னங்களில் ஒன்றாக யுனெஸ்கோவினால் 2011ஆம் ஆண்டில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. 16 ஆம் நூற்றாண்டுக்குரிய சிறப்பாக பேணப்படும் மற்றும் தனித்துவமான அம்சங்கள் நிறைந்த இந்த 'இயேசுவின் கோட்டை' கென்யாவின் அடையாளமாகக் கொள்ளப்படுகின்றது. மனித உடலின் அமைப்பை ஒத்தாற் போல் இதன் தோற்றம் அமைகின்றது. போத்துக்கேயரின் இராணுவ நோக்கங்களுக்காக இது 2.36 ஹெக்டேயர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது. 16 ஆம் நூற்றாண்டின் போர்த்துக்கேயரின் இராணுவக் கட்டடக்கலை நுணுக்கங்களுக்கு இயேசுவின் கோட்டை சிறந்த உதாரணமாகத் திகழ்கின்றது. சாதாரணமாக போர்த்துக்கேயரின் கோட்டைச் சுவர்கள் 15 அடி உயரம் கொண்டவையாக இருக்கும். ஆனால் இந்தக் கோட்டைச் சுவர்கள் 18 அடிஉயரம் கொண்டவையாகக் காணப்படுகின்றன. படைஎடுப்புக்கள், ஆட்சிமாற்றங்களின் விளைவாக அராபிய, ஐரோப்பிய கலைத்துவ பாணிகளின் சங்கமமாக இக்கோட்டை திகழ்கின்றது.



# போர்த்துக்கேயரின் அழியாத அடையாளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ் அடையாளங்களை ஆவணப்படுத்திய பேராசிரியர் க. கணபதிபிள்ளை

- பேராசிரியர் சபா ஜெயராசா

தமிழ் தேசிய அடையாளங்களைத் தேடுதலும், கண்டறிதலும், ஆய்வுப்படுத்தலும், ஆவணப் படுத்தலும் என்ற செயற்பாடுகளிலே தமக்கெனவுரிய தனித்துவத்தை நிலை நிறுத்தியவர் பேராசிரியர் க. கணபதிப் பிள்ளை (1903 - 1968)யாவார்.

பிரித்தானியக் கல்வி முறையில் வழிவந்த நவீனமயப்பாட்டையும் மரபு வழியான தமிழ்க் கல்வியில் உட்பொதிந்த செவ்வியற் செழுமையினையும் ஒன்றிணைக்கும் செயற்பாட்டிலே பேராசிரியரின் பங்களிப்பு விதந்து பேசப்படத்தக்கது. அவரது தந்தையார் வடமராட்சியிலுள்ள தும்பளை என்ற கிராமத்தின் மரபு வழி மருத்துவர். மரபு வழித் தமிழ் மருத்துவம் என்பது தமிழ் இலக்கணம், இலக்கியம் ஆகியவற்றின் பயில்வோடு ஒன்றிணைந்த புலமைத் தொகுதியாகச் செழுமை கொண்டிருந்தது. பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களின் ஆழ்ந்த தமிழ்ப் புலமையின் தொடக்க நிலை அங்கிருந்தே ஆரம்பிக்கின்றது.

தந்தையாரிடமிருந்து ஆரம்பித்த அவரது மரபு வழிக் கல்வித் தேடலைப் பருத்தித்துறையில் வாழ்ந்த முதுபெரும் தமிழறிஞர் மகாதேவ ஐயர் முத்துக்குமாரசாமிக் குருக்கள் மேலும் ஆழப்படுத்தினார். அக்காலத்தைய தமிழ் கலையின் ஆழ்ந்த பயில்வு வடமொழிக் கல்வியுடன் தொடர்புபட்டிருந்தது. அத்தகைய இரு மொழி அறிவின் வீச்சு இலக்கணம் இலக்கியம் தொடர்பான ஆய்வுகளின் தருக்கத்தை வலிமையுறச் செய்தது.

முத்துக்குமாரசாமிக் குருக்கள் உடுப்பிட்டி சிவசம்புப் புலவரின் மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது. சிவசம்புப் புலவர் மொழிப்புலமையுடன் ஆக்க மலர்ச்சி ஆளுமை கொண்டவராகவும் விளங்கினார். அந்த ஆக்க மலர்ச்சி ஆளுமையின் வீச்சு பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களிடத்து மேலும் விசை கொண்டு நாடக ஆக்க மலர்ச்சியை முகிழ்த்தெழச் செய்தது.

பேராசிரியரது ஆங்கிலக் கல்விக்குரிய விரிந்த தளத்தை மெதடிஸ்த திருச்சபையினால் நடத்தப்பெற்ற பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அமைத்துத் தந்தது. யாழ்ப்பாணத்துத் தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலக் கல்வியில் மெதடிஸ்த திருச்சபையினரின் பணிகள் விதந்து குறிப்பிடப்பட வேண்டியுள்ளன. கிராமங்கள் தோறும் பரவலாக அவர்களுடைய பாடசாலைகள் இயக்கமுற்றமை எழுத்தறிவு வளர்ச்சியைப் பெருக்கமடையச் செய்தது. ஆறுமுக நாவலர் போன்ற பெரும் அறிஞர்களின் உருவாக்கத்திலும் மெதடிஸ்த திருச்சபையின் கல்விப் பணிகளின் நீட்சி இருந்தமை சுட்டிக் காட்டப்பட வேண்டியது.

பாடசாலைக் கல்வியைத் தொடர்ந்து பேராசிரியரின் உயர் கல்வி கொழும்பிலுள்ள பல்கலைக்கழகக் கல்லூரியிலே இடம் பெற்றது. இலங்கைப் பல்கலைக்கழகம் 1942 ஆம் ஆண்டிலே தான் தோற்றுவிக்கப்பட்டது. 1927 ஆம் ஆண்டிலே அவர் உயர் கல்வி கற்க நுழைந்த வேளை அது பல்கலைக்கழகக் கல்லூரி என்ற பெயரையே பெற்றிருந்தது. பெருமளவிலே 'கல்லூரி' என்று அடையாளப்படுத்தப்பட்டாலும் தர அளவிலே அது உன்னத நிலையில் இருந்தது. பேராசிரியர் ஜி.பி. மலலசேகரா, ரபுக்வெல்ல சித்தார்த்த தேரர் முதலிய புகழ்பூத்த கல்விமான்கள் அங்கே கற்பித்தற் பணியை மேற் கொண்டிருந்தனர்.

இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியில் உன்னத தேர்ச்சியுடன் தமது பட்டப்படிப்பை முடித்துக் கொண்ட பேராசிரியர் புலமைப் பரிசில் பெற்று அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும், இலண்டன் பல்கலைகழகத்திலும் பின் பட்டப்படிப்புகளைத் தொடர்ந்தார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே தமிழை மேலும் ஆழ்ந்து கற்று 'வித்துவான்' பட்டத்தைப் பெற்றுக் கொண்டார்.

கடந்த நூற்றாண்டின் தொடக்கக் காலத்திலிருந்து ஆய்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையில் (RESEARCH METHODOLOGY) என்ற புலமை செயற்பாடு மேலும் வளர்ச்சியடையத் தொடங்கியது. மூலாதாரங்களைத் தேடுதல், கால நிருணயங்களைச் சான்றாதாரங்களுடன் மேற்கொள்ளல், கருதுகோள்களை உருவாக்குதல் அவற்றைப் பரீட்சித்துப் பார்த்தல் என்றவாறு புறவய முறைகள் வளர்ச்சியடைந்தன. அவற்றை அடியொற்றியே உயர் நிலையான ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டன. அவ்வாறான நவீனப்பாடு கொண்ட ஆய்வை ஆர். எல். ரேணர் என்பவரின் மேற்பார்வையில் முன்னெடுத்து கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார்.

ஏழாம், எட்டாம் நூற்றாண்டுகளின் தமிழ்ச் சாசனங்களே அவரது கலாநிதிப் பட்டதிற்குரிய ஆய்வுப் பொருளாக அமைந்தது. கலாநிதிப் பட்டப்படிப்புக்குத் தமிழ் சாசனங்களை ஆய்வுப் பொருளாக்கிய முன்னோடி ஆளுமையினராகவும் பேராசிரியர் விளங்குகின்றார்.

1956 ஆம் ஆண்டைத் தொடர்ந்து இலங்கைத் தமிழரைப் பொறுத்தவரை அடையாள நெருக்கடி (IDENTITY CRISIS) தீவிரமடையத் தொடங்கியது. இந்நிலையில் தமிழரது வரலாற்று நீட்சியையும் அடையாளங்களையும் புலமை நிலையில் ஆய்வு செய்யவேண்டிய தேவை ஆய்வறிவாளர்களுக்கு ஏற்பட்டது. அந்நிலையில் இரண்டு வழிகளில் அத்தகைய புலமைச் செயற்பாட்டைப் பேராசிரியர் முன்னெடுத்தார்.

1. சங்கிலி நாடகத்துக்கு முன்னுரையாக இலங்கை வாழ் தமிழர் வரலாறு பற்றிய நீண்ட ஆய்வு முன்னுரையை எழுதியமை.

2. வாழ்வியற் கோலங்களைச் சித்திரிப்பதன் வாயிலாகத் தமிழரின் இருப்பையும் தனித்துவத்தையும் நிறுவ முயன்றமை

சங்கிலி வரலாற்று நாடகத்துக்கு முன்னுரையாக இலங்கைத் தமிழர் வரலாறு பற்றிய ஆய்வை முன்னெடுத்தமை இலங்கைத் தமிழ் மக்கள் எதிர்கொண்ட அடையாள நெருக்கடிக்குரிய எழுத்தாக்கக் கவசமாயிற்று. சங்கிலி நாடகம் மனவெழுச்சி கலந்த அகவய வெளிப்பாடாகவும் தமிழர் வரலாறு புறவய அணுகு முறைக்கு உட்பட்ட துலக்கமாகவும் இருதள இயல்புகளைக் கொண்டிருந்தது.

தமிழரது வாழ்வியற் கோலங்களை விபரித்து 'ஈழத் தமிழர் கிராமிய வழிபாடு', 'ஈழத் தமிழர் உணவு', 'யாழ்ப்பாணத்துப் பழக்கவழக்கங்கள்', 'நாட்டுக் கூத்து', 'கற்பகதரு' முதலாம் கட்டுரைகளை அவர் எழுதினார். பேராசிரியரது காலத்தில் மேலைப்புலப் பல்கலைக் கழகங்களில் நாட்டாரியல் மற்றும் மானிடவியல் துறைகள் விரைந்து வளர்ச்சியடையத் தொடங்கின. அத்தகைய துறை களைத் தமிழிலே கால்கோள் கொள்ளச் செய்யும் புலமை நடவடிக்கையாகவும் பேராசிரியரது செயற்பாடுகள் அமைந்தன.

பல்கலைக்கழகப் பேராசிரியர்களுள் ஒரு சிலரே படைப்பு இலக்கியத் துறையிலே தடம் பதித்தவர்களாகின்றனர். அவ்வகையில் சுவாமி விபுலானந்தர், பேராசிரியர் கணபதிப்பிள்ளை ஆகியோர் தனித்துவம் பெறுகின்றனர்.

நாடகம், செய்யுள், நாவல், சிறுவர் இலக்கியம் முதலாம் துறைகளிலே பேராசிரியர் தமது ஆக்க மலர்ச்சி ஆளுமையினை வெளிப்படுத்தியுள்ளார்.

'உடையார் மிடுக்கு', 'நாட்டவன் நகர வாழ்க்கை', 'துரோகிகள்','சுந்தரம் எங்கே', 'கண்ணன் கூத்து', 'முருகன் திருகுதாளம்', 'பொருளோ பொருள்', 'சங்கிலி', 'தவறான எண்ணம்' முதலிய நாடகங்கள் வாயிலாகத் தமது ஆக்க மலர்ச்சி ஆளுமையினைப் பேராசிரியர் வெளிப்படுத்தி உள்ளார்.

யாழ்ப்பாணப் பேச்சு வழக்கின் தனித்துவமான ஆளுமை பேராசிரியரின் நாடக எழுத்தாக்கங்களிலே பளிச்சீடு கொண்டது. ஆங்கில இலக்கிய மரபிலும் ஆழ்ந்து வேரூன்றிப் பரவியிருந்த நாடகவியலோடு பேராசிரியர் கொண்டிருந்த ஊடாட்டம் தமிழ் மொழி வழியாக மேலெழத் தொடங்கியது.

சமூக நாடகங்களிலே திரிபுபடுத்தப் படாத நடப்பு நிலையான பேச்சு மொழியையும் அதன் வழியாக முகிழ்த்தெழும் படிமங்களையும் அவர் எவ்வாறு கோலமாக்கினார் என்பதற்குரிய ஓர் எடுத்துக்காட்டு வருமாறு:

''அந்த வேலி முழுவதும் கண்டாயங்களாய்க் கிடக்குது மோனை. உந்த அடுத்த வீட்டுக் கிளைக்காலியள் முருங்கைக்காய் எல்லாத்தையும் புடுங்கிக்கொண்டு போட்டுதுகள். ஆக நாலு காய்தான் கிடந்தது. இதுதான் மோனை இண்டைக்குக் கறி... சீய், இந்த வீடு கிடக்கிற கிடையைப்பார். ஒரு நேரம் நான் வீட்டிலை இல்லாட்டால் எல்லாந் தலை கீழாய்ப் போடும். என்னடி பிள்ளை, இதை எப்பன் கூட்டிவிடக் குடாதே? ஒராள் இருந்து உனக்குச் சொல்லிக் கொண்டிருக்க வேணுமே? உந்த நாசங்கட்டின விளக்குமாத்தையுங் காணயில்லை'' (வள்ளி - பொருளோ பொருள் நாடகம்)

மிகவும் செழுமை வாய்ந்த யாழ்ப்பாணத்துப் பேச்சுத் தமிழைப் பிற்காலத்தில் நையாண்டியாகவும் கிண்டலாகவும், கேலியாகவும் சிலர் பயன் படுத்திய அபத்தமான நிலை மேடை நாடகங்களிலும், வானொலி நாடகங்களிலும் இடம்பெற்றமையைச் இங்கு சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

கருத்தியல் நிலையிலே மண்வாசனை, பேச்சு மொழி வகை மாதிரியான பாத்திரங்கள் முதலியவற்றின் தேவையை இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தொடர்ந்து வற்புறுத்தி வந்த நிகழ்ச்சிகளையும் இங்கே தொடர்புப்படுத்தி 'யாழ்ப்பாண அரங்கு' என்ற தனித்துவமான அரங்க வடிவத்தில் உருவாக்கத்தில் பேராசிரியர் வகிபாகம் மிக முக்கியமாக அமைந்துள்ளமையைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண அரங்கின் படிமுறை வளர்ச்சியில் பின்னர் குழந்தை சண்முகலிங்கம் அவர்களின் பங்களிப்பு மேலும் புதிய பரிமாணங்களை வருவித்துள்ளது.

யாழ்ப்பாண அரங்கில் ஆரம்ப காலத்தைய சொல்லாடல்களாக வறுமை, சீதனம், சமூக அசைவியத்தின் விளைவுகள், கபடத்தனங்கள் முதலானவை அமைந்தன. அவை பேராசிரியரது நாடகங்களில் மையப்பாடுகளாக அமைந்தன. வரலாற்று மாற்றங்களோடு இனத்துவ நெருக்கடிகள் இடம்பெறத் தொடங்க இவற்றோடிணைந்த புதிய சொல்லாடல்களை இ.முருகையன், குழந்தை சண்முகலிங்கம் முதலியோர் முன்னெடுத்தனர்.

சமகாலத்தைய வாழ்வின் நடப்பியலைத் திரிபின்றி செய்யுள் வடிவத்துள் கொண்டுவந்த அவரது கலை ஆளுமையின் வெளிப்பாடாக 'காதலி ஆற்றுப்படை' அமைந்தது. யாழ்ப்பாணத்து வாழ்வியலை ஆற்றுப்படை அமைப்பினுள் நிலைபேறு கொள்ளச் செய்த ஆக்கமாக அது அமைந்துள்ளது. பருத்தித்துறை நோக்கிச் செல்லும் நெடுவழியில் அமைந்துள்ள வாழ்க்கைக் கோலங்களை இங்கிதமான செய்யுள் வடிவில் அமைத்துத் தந்த ஆக்கமாக காதலி ஆற்றுப்படை அமைந்துள்ளது. ஆற்றுப்படை இலக்கியத்துக்கு அது புதிய பரிமாணத்தைத் தந்துள்ளது.

பேராசிரியரின் செய்யுள் ஆற்றல் வளத்தை வெளிப்படுத்திய பிறிதோர் ஆக்கமாக 'மாணிக்கமாலை' அமைந்துள்ளது. அது ஹர்ஷவர்த்தனரின் இரத்தினாவலி என்னும் வடமொழி நூலின் தமிழாக்கமாயிற்று. பேராசிரியரின் வடமொழிப் புலமையும் தமிழ்ப் புலமையும் அந்நூலின் புலப்பாடாகவுள்ளது. பல்வேறு யாப்பு வடிவங்களைப் பயன்படுத்தி வாசித்து இன்புறத்தக்க நாடகப் பிரதியாக்கமாக அது உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ்ச் செய்யுள் மரபோடு தன்னை ஆழ இணைத்துக் கொண்ட பேராசிரியர் யாப்புக் கட்டமைப்பை தமது செய்யுள்களில் இறுகப் பற்றி நின்றார். மரபுவழி தமிழ்க் கல்வியில் அவர் ஆழ்ந்து வேரூன்றி நின்றமையால் யாப்பை மீற முடியாதிருந்த நிலை தோற்றம் பெற்றது. அவர் எழுதிய 'தூவுதும் மலரே' என்ற தொகுதியில் யாப்போடு இணைந்த மனவெழுச்சிச் செறிவினைக் காண முடியும்.

வசன வழியான இலக்கிய ஆக்க நடவடிக்கைகளிலும் பேராசிரியர் ஈடுபட்டிருந்தார். 'பூஞ்சோலை' மற்றும் 'வாழ்க்கையின் விநோதங்கள்' ஆகிய இரண்டு நாவல்களை அவர் ஆக்கம் செய்தார். அவை இரண்டும் ஜேர்மன், பிரெஞ்சு ஆகிய மொழிகளில் எழுதப்பட்ட நாவல்களின் தமிழ் வடிவங்களாகும். நாவல்களை மொழி பெயர்க்கும் போது எத்தகைய மொழி நடையைப் பயன்படுத்துவது என்பது பற்றிய சிக்கல் அக்காலத்தில் மேலோங்கியிருந்தது. அந்நிலையில் பேராசிரியர் செவ்வியல் மொழித்தளத்தில் நின்றே தமது எழுதுத்துச் செயற்பாட்டை முன்னெடுத்தார்.

பேராசிரியரது எழுத்துப் பங்களிப்புகளில் ஏற்றம் பெறும் ஒரு செயற்பாடு சிறுவர் இலக்கிய ஆக்கமாகும். பல்கலைக்கழகப் பேராசிரியர் வரிசையில் சிறுவர் இலக்கிய ஆக்கத்தில் ஈடுபட்ட முதல் பேராசிரியராகவும் அவர் விளங்குகின்றார். அந்த வகையில் அவர் எழுதிய 'நீரர மங்கையர்' குறிப்பிட்டுக் கூறத்தக்கது.

ஆங்கில மரபிலே சிறுவர் இலக்கியம் தனித் துறையாக வளர்ந்து வருதலையும் குழந்தை உளவியலுடன் இணைந்த வகையில் அது எழுச்சி கொண்டு வருதலையும் மேலைப் புலக் கலை இலக்கிய ஊடாட்டங்கள் வாயிலாகப் பேராசிரியர் அறிந்து கொண்டார். அதே வேளை தமிழ் மரபில் இடம்பெற்றிருந்த சிறுவர்க்கான கதை சொல்லும் கிராமியப் பண்பாட்டின் ஊடாட்டமும் பேராசிரியருக்கு இருந்தது. அந்த இரண்டு மரபுகளின் இணைப்பு வளத்தை அவரது சிறுவர் இலக்கிய ஆக்கங்களிலே காண முடியும். அச்சு வடிவில் வெளி வராத அவருடைய சிறுவர் இலக்கிய ஆக்கங்கள் பல இருத்தலையும் இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட வேண்டியுள்ளது.

'கட்டுரை' என்ற வடிவம் தமிழிலே கால்கோள் கொண்டு வளர்வதற்குத் தளமிட்டவர்களுள் ஆறுமுக நாவலரும் சுவாமி விபுலானந்தரும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள். அதனை ஒரு புலமை நடவடிக்கையாக மேலும் முன்னெடுத்து பேராசிரியர் ஏற்றம் பெறச் செய்தார். இளங்கதிர், கலைப்பூங்கா, ஈழகேசரி, வீரகேசரி, தினகரன், சுதந்திரன், இந்து சாதனம், ஈழமணி முதலிய இதழ்களில் அவர் எழுதிய ஆய்வு பூர்வமான கட்டுரைகள் வெளிவந்துள்ளன. மேலும் தமிழர் அடையாளங்களைப் புலப்படுத்தும் ஆங்கிலக் கட்டுரையாக்கங்களையும் அவர் மேற்கொண்டார்.

மரபு வழியான தமிழ்க் கல்வி முறைமைக்கும் பல்கலைக்கழக நிலையிலே தமிழ்க் கல்வி முறைமைக்கும் அடிப்படையான வேறுபாடுகள் உண்டு. மரபு வழியான தமிழ்க் கல்வியில் மனன முறை அல்லது நெட்டுருச் செய்தல் மேலோங்கியிருந்தது. பல்கலைக்கழக முறைமையில் விரிவுரை தழுவிய கருத்தாடல் மேலோங்கியிருந்தது. மரபுவழிக் கல்வியில் இறுகி உறைந்திருந்தோர் பல்கலைக்கழக முறைமையிலே காணப்பட்ட நவீனப்பாட்டை அங்கீகரிக்க முடியாதவராக இருந்தனர். ஆனால் பேராசிரியரின் அணுகுமுறை பழைமையின் நலன்களையும் புதுமையின் வளத்தையும் அங்கீகரிப்பதாக அமைந்தது.

தமிழியலின் வளர்ச்சிக்கும், பழைமையின் நீட்சிக்கும் புதுமையின் ஏற்றங்களுக்கும் பேராசிரியர் மேற்கொண்ட பங்களிப்புகள் நிலைபேறு கொண்ட பதிவுகளாகவுள்ளன. அவரது நாடகப் பிரதிகள் சிலவற்றை ஆற்றுகை வெளிக்குக் கொண்டுவரும் முயற்சிகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நாடக அரங்கியல் துறையினர் மேற்கொள்ளல் பயனுள்ள மீள்வாசிப்பாகவும் அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'ஏட்சி' பனிமனிதனின் மம்மி இயற்கையால் பாதுகாக்கப்பட்டதாகும். 1991 ஆம் ஆண்டு இத்தாலியின் அல்ப்ஸ் மலைப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த மம்மியில் கடந்த 20 ஆண்டுகளாக நடாத்தப்பட்ட ஆய்வுகளின் விளைவாக அவன் எங்கு வாழ்ந்தான் எப்படி வாழ்ந்தான் என்பது போன்ற பல தகவல்கள் ஏற்கனவே வெளிவந்துள்ளன.தற்போது புதிய தகவலாக ஏட்சி பனி மனிதனின் மரபணு கண்டுபிடிக்கப்பட்டு அவனது உடலியல் கூறுகள் பகுப்பாய்வு செய்யப்படுகின்றது. இவனது குருதி வகை 'ஓ' எனவும் மற்றும் பழுப்பு நிறக் கண்கள், இதயநோய் மற்றும் நீரிழிவு ஆகிய நோய் இருந்ததற்கான அறிகுறிகள் காணப்பட்டன என மம்மிகளுக்கான யூராக் ஆய்வு நிலையத்தைச் சேர்ந்த அல்பர்ட் சிங், நேச்சர் கொமினிக்கேசன் ஆய்விதழுக்கு எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

# 5300 ஆண்டுகள் பழைமையான மனிதனுக்கும் இதயநோய், நீரிழிவு வியாதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கருங்கற் குளம்



வட்ட நடை தியானம் மேடை

# ரிட்டிகல மூலிகை மலை

இராம இராவண யுத்தத்தின் போது இராவணனின் மகன் இந்திரஜித் தொடுத்த தாக்குதலில், இலக்குவன் காயப்பட்டு குற்றுயிராகக் கிடந்த வேளை, அவனைக் குணப்படுத்த இமய மலையிலிருந்து சஞ்சீவி மருந்து மூலிகையை கொண்டுவரும்படி இராமன், அனுமனைப் பணித்தார். இராமனின் கட்டளைப்படி இமய மலையிலுள்ள சஞ்சீவினி மூலிகையைக் கொண்டுவரச் சென்ற அனுமன், மலையின் அருகில் சென்ற போது மூலிகையின் பெயரை மறந்துவிட்டான். எனவே மூலிகை வளரும் மலையின் பகுதியை பெயர்த்து எடுத்து கையில் சுமந்து வந்ததாக நம்பப்படுகின்றது.

அனுமன் சஞ்சீவினி மலையை பெயர்த்து எடுத்து கையில் ஏந்திவரும் காட்சியைக் கொண்ட வர்ணப் படங்கள் இன்று



இராமாயணத்தில் இலங்கை - 20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வீடுகளில் வைத்து வணங்கப்படுவதுடன் கடைகளிலும் பல்வேறு அளவுகளில் விற்பனை செய்யப்படுகின்றன. இவ்வாறான படங்கள் பக்தி சிரத்தையுடன் பார்க்கப்படுகின்றன. இப்பழக்கம் முற்காலத்தைவிட இப்பொழுது பரவலாகக் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இவ்வாறு கையில் சஞ்சீவினி மலையை ஏந்தியவாறு அனுமன் வானத்தில் பயணித்துக் கொண்டிருக்கும்போது, சஞ் சீவினி மலையின் சில பகுதிகள் தரையில் வீழ்ந்தன. இவ்வாறு விழுந்த இடங்கள் என்று நம்பப்படும் பல அரிய மூலிகைகளைக் கொண்ட மூலிகை மலைகள் இலங்கையில் பல பகுதிகளிலும் காணப்படுகின்றன. மன்னாரில் உள்ள தள்ளாடிப் பிரதேசத்திலும் காலியில் றுமன்ஸலாவ என்னும் கடற்கரைப் பகுதியிலும் மத்திய மாகாணத்தில் ஹபரணவிற்கு அருகிலுள்ள ரிட்டிகல பகுதியிலும் விழுந்ததாக நம்பப்படுகின்றது.

இவ்வாறு நம்புவதற்கு பல காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன. குறிப்பிட்ட குன்றுகளில் உயிர்காக்கும் மூலிகைகள் காணப்படுகின்றன என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை. ஆனால்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருகில் இருக்கும் மலைகளில் இத்தகைய மூலிகைச் செடிகள் காணப்படவில்லை. இமய மலையில் காணப்படும் உயிர் காக்கும் அரிய பல மூலிகைகள் குறிப்பிட்ட மலைகளிலும் மட்டுமே காணப்படுவது குறித்து நியாயமான விளக்கம் இதுவரை முன்வைக்கப்படவில்லை.

குறிப்பிட்ட மலைகளில் காணப்படும் அரிய பல மூலிகைகள் குறித்த விபரம், தெளிவு மக்களிடம் இல்லாமல் பெருமளவு மூலிகைகள் அழிவடைந்து வருகின்றன. இந்தவகை மூலிகையை எந்த வகை நோய்க்கு பயன்படுத்த முடியும் என்பதையோ அல்லது குறிப்பிட்ட மூலிகையை அடையாளம் காணும் அறிவையோ நாம் பெற்றிருக்கவில்லை என்ற உண்மையை ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும்.

கொழும்பிலிருந்து வடகிழக்கில் சுமார்188 கி.மீ தூரத்தில் அதாவது ஹபரண - அனுராதபுரம் வீதியில் பயணித்து, ஹன்வல்பொல என்ற சந்தியிலிருந்து ரிட்டிகலவுக்கு செல்லும் வீதியில் சுமார் 12 கி. மீ. தூரம் வரையில் பயணிக்கும் போது, ஒற்றையடி மண் பாதையை அடைய முடியும். இப்பாதையினூடாகப் பயணிக்கும்போது ரிட்டிகல மலையடிவாரத்தை அடைய முடியும். இலங்கைச் சிறுத்தைகளும் விஷப் பாம்புகளும் காட்டு யானைகளும் அதிகம் நடமாடும் இந்தக் காட்டுப் பாதையில் மிகவும் எச்சரிக்கையாக பயணம் செய்ய வேண்டும். மலையடிவாரத்தில் இலங்கை



வைத்தியசாலை வளாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்பொருள் திணைக்களத்தின் வடமத்திய பிரதேச அலுவலகம் இயங்குகின்றது. மலையிலுள்ள தொல்லியல் சின்னங்களைப் பாதுகாப்பதும் பராமரிப்பதும் அங்குவரும் உல்லாசப் பயணிகள் மற்றும் உள்ளூர் பயணிகளுக்கு வழிகாட்டுதல் உதவிகளையும் இந்த அலுவலகம் மேற்கொள்ளுகின்றது.

ரிட்டிகலமலை கடல்மட்டத்திலிருந்து சுமார் 2,513 அடி உயரம் கொண்டது. இலங்கையின் வட பாகத்தில் மிக உயரமான மலை இதுவாகும். வடக்கு - தெற்காக மூன்று மைல்களுக்கும் அதிகமான நீளத்தில் பரந்து காணப்படுகின்றது. 'அச்சமுட்டும் மலை' என மகாவம்சத்தில் வர்ணிக்கப்படும் இந்த மலையின் மடியில் காணப்படும் மூலிகைகளின் மகத்துவம் காரணமாக கி. மு. முதலாம் நூற்றாண்டிலேயே இங்கு ஆயுர்வேத வைத்தியசாலை அமைக்கப்பட்டு மிகச் சிறப்பாக இயங்கியுள்ளது.1000 ஆண்டுகளுக்கு மேலாக மலையின் உச்சிப் பகுதி பௌத்த மடாலயமாக இயங்கி வந்துள்ளது. இங்கு இயற்கையாக அமைந்த 70 க்கும் மேற்பட்ட குகைகளில் பௌத்த மத குருமார் மத மற்றும் சமூகத் தொண்டாற்றி வந்தனர்.

கி. மு. 119 - 109 வரை ஆட்சி செய்த மன்னன் திஸ்ஸ என்பவரால் இங்கு பௌத்த மடாலயம் அமைக்கப்பட்டது. இயற்கையாக அமைந்த மலைக் குகைகளில் பௌத்த மத குருமார் வசித்துள்ளனர். இதற்கு சான்றாக குகைகள் அமைந்துள்ள கற்பாறைகளில் பல கல்வெட்டுகளை எழுதி வைத்துள்ளனர். பாளி மொழியிலமைந்த இக்கல்வெட்டுக்கள் படியெடுக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

கி. பி. 846 - 866 வரை ஆட்சிசெய்த மன்னன் சேனா -I என்பவனே இன்று எம்மால் காணக்கூடிய இங்குள்ள கருங்கற் கட்டிட நிர்மாணங்களைச் செய்ததாக தெரியவருகின்றது.

பத்தாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் அந்நியப் படையெடுப்புகளின் பின்னர் ரிட்டிகல மடாலயம் மற்றும் வைத்தியசாலைகள் அழிவுக்குட்பட்டன. இரண்டு நூற்றாண்டுகள் வரை இப்பகுதி கவனிப்பாரற்று இயற்கை அழிவுகளுக்குட்பட்டு காட்டிற்குள்ளும் மண்ணிற்குள்ளும் காணாமற் போனது.

19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அரச நில அளவையாளர் ஜேம்ஸ் மன்டெல் மற்றும் இலங்கைத் தொல்லியல் ஆணையாளர் எச். சி. பி. பெல் இருவரும் இப்பகுதிக்கு விஜயம் செய்து தமது அனுபவங்களை அறிக்கையாகத் தயாரித்து வெளியிட்டிருந்தனர். அதனைத் தொடர்ந்து 3776 ஏக்கர் நிலப்பகுதியைக் கொண்ட ரிட்டிக்கல மலைப் பகுதி இயற்கையின் செழிப்பிற்காகவும் அதனைப் பாதுகாப்பதற்காகவும் தொல்லியல் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கிறிஸ்துவுக்கு முன் முதலாம் நூற்றாண்டிலிருந்தே இந்தக் குன்றின் முக்கியத்துவம் உணரப்பட்டு, அங்குள்ள மருத்துவ மூலிகைகளின் தன்மைகள் அறியப்பட்டதன் விளைவாகவே இங்கு ஆயுர்வேத வைத்தியசாலையும் பிக்குகளின் முக்கிய தியான மடாலயமும் அமைக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.


- மிருணாளினி -



வைத்தியசாலை பாவனைப் பொருட்கள்







கற்பாலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவ குறிப்புகளைத் தாங்கிவந்த தமிழர் பழமொழிகள்

தமிழர்களால் வழிவழியாகச் சொல்லப்பட்டுவரும் பழமொழிகளால், முந்தைய தமிழ் மக்களின் பண்பாட்டையும், பழக்க வழக்கங்களையும், சமுதாயப் பின்னணியையும் அறிந்து கொள்ள முடிகின்றது. இத்தகைய பழமொழிகளில் மருத்துவச் செய்திகளும், நோய் ஏற்படாமல் இருக்கக் கடைப்பிடிக்க வேண்டிய ஆரோக்கிய வழிமுறைகளும், மற்றும் உணவு மற்றும் மருந்துப் பொருட்களின் மருத்துவ தன்மைகளும், அதனால் குணமடையக்கூடிய நோய்கள் பற்றிய விபரங்களும் காணக்கிடைக்கின்றன. இத்தகைய மருத்துவப் பழமொழிகள் பெரும்பாலும், மக்களால் சாதாரணமாகப் பேசப்படுவதில்லை. நோய் உண்டான போதும், கேலியாகப் பேசும் போதும் மட்டுமே வெளிவருகின்றன. மக்களின் அனுபவங்களே பழமொழிகள். அரிய மருத்துவச் செய்திகள் அடங்கிய பழமொழிகள் சிலவற்றைக் காண்போம்...

**1. 'இளைத்தவனுக்கு எள்ளைக்கொடு;
கொளுத்தவனுக்குக் கொள்ளைக் கொடு'**

எள், கொள்ளு என்பவை இரண்டும் உணவு வகைகள். எள் என்பது நல்ல சத்துள்ள உணவாகும். மிகவும் மெலிந்த தேகம் கொண்டவர்கள் எள்ளைத் தின்றால் நன்கு உடல் பெருக்கும் என்றும், பருமனான உடலைக் கொண்டவர்கள் கொள்ளைத் தின்றால், உடல் மெலிந்து போதுமான அளவோடு இருக்கும் என்றும் இப்பழமொழி கூறுகிறது.



**2. 'ஆற்றுநீர் வாதம் போக்கும்; அருவி நீர் பித்தம் போக்கும்; சோற்று நீர் இரண்டையும் போக்கும்'**

மனிதர்களுக்கு ஏற்படக் கூடிய அனைத்து நோய்களுக்கும் அடிப்படையாக விளங்குவது வாதம், பித்தம், கபம் என்ற மூன்றுமே ஆகும். இவற்றுள் வாதம், பித்தம் தொடர்பாக ஏற்படும் நோய்களைப் போக்கும் வழிமுறைகளை இப்பழமொழி விளக்குகின்றது. ஆற்று நீரிலும், அருவி நீரிலும் உயர்ந்த தாதுப் பொருட்களும், மூலிகைச் சத்துக்களும், நிறைந்து காணப்படும். ஏனெனில், ஆற்றுப் படுகையிலும், அருவிக்கு நீர் வரும் மலைப் பகுதியிலும் மூலிகைச் செடிகள் நிறைந்து காணப்படும். மூலிகைகளின் மீது பட்டு இந்நீர் வருவதால் இத்தகைய குணமுடையதாக உள்ளது. வாதநோய் தொடர்பாக நரம்புக்கோளாறுகளும், பித்தநோய் தொடர்பாக மூளைக் கோளாறும் ஏற்படுகின்றன. இவற்றைக் குணப்படுத்த ஆற்று நீரும், அருவி நீரும் பயன்படுகின்றன. வாதம், பித்தம் இரண்டையும் சோற்று நீர் குணமாக்குகின்றது. இத்தகைய மருத்துவகுணம் கருதியே நாட்டுப்புற மக்கள் காலையில் எழுந்ததும் பழைய சோற்று நீரை அருந்துகின்றனர்.

**3.'வேலம் பட்டை பித்தத்தைப் போக்கும்; ஆலம்பட்டை மேகத்தைப் போக்கும்'**

வேலம்பட்டையை இடித்து ஒரு குவளை நீர்விட்டுக் காய்ச்சி வடிகட்டி அரைக் குவளையாக்கித் தினமும் காலை வேளை மட்டும் குடித்துவர பித்த நோய்களான, வயிற்றுப்புண், பித்தமயக்கம், கைகால் குடைச்சல் குணமாகும். ஆலமரத்தின் பட்டையைக் குடிநீராக்கி குடித்து வர வாய்ப்புண், வாய்நாற்றம், சிரங்கு, கரப்பான்படை ஆகியன விலகும் என்கிறது பழமொழி.

**4. 'மாதா ஊட்டாத அன்னத்தை மாங்காய் ஊட்டும்'**

மாங்காய் என்பது மாங்காய் ஊறுகாயைக் குறிக்கும், மாங்காய் ஊறுகாய் பசியைத் தூண்டுகிறது. எனவே உணவில் மாங்காய் ஊறுகாயைச் சேர்த்துக் கொள்வதால் ஜீரண சக்தி அதிகரிக்கும் என்பதை இப்பழமொழி விளக்குகிறது.

**5. 'ஒரு போது உண்பான் யோகி; இருபோது உண்பான் போகி; முப்போது உண்பான் துரோகி'**

ஒரு வேளை உணவை உட்கொண்டு ஆழ்ந்த யோகப் பயிற்சி மேற்கொள்வதால், மூளையின் அடிப்பகுதியில் ஹைப்போதாலமஸ் என்னும் அமைப்பிற்குக் கீழே உள்ள சுரப்பியானது நரை திரை நோய்களை அணுக விடாது. இருவேளை உணவை உட்கொள்வதால் வாழ்வு நோயற்று இன்பமுடையதாக இருக்கும். மூன்றுவேளை உணவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொள்பவர்கள் நோயாளிகளாகவே இருப்பர். அஜீரணம், மலச்சிக்கல், குடல்நோய் போன்றவற்றால் இவர்கள் பாதிக்கப்பட்டு, எந்நேரமும் நோயுடன் போராடி வாழும் நிலையை உண்டாக்கும்.

**6. 'அழுத பிள்ளை சிரித்ததாம் கழுதைப் பாலைக் குடித்ததாம்'**

சில குழந்தைகள் பிறக்கும்போதே நோய்களின் அறிகுறியுடன் பிறக்கின்றன. உள்ளங்கை, உள்ளங்கால் பகுதிகள் நீல நிறமாக இருப்பின் குழந்தை செவ்வாப்பு என்னும் நோயால் தாக்கப்பட்டுள்ளதாக மருத்துவர்கள் கருதுகின்றனர். இதற்குரிய மருந்தாகக் கழுதைப் பால் புகட்டப்படுகிறது என்பதனை இப்பழமொழி குறிக்கிறது.

**7. 'இருப்பவன் இரும்பைத் தின்பான், போறவன் பொன்னைத் தின்பான்'**

உடல் இயங்குவதற்கு இரும்புச் சத்து இன்றியமையாதது. இதன் குறைவால் இரத்தச் சோகை என்னும் நோய் ஏற்படுகிறது. எனவே இரும்புச்சத்து அதிகமுள்ள காய் கறி உள்ளிட்ட உணவுப் பொருளை உட்கொள்ளுதல் வேண்டும். போக இச்சையை விரும்புபவர்கள் பொன்னைப் பஸ்பமாக்கி உண்பார்கள். இதனால் நரம்புக் கோளாறு, சிறுநீரகக் கோளாறு போன்றவை ஏற்படும். இதனைக் குறிக்க, போறவன் பொன்னைத் தின்பான் என்றார்கள்.

**8. 'ஆயிரம் வேரைக் கொன்றவன் அரை வைத்தியன்'**

இதனைக் கிராமப்புற மக்கள் ஆயிரம் பேரைக் கொன்றவன் அரை வைத்தியன் என்று வழங்குகின்றனர். ஆயிரம் வேரைக் கொன்றவன் அரை வைத்தியன் என்பதுவே இதன் பொருளாகும். நாட்டுப்புற மருந்துகளில் மூலிகைச் செடிகளும் அவற்றின் வேர்கள் மற்றும் பட்டைகளும் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றுள் குறைந்தது ஆயிரம் வேர்களின் பயன்பாடு பற்றி ஒருவன் தெரிந்திருந்தால் மட்டுமே அவன் அரை வைத்தியன் என்ற நிலையைப் பெற இயலும் என்பதை இப்பழமொழி உணர்த்துகிறது.

**9. 'அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்டாளாம்'**

அரச மரத்தைச் சுற்றிவந்தால் குழந்தைப் பாக்கியம் ஏற்படும் என்று யாரோ கூறக்கேட்ட ஒருத்தி, கணவனுடன் சேராமல், அரசமரத்தை மட்டுமே சுற்றி வந்தாளாம். அரசமரமும், வேம்பும் இணைந்த மரத்தினைச் சுற்றிவர காற்றானது கருப்பையில் உள்ள நச்சுக் கிருமிகளை அழிக்கும் தன்மை வாய்ந்தது என்பதை அறிந்தே நம் முன்னோர்கள் பிள்ளையார் சிலையை இந்த மரத்தின் கீழ் வைத்தனர். குழந்தைப் பாக்கியமற்ற பெண்கள் கும்பிடுவதற்கு இதுவே முக்கிய காரணம் ஆகும்.

**10. 'ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி'**

ஆலும் என்பது ஆலமரத்தின் விழுதினையும், வேலமரம் என்பது வேப்ப மரத்தின் குச்சியையும், நாலும் என்பது நாலடியாரையும் இரண்டு என்பது திருக்குறளையும் குறிக்கும். இது பொதுமக்கள் அனைவராலும் சாதாரணமாகப் பயன்படுத்தப்படும் பழமொழியாகும். ஆலமரத்தின் விழுதினையும், கருவேல மரத்தின் மரக்குச்சிகளையும் நன்கு மென்று பல்விளக்க, பல் நன்கு பளபளப்புடனும், பல் ஈறுகள் நல்ல பலத்துடனும் காணப்படும் என்னும் செய்தி இப்பழமொழியில் விளக்கம் பெறுகிறது.

**11. 'பத்து மிளகு இருந்தால் பகைவன் வீட்டிலும் உண்ணலாம்'**

மருத்துவக் குணம் கொண்ட மிளகு நம் உணவில் பயன்படுத்தப்படும் பொருள்களுள் ஒன்றாகும். இந்த மிளகு நஞ்சு நீக்கும் தன்மையுடையது. பகைவர்களின் வீட்டில் உண்ணும் உணவில் விஷம் கலந்திருந்தாலும், பாம்பின் விஷம் தாக்கியவர்களுக்கு விஷத்தின் தன்மையைக் கண்டறிவதற்கும் மிளகு பயன்படுகிறது. பாம்பால் கடியுண்டவருக்கு மிளகின் எரிப்புச் சுவை தெரியாவிட்டால் உடம்பில் விஷம் தாக்கி விட்டதாகக் கூறுகின்றனர்.

**12. 'விருந்தும் மருந்தும் மூன்று நாள்'**

சொந்தக்காரர்கள் வீட்டிற்கு விருந்துக்குச் சென்றால் மூன்று நாள் மட்டுமே இருக்க வேண்டும். நீண்ட நாட்கள் இருப்பின் பகையுண்டாகும். மருத்துவரிடம் மருந்து உட்கொள்ளும்போது, ஒரு மருந்தின் ஆற்றல் மூன்று நாட்களுக்குள்ளாக தெரிந்துவிடும். இல்லையேல் மருந்தை மாற்ற வேண்டும் என்கிறது இப்பழமொழி.

**13. 'ஆவாரைப் பூத்திருக்கச் சாவோரைக் கண்டதுண்டோ'**

ஆவாரைப் பூ இதழ்களைச் சேகரித்து, நிழலில் உலர்த்திக் காய வைத்து, இடித்து வைத்துக் கொண்டு தேநீர், கோப் பித்தூள் இவைகளுக்குப் பதிலாக உபயோகித்து வர உடல் வறட்சி, உடல் நாற்றம், நீரிழிவு நோய், தோல் நோய் ஆகிய நோய்களைக் குணமாக்குவதால், ஆவாரைப் பூவின் மகத்துவத்தைக் குறிக்க வந்த பழமொழியாகும்.

இதுபோன்று ஏராளமான பழமொழிகள் மருத்துவக் குறிப்புகளை உணர்த்தும் நோக்கில் சொல்லப்பட்டுள்ளன. உலகில் வேறெந்த இனத்தாரும் இப்படிச் சொன்னதில்லை என்பது தமிழர்களுக்கு பெருமையான விடயம்.

**- பாலமுருகன் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பண்பாட்டில் வரலாற்றுச் சித்த மருத்துவம்

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன் M.D (Siddha) India


தமிழ் மண்ணில் பல கலைகள் பிறந்து, வளர்ந்து, செழித்து வேரூன்றியுள்ளன. இவற்றில் உலகளவு பாராட்டப்படும் கலைகள் உண்டு. அவற்றில் ஒன்று தமிழனின் மருத்துவக் கலையாகும். இது வாழையடி வாழையெனப் பெற்ற பயிற்சியின் விளைவாக அமைந்த அனுபவக் கலையாகும். அந்நிய ஆட்சி மாற்றம் அதன் பண்பாட்டுத் தாக்கங்களால் இக்கலைப் பயிற்சியிலும், அமைந்துள்ளன. இவை மிகினும் குறையினும் உடலில் நோய் ஏற்படுகின்றது. நாடிப் பரிசோதனை மூலம் நோய்களை அறிந்து மருத்துவம் செய்தல் சித்த வைத்திய முறையின் சிறப்பு எனக் கருதப்படுகிறது. சித்த மருத்துவத்திலே கர்ம நோய்கள் தவிர்ந்த தீர்க்க முடியாத நோய் என்று ஒன்றில்லை என்பதும் காய கற்பகமாகிய சிரஞ்சீவி மருத்துவம் சித்த மருத்துவத்தில் உண்டு என்பதும்



பதஞ்சலி
இராமேஸ்வரம்



அகஸ்தியர்
அனந்தசயனம்



மச்சமுனி
திருப்பரங்குன்றம்

தொடர்ச்சியிலும் தொய்வு ஏற்பட்டு விட்டது. எனினும் முன்னோர்கள் விட்டுச் சென்றுள்ள மருத்துவச் சுவடிகள் அத்தொய்வைச் சரி செய்யும் வாய்ப்பை நல்கியுள்ளன. சித்த மருத்துவமான தமிழ் மருத்துவத்தின் காலம் யாது? தமிழ் மருத்துவம் என்பது ஏதோ ஒரு சித்தரால் எழுதப்பட்டது அல்ல; பல சித்தர்கள் கூற எழுதியதும் அல்ல; ஆயிரக்க ணக்கான ஆண்டுகளாகத் தமிழர் வாழ்ந்த வாழ்வின் பல னால் உருவானதே தமிழ் மருத்துவம்.

தமிழ் நாட்டின் இயற்கைச் சூழலிலே தமிழர் பண்பாட்டில் வளர்ந்த மருத்துவக் கலையே 'சித்த மருத்துவம்'. அதனாலேயே இதற்குத் 'தமிழ் மருத்துவம்' என்ற பெயரும் வழங்குவதாயிற்று. வாதம், பித்தம், கபம் என்ற முக்குற்றங்களின் அடிப்படையிலே தோன்றும் நோய்களுக்கு பரிகாரம் செய்யும் முறையே கீழைத்தேய மருத்துவமாகும். இம் மூன்றும் மனித உடலில் முறையே ஒன்று - அரை - கால் என்ற அடிப்படையில் இதன் தனிச் சிறப்புக்கள். சித்தர்கள் அட்டமாசித்திகள் கைவரப் பெற்று, பல நூற்றாண்டு காலம் வாழ்ந்து இம்மருத் துவக் கலையை வளர்த்து வந்தனர் என்பதால் இதன் பழைமையும் உணரப்படுகின்றது. உலக மொழிகளில் பழைமை வாய்ந்தனவும் சிறந்தனவுமாகிய இலக்கியங்க ளில் தமிழ் இலக்கியமும் ஒன்றாகத் திகழ்கிறது. எனவே தமிழ் இலக்கியம் எத்தகு பழைமை வாய்ந்ததுவோ அதனி லும் பன்மடங்கு பழைமை வாய்ந்த ஒரு கலையாகச் சித்த மருத்துவக்கலை தமிழ் நாட்டில் வளர்ந்து வந்திருக்கிறது.

மனிதனின் மொழிப் புலமையின் விளைவே இலக்கியம். அதுபோன்று மனித இனத்தின் பகுத்தறிவிற்கு இயற்கை அளித்த பரிசே மருத்துவம். விலங்குகளும் தம் பிணி போக்க இயற்கை மூலிகைகளை நாடுதல் இயல்பு. இயற்கைச் சூழலில் வாழ்ந்த மனிதன் தன் பகுத்தறிவின் விளைவால் இயற்கையைப் பயன்படுத்தி மருத்துவங்களையும் அறியலானான். இந்திய மருத்துவக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கலைகள் இறைவனிடமிருந்து பெறப்பட்டன என்பதையே ஆயுள் வேதமும், சித்த மருத்துவமும் கூறுகின்றன. இயற்கையே இறைவன் என்பதைச் சமய தத்துவங்கள் ஏற்க மறுப்பதில்லை. பண்டைத் தமிழ் இலக்கியங்கள் இயற்கையைப் பெரிதும் பாடின. அதனால் அவற்றை 'இயற்கை இலக்கியம்' என்றும் வழங்குவர். எனவே தமிழ் மக்களுக்கு அளித்த அருஞ் செல்வங்களுள் இலக்கியமும் சித்த மருத்துவமும் மிகப் பழைமை வாய்ந்தனவாகும். உலகிலேயே மூத்தக் குடி என்று சொல்லுமளவிற்குக் கற்காலத் தமிழக வரலாறு ஐந்து லட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. இக்காலத்திற்கு முன்னரே பேச்சு மொழியை அறியாத நிலையில் சீழ்க்கை ஒலி, பறையறைவித்தல், புகை எழுப்புதல், தீயம்பு வானத்தில் எறிதல் ஆகியவற்றைக் கொண்டு ஓரிடத்தில் நடப்பதைச் சுற்று வட்டாரத்து மக்களுக்குத் தெரிவிக்கும் பழக்கம் ஏற்பட்டது. பேச்சு மொழி வளர வளர வாய் வழியாக விரிவாகச் செய்திகளை பரப்ப முடிந்தது.

சங்க காலத்தை இயற்கை நெறிக் காலம் எனக் கூறுவது மரபு. இக்கால மக்கள் தம் அக வாழ்வையும் புற வாழ்வையும் இயற்கையோடு இணைவாகவே அமைத்துக் கொண்டனர் என்பதே சங்க இலக்கியச் செய்தி. இயற்கை நெறிப்பட்ட மருத்துவக் கோட்பாடுகள், மருத்துவ முறைகள் ஆகியவற்றின் மீதான நம்பிக்கைகள், மருத்துவ அறிவு ஆகிய பல்வேறு விடயங்கள் சங்க இலக்கியங்களினூடாகப் பெறப்படுகின்றன.

### கருத்துப் பதிவு


திண்ணைப் பள்ளிக் கூடத்திலும் குரு குல முறையிலும் ஆசிரியர்களிடத்திலுமாகக் கல்வி பயின்றவர்கள் பல நூல்களையும் எழுத்து வடிவில் பதிவு செய்து வைக்கும் பணியில் ஈடுபட்டபோது அவர்களுக்கு எழுது பொருளும், எழுதப்படும் பொருளும், எழுது கருவிகளும் தேவைப்பட்டன. சுருக்கிய கருத்துக்களையும் செய்திகளையும் களிமண், பலகை, கல், ஓடு, இலை, பூர்ஜப் பட்டை, மரப்பலகை, துணி, மூங்கில் பத்தை, உலோகத்தகடு போன்றவற்றில் எழுதி வைத்தார்கள். இவற்றைப் போலவே தமிழ் மொழியில் இலக்கியம், இலக்கணம், நிகண்டு முதலியவை தொன்மைக் காலத்தில் பனையோலைகளில் எழுதப்பட்டன. ஆகவேதான் அறிவியலுடன் வரலாற்று உண்மைகளையும் இவ்வோலைச் சுவடிகளிலிருந்தே அறிந்து கொள்ள வேண்டியதாய் உள்ளது.

தமிழ் நாட்டை மூவேந்தர்களும் பிறரும் ஆட்சி புரிந்து வந்த போது கோவிற் மதிற் சுவர்களிலும், செப்புத் தகடுகளாலும் தமது கட்டளைகளையும், ஆட்சி முறைமைகளையும் தாம் பெற்ற வெற்றி பற்றிய வரலாறுகளையும் பொறித்து வைத்தனர். பொது மக்கள் தமது எண்ணத்தை ஓலைச் சுவடிகளில் எழுத்தாணி கொண்டு எழுதி வந்தனர். பனை ஓலைச் சுவடிகளில் கூரான இரும்பு எழுத்தாணி கொண்டு எழுதியதால் ஓலை கிழியாமல் இருக்க வளைவுகள், சுழிவுகளும் ஏற்பட்டன. ஆகவே நூல்களை எழுதி முடிக்க அதிக காலச் செலவும், உடலுழைப்பும், பொருட் செலவும் துன்பம் தருவனவாக இருந்தன. செய்திகளை எல்லோரும் அறிந்து கொள்ளும் வகையில் பொது இடங்களில் அதிலும் குறிப்பாகக் கோயில்களில் கல்வெட்டு மூலம் அன்றைய மருத்துவ முறைகளையும் அறிய முடிகிறது.










### கல்வெட்டில் மருத்துவம்

திருக்கூடல் கல்வெட்டு மூலம் (கி.பி. 1062 - 1067) வீரசோழன் ஆதூரகர் சாலையில் மருத்துவப் பருவப் பள்ளியில் மருத்துவர், செவிலியர், அறுவைச் சிகிச்சை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்பவர் மருத்துவம் பார்த்த செய்திகளுடன் அச்சாலையில் மருத்துவம் செய்யுமிடமும் ஓராண்டுக்கு வேண்டிய மருந்தும் இருந்ததாக அறிய முடிகிறது. இது போலவே கி.பி. 1015 இல் மக்களுக்காக 'சுந்தர சோழ விண்ணாசூர ஆதூரக சாலை' என்ற மருத்துவமனை பணியாற்றியமையும் அறிய முடிகிறது. கல்வெட்டைத் தொடர்ந்து சற்று விரிவாக மருத்துவச் செய்திகளை நிகண்டுகள் மூலம் அறிய முடிகிறது.

### இலக்கியங்களில் மருத்துவம்

சங்க காலத் தமிழ் இலக்கியங்களில் தமிழகத்தில் தனி மருத்துவ முறை ஒன்று வழக்கத்தில் இருந்தமைக்கான சான்றுகளை ஆங்காங்கே காணலாம். மருத்துவர் நல்ல கொள்கைகளையும், தூய ஒழுக்கத்தையும் உடையவர்களாயிருந்தார்களென்பதை விளங்கி கொள்கை 'ஆயுள்வேந்தர் ' என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.

இது மருந்தென்ன நல்லார் இழுது சேர் கவளம் வைத்து''

''.....நெய் கிழி பயிலச் சேர்த்தி

நுதி மயிர்த் துகில்குப் பாயம் புகு''

(சிந்தாமணி 819)

என்ற பாக்களால் அறியலாம். புண்ணை ஆற்ற இசையும் பயன்பட்டன என்பதை,

''மருப்பு யாழொடு பல்லுயங் கறங்க

இசைமணி பொறிந்து காஞ்சி பா''

(புறம் 281) என்ற அடிகள் கூறுகின்றன.

புண்ணிற்குப் கஞ்சிட்டுக் கட்டும் பழக்கம் உள்ளதென்பதை,

''கதவாய் போகிய துதிவாய் எஃகமொடு


பஞ்சியும் களையாப் பண்ணர்''

(புறம் 353) என்பர்.

அறுவைச் சிகிச்சையில் தமிழர்கள் மேம்பட்டிருந்ததை



**கொங்கணர்**
திருப்பதி



**பாம்பாட்டி சித்தர்**
திருஞானம் துவாரகை



**கருவூரார்**
கருவூர், தஞ்சை

''பசிப்பிணி மருத்தவனில்லம்

அணித்தோ சேய்ந்தோ கூறுமி னெமக்கே''

(புற - 173)

''விறலிழை நெகிழ்ந்த வீவு அரும் கடும் நோய்''

(குறிஞ்சிப்பாட்டு 3)

உடலில் காயப்பட்டவருக்கு நெய் கிழி வைத்தல், எண்ணெய்ப்பத்தரில் கிடத்தல், ஒடிந்த எலும்புகளை அறுத்தெடுத்தல், புண்களுக்கு மருந்து வைத்தல், எலி மயிர்க் கம்பளத்தால் போர்த்தல் முதலியன கையாளப்பட்டன என்பதை,

''நெய்கிழி வைக்கப்பட்டார் நெய்ப்பத்தற் கிடத்தப்பட்டார்

புக்குழி எஃகம் நாடி இரும்பினால் போழப்பட்டார் ''

(சிந்தாமணி 818)

உடல் முற்றும் புண்பட்டவர்கட்கு,

''முது மரப்பொந்து போல, முழுமையும் புண்களுற்றார்க்கு

கொங்கு நாவிதச்சி வயிற்றை அறுத்துத் தாயையும் சேயையும் காப்பாற்றிய செய்தியைக் கொங்கு நாட்டுச் சதகம் வாயிலாகவும், அகஸ்தியர் நயன விதி 500 இல் 26 வகை அறுவைச் சிகிச்சைக்கான கருவிகள் சுட்டப்பட்டுள்ளதன் மூலமும் அறிய முடிகிறது.

### நிகண்டுகள்

திவாகர நிகண்டு (7 ஆம் நூ.), பிங்கல நிகண்டு (10 ஆம் நூ.), நாமதீப நிகண்டு ஆகியவற்றுள் மருத்துவம் தொடர்பான பல செய்திகள் காணக்கிடைக்கின்றன. திவாகர நிகண்டில் அக்குள், இடை, மார்பு, வயிறு, முலை முதலிய உடற் கூறுபாடு பற்றிய பெயர்ச் சொற்களுடன் விலங்கினப் பெயர் தொகுதி நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது என்பது நம் முன்னோர்களின் விலங்கியல் மருத்துவத்தை எடுத்தியம்புவதைக் காட்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூ.1,000,000/- ஆயுட் காப்புறுதி பெறுவதற்கு எவ்வளவு செலுத்த நீங்கள் விரும்புகிறீர்கள்?

- ☑ ஆண்டிற்கு ரூ.2000/-?
  (நாள் ஒன்றிற்கு ரூ.6/- ஐ விட குறைவு)
- ☑ ஆண்டிற்கு ரூ.3000/-?
  (நாள் ஒன்றிற்கு ரூ.9/- ஐ விட குறைவு)
- ☑ ஆண்டிற்கு ரூ.6000/-?
  (நாள் ஒன்றிற்கு ரூ.17/- ஐ விட குறைவு)

எமது **Pure Life Policy** மூலம்
**உங்களால் முடியும்**




நீங்கள் அறிந்துகொள்ள வேண்டிய தருணம் இதுவே

The Hands that Protect
**LIC**
Life Insurance Corporation (Lanka) Ltd.

Call/Text: 0773 675 482
உடனடி அழைப்பு: 0112 552 277
தொலைபேசி: 0112 553 596 – 8
தொலைநகல்: 0112 590 495
இணையத்தளம்: www.liclanka.com

உங்களுக்கு மிகவும் வசதியான விலையில் உங்கள் அன்புக்குரியவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# நைன் வெல்ஸ் கருக்கட்டல் வளநிலையம்

கர்ப்பகாலத்திலும் பிரசவத்திற்கு பின்னரும் தாயின் ஆரோக்கியத்தை பேணுவதிலும் கருக்கட்டலுக்கான சாத்தியக் கூறுகளையும் (Sub Fertility) அக்கருக்கட்டலுக்கான(IVF) சாத்தியக் கூறுகளையும் வழங்குவதன் மூலமும் தொடர்ச்சியாக இனப்பெருக்க காலத்தின் பின்னரும் எமது தொழில்நுட்பத்திறன்களி-னூடாக எல்லா வயதுடைய பெண்மணி-களையும் பராமரிக்க நைன் வெல்ஸ் ஆகிய நாங்கள் பொறுப்பாகவுள்ளோம்.





தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
4 520 999
நைன் வெல்ஸ் கெயார் தாய் சேய் வைத்தியசாலை
55/1, கிரிமண்டல மாவத்தை, நாரஹேன்பிடிய, கொழும்பு 05.
WWW.NineWellsCare.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed and published by Express Newspapers (Ceylon)(Pvt)Ltd,at No.185,Grandpass road,Colombo -14, Sri Lanka.